
கல்கி
KALKI 10-2-1957
4 அண



கிராமவாசிகளின் ஒரு குடும்பத்தில் முதல் முதலாக ஒரு மண்ணெண்ணெய் ஸ்டவ் வாங்கி உபயோகிக்க ஆரம்பித்து. அது முதல் அடுப்புக்காக உபயோகித்து வந்த வராட்டிகளை நிறுத்தி சாணத்தை வயல்களுக்கு எருவாக உபயோகிக்கத் தொடங்கலாயினர். இச்செயல் அவர்களின் முன்னேற்றத்திற்கானதே. அதுபோல் ஓர் உற்பத்தியாளர் முன்னைவிட அநேகம் பேர்களுக்கு உபயோகமான ஓர் சாமானை உற்பத்தி செய்து அளிப்பதும் முன்னேற்றத்திற்கானதே. எந்த நாட்டிலும் தொழில் முன்னேற்றத்திற்கான பெரும் பகுதியா யிருப்பது அந்நாட்டிற்குள்ளேயே புதிய விற்பனை ஸ்தலங்களை ஏற்படுத்துவதுதான். இத்தகைய புதிய விற்பனை ஸ்தலங்களை ஏற்படுத்த உதவுவதுதான் சிறந்த விளம்பரம்.

முதலாவதாக விளம்பரத்தின் பயனாக பொருள்களின் தேவை அதிகரிக்கிறது. தேவை அதிகரிப்பதனால் உற்பத்தியின் செலவு சிக்கனம் செய்யப்படுகிறது. பொருள்கள், சேவைகள் இவைகளை அநேகம் பேர்கள் வாங்கக்கூடிய அளவில் இத்தகைய வழி உதவுகிறது. அதேபோல் விளம்பரத்தின் பயனாக ஏற்படக்கூடிய அதிக தேவை உற்பத்தியாளர்களை பொருள்களை விரிவான முறையில் வினியோகிக்க வேண்டிய ஏற்பாடுகளைத் தேடச் செய்கிறது. சிறந்த விளம்பரம், புதியதோர், பொருளுக்கு விற்பனையைத் தேடித் தருகின்றது. சேவை எப்படிப்பட்டதென்று எடுத்துக் கூறுவதோடு, அது எத்தகைய சேவை....என்ன அளிக்கப்படுகிறது...எப்படிப் பெறக்கூடும்...அதன் செலவு எவ்வளவாகும் ஆகிய விவரங்களெல்லாம் கிடைக்கச் செய்கிறது.

சிறந்த விளம்பரம் பயனளிக்கிறது.

மலர் 16 இதழ் 28

கல்கி

துன்முகி ௵ தை 28

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 16 | இதழ் 28
தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்
தன்முகிலும் | தைமீ 28உ

வாக்காளர்களுக்கு ஒரு வார்த்தை

பெரிய வைத்தியரை அழைத்தால் வியாதி அதிகமாகிவிட்டது என்பதற்கு அடையாளம். நம்முடைய ராஜ்யத்தில் காங்கிரஸின் நிலைமை அந்த வகையிலிருக்கிறது. ஜவாஹர்லால் நேரு அவர்கள் அழைக்கப்பட்டு வந்தார். வந்து சென்னையில் மிக நீண்ட தேர்தல் பிரசங்கம் செய்தார்.

நேரு அவர்கள் தம்முடைய பிரசங்கத்தில் திராவிடக் கழகத்தைக் கண்டித்தார். "இல்லை இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டியுங்கள். திராவிடக் கழகம் வேறே. அது நம்முடைய நேசக் கழகம்" என்று பின்னால் மேடையில் இருந்தவர்கள் சொல்லிப் பார்த்தார்கள். குழப்பத்தில் அந்த வேறுபாடுகள் இந்தியத் தலைவருக்கு விளங்கவில்லை. எப்படி விளங்கும்? சென்னை ராஜ்ய ரகசியங்கள் வெளி ராஜ்யங்களிலுள்ளவர்களுக்கு விளங்காது.

எல்லாரும் காங்கிரஸுக்கே வோட்டுப் போடுங்கள். நல்லவர்களாயினும் சரி, அயோக்கியர்களாயினும் சரி, கூர்ந்து பார்க்க வேண்டாம் என்று தொனிக்கும்படி நேருஜி பேசினார். 'நான் சிப்பாய், கட்சித் தலைவர்தான் தளபதி' என்று தம்முடைய அடக்கத்தைச் சிறப்பித்துக் காட்டினார். கண்மூடிச் சிப்பாய் முறையில் தவறில்லை. ஆனால் விஷயம் மிகத் தவறு. தளபதியும் சிப்பாயும் சரியோ பிசகோ உத்தரவுக்கு மீறி நடக்கலாகாது என்பதெல்லாம் யுத்தங்களுக்கு ஏற்ற முறை. பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் போர் நடத்தியபொழுது இந்த முறையைத்தான் மக்கள் ஒப்புக்கொண்டார்கள். ஒப்புக்கொண்டு, யுத்தம் செய்து வெற்றி பெற்றோம்.

இந்த யுத்த முறை சுதந்திர ஆட்சியின் கீழ் நடைபெறும் தேர்தல்களுக்கும் அந்தத் தேர்தல்களில் வோட்டுகள் தரும் உரிமையை அடைந்த வாக்காளர்களுக்கும் பொருந்தவே பொருந்தாது. அயோக்கியர் என்று கருதினால் வோட்டுப் போடலாகாது. தகாதவர் என்று கருதினால் அத்தகையோருக்கு தேச நலத்தை வேண்டுபவன் வோட்டுப் போடலாகாது. தேர்தல் ஒரு யுத்தமல்ல; சுதந்திரம் பெற்ற மக்களின்மேல் எண்ணற்ற வழியில் அதிகாரம் செலுத்தி ஆட்சி புரிவதற்காகச் சட்டசபையைத் தேர்ந்தெடுப்பதற்கு நடைபெறும் ஏற்பாடு. ஆகவே தேர்தலை ஒரு யுத்தமாகக் கருதி அயோக்கியர்களுக்கு வோட்டுப்போடச் சொல்லுவது முற்றிலும் குற்றமாகும். நேரு அவர்கள் அப்படிச் சொல்லவில்லை.

யார் யோக்கியர், யார் அயோக்கியர் என்று தீர்மானிக்கும் உரிமையை ஸ்ரீமான் யு. என். தேபர் அவர்களுக்காவது, திரு காமராஜ் அவர்களுக்காவது வாக்காளர்கள் விற்றுவிடவில்லை. அயோக்கியர் என்று ஊருக்குத் தெரிந்தால் அந்த ஆசாமிக்கு யாரும் வோட்டுப் போடலாகாது.

நம்முடைய ராஜ்யத்தில் காங்கிரஸுக்கு எதிராகப் போட்டி போடும் மற்றக் கட்சிகளைப் பற்றி நாம கவலைப்பட வேண்டியதில்லை. அந்தக் கட்சிகளையெல்லாம் நேருஜி கண்டித்தார். அதற்கு நாம் ஆட்சேபிக்கவில்லை. காங்கிரஸிலுள்ள ஊழல்களைப் பற்றித்தான் நமக்குக் கவலை. சீர்திருத்தம் மிகவும் அவசியம். அயோக்கியர்கள் காங்கிரஸ் நியமனம் பெற்றுத் தேர்தலில் வெற்றியும் பெற்றுவிட்டால் சீர்திருத்தத்துக்கு இடமே இல்லாமற் போய்விடும்.

உள்ளூர்த் தலைவர்களின் முடிவுகளை வெகுதூரத்திலிருந்து கொண்டு புறக்கணிக்க தேபர் முதலியவர்களுக்குத் தைரியமில்லை. விஷயம் அறிந்த வாக்காளர்கள்தான் கவனிக்க வேண்டும்.

தூரத்திலிருந்து நடத்தும் ஒரு வியாபாரத்தில் உள்ளூர்க் கண்காணியாரின் பேச்சை முதலாளி தள்ள முடியாது. ஆனால் கண்காணியாரின் வார்த்தையை நம்பி

'நல்ல நெய்' என்று முதலாளி சொன்னதினால் வாக்காளர்கள் கலப்படத்தை வாங்கி உடம்பைக் கெடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. வியாபாரம் வரவரக் குறைவதைக் கண்டால்தான் முதலாளிக்குப் புத்திவரும்.

படிப்பினை பெற்றால்தான் கலப்படச் சரக்கு வேண்டாம் என்று முதலாளியே சொல்லுவார். கலப்படத்தினால் நஷ்டமே யொழிய லாபமில்லை என்பதை அறிந்து வியாபாரத்தில் சீர்திருத்தம் செய்வார். தமிழ்நாட்டில் தற்போது காங்கிரஸானது கலப்பட வியாபாரமாகி விட்டதை யாரேனும் மறுப்பார்களா? சாட்சி வேண்டுமானால் திரு ஈ.வே.ரா. அவர்களே தினமும் சொல்லுகிறார்.

தெய்வத்துக்காகக் கோயில். ஆனால் தெய்வத்துக்கும் மேலாகி விட்டது கோவில். கோவிலுக்கும் மேலாகி விட்டார் அர்ச்சகர். அர்ச்சகருக்காகப் பாடுபடுவதா? தெய்வத்தைக் கும்பிடுவதா என்பது கேள்வி!

தம்முடைய பதவியைப் பற்றியே நினைத்து, 'இவரை நம்பலாமா? அவரை நம்பலாமா?' என்கிற முறையில் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் நியமனங்களை முடிவு செய்திருக்கிறார் என்பது எங்கும் நடைபெறும் பேச்சு. நியமிக்கப்படும் நபர் தலைவருக்குத் துணையாக இருப்பாரா என்பதே கேள்வி! காங்கிரஸைப் பற்றிக் கேள்வி இல்லை. இதைத்தான் தெய்வத்துக்கு மேலே கோவில்; கோவிலுக்கும் மேலே அர்ச்சகர் என்று சொன்னோம்.

காங்கிரஸ் தனது பழைய ஆத்ம பலத்தைப் பெற வேண்டும் என்பதே மக்களின் கோரிக்கையாக இருக்க வேண்டும். அதற்கு எப்படிப்பட்ட நபர்களைத் தேர்ந்தெடுத்தால் காந்தி மகான் காலத்தில் காங்கிரஸ் பெற்றிருந்த ஆத்ம பலத்தை மீண்டும் பெறும் என்பதை யோசித்து முடிவு செய்ய வேண்டும். காங்கிரஸின் கொள்கைகளைப் புறக்கணித்து அதைக் கலப்படம் செய்துவிட்ட இன்றையத் தலைவரைப் பற்றி மக்கள் கவலைப்பட வேண்டியதில்லை. அவர் நிறுத்தி வைத்திருக்கும் கலப்படக் காங்கிரஸ் அபேட்சகர்களைத்தான் தேர்ந்தெடுக்கவேண்டும் என்ற அவசியமில்லை.

காங்கிரஸ் கொள்கைகளுக்குச் சம்பந்தப்படாத சாதிப் பற்றையும், சாதி வெறுப்பையும், திராவிடம் ஆரியம் என்கிற துவேஷமனப்பான்மையையும், காங்கிரஸுக்குள் புகுத்தி, 'ஆள் சேர்த்தேன்! காங்கிரஸைப் பலப்படுத்தினேன்!' என்று தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைமைப் பதவியிலுள்ளவர்கள் பெருமை அடித்துக்கொள்வதும், பிறர் அதைக் கேட்பதும் ஏமாற்றத்தில் முடியும். உண்மையில் இது காங்கிரஸுக்கு பலவீனமே யாகும். தமிழ் நாட்டில் காங்கிரஸுக்கும் திராவிடக் கழகத்துக்கும் வித்தியாசமே இல்லாமற் போகும். இப்பொழுதே அந்த நிலைமை ஏற்பட்டு விட்டது என்று பலர் எண்ணுகிறார்கள் சுயநலத்தைக் கருதிச் சில பிராம்மணர்கள் இந்த அநியாயத்தில் கலந்து கொண்டிருப்பதைப் பார்த்து: பொதுமக்கள் ஏமாந்து போக மாட்டார்கள். தியாகம் பல புரிந்து சுதந்திரத்தைப் பெற்ற மக்கள் ஏமாந்து போக மாட்டார்கள். நாடெல்லாம் தேசபக்தர்கள் தியாகம் செய்து கொண்டும் சிறை சென்றுகொண்டு மிருந்த காலத்தில் காங்கிரஸை எதிர்த்து நின்றவர்கள் இப்போது சென்னை காங்கிரஸ் தலைமைப் பதவிக்கு மிக நெருங்கி நின்று தேர்தல் வேலை செய்து வருகிறார்கள்.

பணத்துக்கு அவசியம் உண்டு. ஆனால் அதற்காக விஷத்தைக் காங்கிரஸில் கலக்கலாகாது! பணம் தவிர வேறு என்ன காரணம் இருக்க முடியும் சில நியமனங்களுக்கு? பெயர் சொல்லி எடுத்துக் காட்ட விரும்பவில்லை! குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தால் அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

தமிழ் நாட்டு மக்களுக்குக் காங்கிரஸ் வேண்டும். ஆனால் காங்கிரஸைக் கொல்லும் விஷம் வேண்டாம்.

வண்டியை இழுப்பது மாடுகள். அந்த மாடுகளை ஓட்டுபவன் வண்டியில் உட்கார்ந்து கோல் பிடித்து அதிகாரம் வகிப்பது அவசியம். ஆனால் தற்போது நம்முடைய காங்கிரஸ் வண்டியானது மாட்டுவண்டியுமல்ல, அர்ஜுனன் தேருமல்ல. திருவிழாவில் மக்கள் சேர்ந்து இழுக்கும் அலங்கரித்த தேரைப் போன்றது. அர்ச்சகர் தேர்த் தட்டின்மீது உட்கார்ந்து கொண்டு அதிகாரம் செலுத்துகிறார். தேர்தல் தேருக்கும் போர்த் தேருக்கும் இதுவே வித்தியாசம்.

விஷப் பரீட்சையைத் தடுக்குமா?

யார் என்ன நல்ல புத்தி சொன்னாலும், எவ்வளவு ஹிதோபதேசம் செய்தாலும் அரக்கர்கள் தங்கள் பிடிவாதத்தைக் கைவிட மாட்டார்கள்; தங்களுடைய அநியாயமான அதர்ம காரியங்களை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். ராக்ஷஸ பலம் படைத்த இராவணன் காலத்திலிருந்து அப்படித்தான் நடந்து வருகிறது. ராக்ஷசத்தனமான ஆயுத பலம் வாய்ந்த வல்லரசுகளும் இன்று தாங்கள் கொண்டதே கோலம் என்று நடந்து வருகின்றன. அணுகுண்டு, ஜலஜ குண்டுகளால் மானிட வர்க்கத்துக்கு ஏற்படக்கூடிய பயங்கரமான ஆபத்தை ராஜாஜியும் மற்றும் சில உலகப் பிரமுகர்களும் சர்வதேச விஞ்ஞானிகளும் தாய்மார்களும் தெளிவாக எடுத்துக் கூறி எச்சரிக்கை செய்தார்கள். இதுவரையில் செய்த பரிசோதனைகளே போதும் என்று கேட்டுக் கொண்டார்கள். மேற்படி கொடிய குண்டுகளைப் பரிசோதனை செய்வதால் காற்று, தண்ணீர், உணவுப் பொருள்கள் விஷமாகி விடுகின்றன என்பது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டிருப்பதை எடுத்துக் காட்டி வேண்டிக் கொண்டார்கள்.

அப்படியிருந்தும் வல்லரசுகள் தங்களுடைய கொடூரமான பரிசோதனைகளை நிறுத்த விரும்பவில்லை. பசிபிக் மகாசமுத்திரத்தில் உள்ள கிறிஸ்துமஸ் தீவுப் பிரதேசத்தில் பிரிட்டன் தான் உற்பத்தி செய்த ராட்சத குண்டுகளைப் பரிசோதனை செய்யப் போகிறதாம்.


"கீழே இறங்குங்கள்!
எல்லோருமாகத் தேரை இழுப்போம்!"

இந்தப் பரிசோதனையை நிறுத்தி வைக்கும்படி ஜப்பான் சர்க்கார் பிரிட்டிஷ் சர்க்காரைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷாரின் பரிசோதனை முயற்சியைக் கண்டித்து ஜப்பான் சர்வகலாசாலையைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் டோக்கியோ தெருக்களில் ஊர்வலம் சென்று தங்கள் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

ராட்சத குண்டுகளைப் பரிசோதனை செய்து பார்க்கும் விஷப் பரீட்சையைப் பற்றி பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தொழிற்கட்சி அங்கத்தினர்கள் கேள்விகள் கேட்கவும் தீர்மானித்திருக்கிறார்கள். தங்களுக்கு எவ்வித சம்பந்தமும் இல்லாத காஷ்மீர் மக்களின் சுய நிர்ணய உரிமையில் தலையிட முற்பட்டிருக்கும் ஐ. நா. சபை, உலக நாடுகள் அனைத்துக்கும் பொதுவான காற்றையும் நீரையும் விஷமாக்கும் வல்லரசுகளின் கொடிய பரிசோதனைகளைத் தடுக்க ஏதாவது தகுந்த நடவடிக்கைகளைக் கைக்கொள்ளுமா?

சிங்களமும் சீனப் பிரதமரும்

இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் துன்பம் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. அவர்களுக்குப் பல ஆண்டுகளாகத் தொல்லை கொடுத்து வரும் பிரஜா உரிமைப் பிரச்னை இன்னும் தீர்ந்தபாடில்லை. இலங்கை சர்க்காரின் நடவடிக்கைகள் காரணமாக அப் பிரச்னையில் நாளுக்கு நாள் சிக்கல்கள் அதிகமாகி வருகின்றன. மொழிப் பிரச்னை வேறு அவர்களுக்கு மனக் கொதிப்பை உண்டாக்கி யிருக்கிறது.

சிங்கள மொழியும் தமிழ் மொழியும் இலங்கையின் இரு கண்கள் போல் சம அந்தஸ்துடன் இருந்து வந்தன. சர்க்காரின் விபரீதமான தீர்மானம் காரணமாகத் தமிழ் மொழிக்கு உரிய ஸ்தானம் அளிக்கப்படவில்லை. தமிழ் மொழி விஷயத்தில் இலங்கை சர்க்காருக்குள்ள அலட்சிய புத்தி புதிய புதிய உருவத்தில் வெளியாகி வருகிறது. மோட்டார்களில் சிங்கள எழுத்துத் தகடுகள் மாத்திரமே பொருத்தப்பட வேண்டும் என்ற சர்க்காரின் உத்தரவு தமிழ் மக்களிடையே ஆத்திரத்தை உண்டு பண்ணி யிருக்கிறது. அதன் விளைவாக, அங்கு சட்ட மறுப்புப் போராட்டமும் நடந்து வருகிறது.

சமீபத்தில் ஒரு பௌத்த பிக்ஷுவும், கிறிஸ்துவப் பாதிரியாரும் உள்ளிட்ட சர்வ சமரச தூதுகோஷ்டி ஒன்று இலங்கைப் பிரதமரைச் சந்தித்து, தமிழுக்கும் சிங்களத்துக்கும் சரிசமமான அந்தஸ்து அளிக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தியது. இதற்குப் பிறகுகூட இலங்கை சர்க்காருக்கு மனமாற்றம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. இலங்கைக்குச் சீனப் பிரதமர் சூ என் லாய் விஜயத்தை முன்னிட்டு அனுப்பிய அழைப்புக் கடிதங்களில் ஆங்கிலமும் சிங்களமும் மாத்திரமே இடம் பெற்றிருந்தன. தமிழ் மொழி இடம் பெறாததால் இலங்கை சமஷ்டிக் கட்சித் தலைவர்களான தமிழ்ப் பிரமுகர்கள் மேற்படி அழைப்புக் கடிதங்களை, அனுப்பியவர்களுக்கே திருப்பி அனுப்பி விட்டார்கள்! இலங்கை சர்க்காரின் பாரபட்சமான மனப் போக்கைக் கண்டிக்கவே தாங்கள் அழைப்புக் கடிதங்களைத் திருப்பி அனுப்பி விட்டதாயும், விருந்தாளியாக வரும் சீனப் பிரதமரை அவமதிக்கும் உத்தேசம் தங்களுக்கு இல்லை என்றும் அவர்கள் தெளிவாக விளக்கியுள்ளனர்.

தமிழ்ப் பெரு மக்களுக்கு உயிர் போன்ற தமிழ் மொழி விஷயத்தில் இலங்கை சர்க்காரின் நேர்மையற்ற போக்கினால் எத்தகைய நெருக்கடி ஏற்படக்கூடும் என்பதற்கு, இலங்கை சுதந்திர தினத்தன்று கொழும்பு நகரில் நிகழ்ந்துள்ள திடுக்கிடும் சம்பவங்களே தகுந்த சான்றாகும். அப்போது ஒரு தமிழர் உயிர்த் தியாகம் செய்யும்படி நேர்ந்ததுடன், பலர் படுகாயம் அடைந்தனர்.

தமிழ் மொழி விஷயத்தில் இலங்கை சர்க்கார் இழைத்துள்ள அநீதி அங்கு தமிழ் பேசும் இருபத்தைந்து லட்சம் மக்களுக்கு மிகுந்த அதிருப்தியையும் அதிர்ச்சியையும் உண்டாக்கி யிருக்கிறது. இருபத்தைந்து லட்சம் மக்கள் மனக் கொதிப்பு அடைந்துள்ள ஒரு சிறிய நாட்டில் அமைதி நிலவுவது சாத்தியமா என்பதை இலங்கை சர்க்கார் எண்ணிப் பார்க்க வேண்டும்.

நாடகப் பேராசிரியருக்குப் பாராட்டு


சமீபத்தில் சென்னை நகராட்சி மன்றம் ஒரு நல்ல காரியம் செய்தது. கலைத் துறையில் முக்கியமாக, நாடகத் துறையில் ஈடுபட்டிருப்பவர்கள் உள்ளம் பெருமிதம் அடையக்கூடிய ஒரு அருமையான காரியம் செய்தது. நாடகப் பேராசிரியர் திரு ப. சம்பந்த முதலியார் அவர்களைப் பாராட்டிக் கௌரவித்தது.

தமிழ் நாட்டில் நாடகக் கலை இன்னும் உயிரோடிருக்கிறது என்றால் அதற்கு முக்கிய காரண புருஷர் திரு சம்பந்த முதலியார். இன்று எண்பத்தைந்து வயது நிரம்பிய நாடகப் பேராசிரியர் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாடகக் கலைக்குப் பல அருப்பணிகள் புரிந்து வந்திருக்கிறார். அந்நிய ஆதிக்கத்தில், 'விடுதலை தவறிக் கெட்டு' நமது கலைகளை, நாமே அறியாதிருந்த காலத்தில், திரு சம்பந்த முதலியார் தமிழ் நாடகக் கலையைத் தம் உயிர் எனப் போற்றி வளர்த்து வந்தார்.

வாழ்க்கைத் துறையில் திரு சம்பந்த முதலியார் அவர்கள் பல பதவிகளில் அமர்ந்து பணியாற்றி யிருக்கிறார். மாஜிஸ்திரேட்டாக இருந்திருக்கிறார். நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்திருக்கிறார். எந்தப் பதவி வகித்தாலும், அது அவரது நாடகக் கலைத் தொண்டின் பூசலைக்கு இடையூறாக நின்றதில்லை. அதற்கு மாறாக அப்பதவிகள் நாடகக் கலைச் சேவைக்கு ஏற்றமாகவே அமைந்து விட்டன! ஆம்! ஒரு நீதிபதி நாடக மேடையில் தோன்றுகிறார்

என்றால் அது அந்த நாளில் எத்தனை உயர்வைத் தேடித் தந்திருக்கும் என்பதை ஊகிக்கலாம். இப்பணியில் தாம் மட்டும் ஈடுபடாமல் தேசபக்தர் சத்தியமூர்த்தி, திரு வி. வி. சீனிவாசய்யங்கார் போன்ற பிரமுகர்களையும் ஆர்வம் கொள்ளச் செய்த பெருமை முதலியார் அவர்களைச் சாரும். இத்தகைய நண்பர்களின் உதவியோடு சுகுணவிலாச சபையைத் தோற்றுவித்து நாடகக் கலைக்கு நல்ல சேவை செய்து வந்தார்.

நாடகப் பேராசிரியர் திரு சம்பந்த முதலியார் எழுதிய "மனோகரன்" என்னும் நாடகத்தையும், "வேதாள உலகம்" என்னும் நாடகத்தையும் எத்தனை பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் நடித்திருக்கிறார்கள்! எத்தனை அமெச்சூர் நடிகர்கள் நடித்திருக்கிறார்கள்!




சென்னை மேயரும் உதவி மேயரும் நாடகப் பேராசிரியருக்குப் பாராட்டுரை அடங்கிய வெள்ளிப் பேழையை அளிக்கிறார்கள்.

இப்படி நாடகத் தமிழுக்கு அரும்பணி புரிந்த திரு முதலியார் அவர்களுக்குச் சென்னை நகராட்சி மன்றம் பாராட்டுரை வழங்கிய போது, திரு முதலியார் நாடகக் கலையின் எதிர்கால வளர்ச்சிக்குச் சில யோசனைகள் கூறினார். சென்னை நகரில் சொற்ப வாடகையில் கிடைக்க நல்ல நாடக அரங்கை அமெச்சூர் நடிகர்களுக்குத் தயாரித்துத் தருவது சென்னை நகராட்சி மன்றத்தின் கடமை என்றார். இது ஒரு நல்ல யோசனை. இந்த யோசனையை நமது நகராட்சி மன்றம் கேட்டுக் கடைப்பிடிக்கும் என்று நம்புகிறோம்.

தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் போட்டி

காங்கிரஸ் ஸ்தாபனத்தின் நீண்ட கால பக்தரும், பல ஆண்டுகளாகக் காந்திஜியின் உயர்ந்த கொள்கைகளை வழுவாது பின்பற்றி வருபவரும், காரைக்குடியில் சட்டசபைத் தொகுதிக்கு அபேட்சகராக நிற்பவருமான திரு சா. கணேசன் தமது நிலைமையை விளக்கிக் கீழ்வருமாறு ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்:



"எல்லாக் கட்சிகளிலும் உள்ள அங்கத்தினர்களும் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே நான் சட்டசபைத் தொகுதிக்குக் காரைக்குடியில் அபேட்சைப் பத்திரம் தாக்கல் செய்திருக்கிறேன். இது இரண்டு நபர்களுக்குள் நடக்கும் போராட்டம் அல்ல. இரண்டு கொள்கைகளுக்கு நடக்கும் போராட்டமாகும். ராஜா சர் முத்தையாச் செட்டியார் காங்கிரஸ் டிக்கெட் பெற்று, காங்கிரஸின் அபேட்சகராகத் தேர்தலில் போட்டியிடுகிறார். அவர் சென்ற முப்பது ஆண்டுகளாக இந்தப் பகுதியில் காங்கிரசை அழிப்பதற்காகத் தமது சக்தியையெல்லாம் உபயோகித்து முயற்சி செய்தவர். அதனால்தான் அவருக்குப் போட்டியாக நிற்க வேண்டியது என்னுடைய அத்தியாவசியமான கடமையாகியிருக்கிறது. இல்லாவிடில், நாட்டுக்குத் துரோகம் செய்ததாகும் அல்லவா?

"இது, தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் நடக்கும் போராட்டம் என்றே கருதுகிறேன். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் வழங்கிய ராஜா, சர் முதலிய பட்டங்களைக்கூடக் கைவிட விரும்பாத ஒருவரைக் காங்கிரஸ் அபேட்சகராக நியமித்திருக்கிறார்கள். இந்த நியமனம் உண்மையான தேசபக்தர்கள் யாவரையும் மனம் துடிக்கும்படி செய்திருக்கிறது. இந்தத் தொகுதியில் நான் அவருக்குப் போட்டியாக நிற்பதற்கு அதுதான் காரணமாகும். ஆகையால் தேச நலத்தில் உண்மையாகப் பற்றுள்ள பொது மக்கள், தர்மத்தையும் நீதியையும் நிலைநாட்ட விரும்பும் அன்பர்கள், அன்பையும் அகிம்சையையும் போற்றும் புண்ணியர்கள், தாய்மார்கள் எல்லாரும் என்னுடைய சிங்கப் பெட்டியில் தங்கள் வோட்டுகளைப் போட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்."

ஜனவரி மாதச் சிறுகதைப் போட்டியில் நூறு ரூபாய் பரிசு பெற்ற

'அம்மா' என்னும் கதை அடுத்த 'கல்கி' இதழில் பிரசுரமாகிறது

பரிசு பெற்றவர்: **ஸ்ரீமதி என். ரங்கநாயகி**

11, அபிராமபுரம் இரண்டாவது தெரு தேனாம்பேட்டை, சென்னை-18.



மறுக்க முடியாத சம உரிமை...

பொது ஜனங்கள் அனுமதிக்கப்படும் எந்தவொரு ஹோட்டல்கள், சிற்றுண்டிசாலைகள், சாப்பிடும் இடங்கள், தேநீர்-காப்பி ஸ்டால்கள் எல்லாவிதமான கடைகள், பொழுது போக்கு ஸ்தலங்கள், ஓய்வுபெறும் இடங்கள், தர்ம சத்திரங்கள் முதலியவைகளில் யாரும் நுழைந்து வசதிகளைக் கோர உரிமை உண்டு. இதை ஜாதி அல்லது தீண்டாமை என்னும் பெயரால் எவருக்கும் மறுக்க முடியாது.

*இந்திய அரசியல் சட்டம்
தீண்டாமையை ஒழித்து
எல்லோருக்கும் சம ரீதியான சமூக,
பிரஜா உரிமைகளை அளிக்கிறது.*

**தீண்டாமையை
ஒழித்துக் கட்டுங்கள்,
சமத்துவத்தை
நிலைநாட்டுங்கள்.**

DA— 56/21(T)



பல்கலைக் கழகத்தில் நேருஜி




சென்னை பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழாவில் பாரதப் பிரதமர் கலந்து கொண்டு சிறப்பித்தார். நூற்றாண்டு விழா ஞாபகார்த்தக் கட்டடத்துக்கு நேருஜி அஸ்திவாரம் இட்டார். இந்த இனிய விழாவில் பல காட்சிகளை இப் பக்கத்தில் காணலாம்.

1. டாக்டர் ஏ.எல். முதலியார், கல்வி மந்திரி சி. சுப்பிரமணியம், நேருஜி முதலியவர்கள் பல்கலைக்கழக அங்கியில் வருகிறார்கள். 2. சென்னை கவர்னரும், பாரதப் பிரதமரும். 3. நேருஜி பேசுகிறார். 4. நூற்றாண்டு விழா ஞாபகார்த்தக் கட்டடத்துக்குக் கால் கோளுகிறார் இந்தியப் பிரதமர்.

போட்டோ: விச்சு







சங்கம் வளர்த்த மதுரையில் பண்டொரு நாள் தெய்வத் திருக்குறள் அரங்கேறியது. அப்போது அதை வியாச முனிவர் அருளிய பாரதத்துக்கு இணையாக மதித்துச் சங்கப் புலவர்கள் பாராட்டினார்கள். அதே மதுரையில் சென்ற மாதம் 27-ம் தேதி 'கல்கி'யில் ராஜாஜி எழுதி வந்த 'வியாசர் விருந்து' மலிவுப் புத்தகத்தின் மூன்றாவது பதிப்பு வெளியிடப்பட்டது. அதை, தெய்வத் திருக்குறள் போல் தமிழ் மக்களுக்கு ஓர் அரிய நூல் என்று பல தமிழ் அறிஞர்கள் உள்ளம் உவந்து பாராட்டினார்கள். அந்த அழகிய கோலாகல வைபவத்தில் மதுரை ஞானசம்பந்தர் மடத்தின் தலைவர் திருப்பெருந் திரு ஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் ராஜாஜி அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்ததோடன்றி விழாவுக்குத் தலைமை வகித்தார்.

1. ஆடி வீதியில் கூடிய திரளான கூட்டம். 2. ஸ்ரீமதி எம். எஸ். அவர்களும், குமாரி ராதாவும் பிரார்த்தனை கீதம் பாடுகிறார்கள். 3. பொன்னாடையில் ராஜாஜி. 4. தினமணி அதிபர் திரு கோயங்கா வரவேற்புரை நிகழ்த்துகிறார். 5. திரு பி. டி. ராஜன். 6. திரு சா. கணேசன். 7. திரு பி. எஸ். குமாரசாமி ராஜா. 8. திரு முத்துராமலிங்கத் தேவர். 9. ராஜாஜி. 10. எல். கிருஷ்ணசுவாமி பாரதி. 11. ஸ்ரீமதி வசுமதி ராமசுவாமி. 12. திருப்பெருந்திரு ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள். 13. திரு எஸ். மகராஜன். 14. திரு கே. எஸ். ராமானுஜம். 15. திரு வீர வெகப்பிரமணியம், 16. திரு ஏ. ஜி. வெங்கடாச்சாரி. 17. விழாவுக்கு வந்திருந்த திரளான கூட்டம்.





தேவியின் கடிதம்

தாராள மனப்பான்மை

வசுமதி ராமசாமி

அன்புக்குரிய சுஜாதா,

வளர்ந்துவிட்ட பெண்கள், பிள்ளைகள், கணவன் எல்லோருடனும் குடும்பம் நடத்தும் போது அடிக்கடி சச்சரவுகள் விவாதங்கள் வருவதாக எழுதியிருக்கிறாய்! ஏன், சில சமயம் வாய்ப் பேச்சு சண்டையாக முற்றிச் சாப்பிடாமல் கோபித்துக் கொண்டு விடும் வரை சச்சரவு முற்றிப் போகிறதென்று கூட எழுதியிருக்கிறாய்.

நம்முடைய முயற்சியில் அவற்றை ஓரளவு தடுக்கலாம். விட்டுக் கொடுப்பது என்ற ஒரு சொல் நம்மிடையே வழங்கி வருகிற தல்லவா? ஆனால் அதற்கு அர்த்தம் இரண்டு விதமாக ஆகிறது. நம்முடைய விருப்பத் துக்கு மாறாகப் பிறருடைய மனப் போக்குக்கு ஏற்ப விட்டுக் கொடுத்து நடந்து கொள்வது என்பது ஒரு பொருள். பிறரிடம் நம் குடும் பத்தினரை, சிநேகிதர்களை விட்டுக் கொடுத் துப் பேசுவது என்பது மற்றொரு பொருள். முதலில் சொன்னதற்கே என்னுடைய அபிப் பிராயத்தை எழுதுகிறேன்.

நாம் கணவரிடம் அவர் போக்குப்படி விட்டுக் கொடுப்பதில் குறைந்து விடமாட் டோம். நம்முடைய கௌரவம் அதிகமாகுமே தவிரக் குறையாது. நம்முடைய அந்தச் செய்கை அவர்கள் மனத்தை நன்றாக மாற்று வது மட்டுமல்ல,—அவர்களுடைய தயவுக்கும் அதே சமயம் பெருமைக்கும் பாத்திரமாகி றோம். இது உண்மை. அதேமாதிரி நம்முடைய குழந்தைகளுக்குக் கல்வி அறிவைக் கொடுத்து அறிவாளிகளாக வளர்க்கப் பிரியப்படுகிறோம். அவர்களிடம் சில்லறை விஷயங்களைக் கண் டிக்காமல் விட்டுக் கொடுத்து, அன்பாகச் சொல்லி முக்கியமான பெரிய விஷயங்களில் கண்டிப்பாக இருக்கப் பார்ப்போம்.

கணவன்மார்களுக்கு எவ்வளவோ விஷயங் கள் தெரியாமல் இருக்கின்றன. ஆனால் நம்மால் இயலாத அநேக காரியங்களை அவர்களால் சாதிக்க முடிகிறது.

அவர்களுடைய சில்லறைப் பழக்க வழக்கங் களைப் பற்றிக் குறை சொல்லி மனஸ்தாப மடைவது சரியல்ல. பெரிய காரியங்களில் தவறாகப் போகாமல் எடுத்துச் சொல்லிச் சரியான பாதைக்குக் கொண்டு வரவேண்டிய கடமையையும் விட்டு விடக் கூடாது.

என் சிநேகிதி எந்த ஊருக்குத் தன் கணவ னுடன் கிளம்பினாலும் மனம் வருந்திச் சண்டை பூசலுடன்தான் திரும்புவாள். புறப்படும் போதே ஒவ்வொரு இடத்திலும் கூட இரண்டு நாட்கள் தங்கவேண்டும், சாமான்கள் வாங்க வேண்டும் என்றெல்லாம் திட்டம் போடு வாள். அவள் கணவனுடைய பலஹீனமான குணத்தை அவள் புரிந்து கொள்ளவில்லை. போகப் போகச் சொன்னால் அவர் தங்கக் கம்பி போல் வழிக்கு வருவார். அதற்கு அவ ளுக்குப பொறுமை கிடையாது. ''இனி ஜன் மத்துக்கு உங்களுடன் வாசற்படி தாண்ட மாட்டேன்'' என்ற சபதத் துடன் வந்து சேருவாள்.

நம்முடைய பெண் கல்யாணம் வந் தால் அந்தச் சமயம் ஒரு சோதனை. எவ்வளவுதான் ஐக்கிய தாம்பத்திய மாக இருந்தாலும் சச்சரவு வரும். நம்முடைய பெண்ணின் மேல்நமக்கு இருக்கும் அன்பைவிட அவர்களுக்குக் குறை வென்று கருத வேண்டாம். பதினாயிரம் ரூபாய்க்குச் சீர்வரிசைகள் செய்வார்கள். கடைசியில் சம்பந்தி அம்மாள் திருப்திக்குக் கூட இரண்டு ரூபாய்க்கு வெற்றிலை பாக்கு வாங்கஏற்றுக் கொள்ளமாட்டார்கள். அந்தச் சமயம் விட்டுப் பிடிக்க வேண்டும். அல்லது அவர்களிடம் சொல்லாமல் செய்து விட்டுப் பிறகு தெரிவிக்கலாம். சிலருக்கு முன்னால் சொல்லக் கூடாது; சிலருக்குப் பின்னால் தெரிவிக்கக் கூடாது. இவைகளைச் சமாளிக்கச் சாதுர்யம்தான் தேவை.

இந்தக் காலத்து குழந்தைகளுக்குப் பெற் றோர்களிடம் பாசம் குறைவு. அவர்கள் சூழ்நிலைக்கேற்ப மாறுகின்றார்கள். அவர்கள் நம்மிடம் அன்பு வைக்கச் சில்லறை விஷயங் களில் கண்டிப்பு இல்லாமல் இருப்பது நன்மை. ஆனால் அவர்கள் நம்மிடம் மதிப்பு வைத்துத் தவறு செய்தால் தாய்க்குப் பிடிக்காதென்று உணரும் வகையில் கண்டிப்பு தேவை. ''உன் பெண் சமர்த்து. ஒழுங்கான குழந்தைகள்'' என்று பிறர் சொல்லும்போது ஒரு தாய் அடையும் ஆனந்தத்துக்கு ஈடாக எதையும் சொல்ல முடியாது. அதை ஏன் நாம் இழக்க வேண்டும்?

வேலைக்காரர்களிடமும் இந்த; [விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இருந்தால்தான்



நம்மிடம் அவர்களுக்கு விசுவாசம் இருக் கும். ஓயாமல் கண்டித்தால் அதற்கு மதிப்பு இருப்பதில்லை. அவர்கள் செய்யும் சிறு குற்றங் களைக் கண்டு கொள்ளாமல் போவதில் நமக்குத்தான் நன்மை. இப்படிக்கு,

பூமாதேவி

வட்ட மேஜை

வியாசர் விருந்து : யு யுத்ஸு

யுத்தம் முடிந்தபின் பீமனிடம் காந்தாரி புலம்பியபோது, 'என் மக்கள் அனைவரையும் கொன்று விட்டாயே? ஒருவனையாவது உயிருடன் விட்டிருக்கலாமே?' என்று சொன்னதும், பிறகு யுதிஷ்டிரன் தனக்கு ராஜ்யம் வேண்டாம், திருதராஷ்டிரனுடைய குமாரன் யுயுத்ஸுவுக்கு அரசப் பட்டம் தந்துவிடலாம் என்று திருதராஷ்டிரனிடம் சொன்னதற்கும் முரண் இருக்கிறதே என்று வியாசர் விருந்து படித்த ஒரு குழந்தையிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. யுயுத்ஸு திருதராஷ்டிர ராஜாவுக்கும் ஒரு வைசியப் பெண் வேலைக்காரிக்கும் பிறந்த மிக தேஜஸ் பெற்ற குமாரன் என்று ஆதிபருவம் 129-வது அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது; காந்தாரியின் மகன் அல்ல.

சென்னை
19—1—57

ராஜாஜி

கருத்தும் கதையும்

மதிப்புக்குரிய ஸ்ரீ ராஜாஜி அவர்களுக்கு,

நேற்று ஆடி வீதியில் தங்களைத் தரிசிக்கும் பேறும் தங்கள் பேச்சைக் கேட்கும் பாக்கியமும் கிடைத்தன. என்னுடைய வெகு நாளைய ஆவல் நிறைவேறியது. என்னுடைய பாபமெல்லாம் தங்களைத் தரிசித்ததனால் விலகி விட்டது போன்று உணர்கிறேன்.

நேற்று திரு எஸ். மகராஜன் அவர்கள் பேசும்பொழுது தங்கள் ஜாதக விஷயமாகக் கல்கி அவர்கள் (ரா.கி.) எழுதியதைப் பிரஸ்தாபித்ததும், அதற்குத் தாங்கள் பதிலளித்தபொழுது கல்கி கற்பனைக்காக அவ்விதம் எழுதியிருப்பார் என்று தெரிவித்தீர்கள். (நேற்றைய நிகழ்ச்சி முழுவதையும் ஆரம்பம் முதல் கடைசி வரை மேடைக்குச் சமீபத்திலேயே உட்கார்ந்து கேட்டேன்.) இந்த இடத்தில் தங்களுக்கு இதைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஸ்ரீ கல்கி அவர்கள் "நாட்டுக்கொரு புதல்வர்" என்று ஒரு கட்டுரை தங்களைப் பற்றி எழுதியிருக்கிறாரல்லவா? அதில் திரு எஸ். மகராஜன் அவர்கள் குறிப்பிட்ட விஷயத்தை இன்னும்கூட விவரமாக எழுதி, பிறகு கடைசியில் "ஆகையால், ஜாதகம் கிடைக்காததற்குக் காரணம் தேடி, கற்பனா சக்திக்கு இடம் கொடுத்து மேற்படி விஷயத்தை எழுதினேன்" என்று எழுதியிருக்கிறார். அது கற்பனை என்பதை அவரே (கல்கி அவர்களே) அந்த இடத்திலேயே தெரிவித்திருக்கிறார்.

கதைகளுக்குக் கருத்து கேட்பதைப் பற்றித் தாங்கள் தெரிவித்தீர்கள். அதன் காரணம் கதையோ, கருத்தோ புரியாமல் கேட்கவில்லை. தாங்கள் எழுதுவது புரியவில்லை என்றால் வேறு யார் எழுதுவதுமே புரியாது. பின் ஏன் கேட்க வேண்டும் என்றால் தங்கள் வாயினாலேயே, தங்கள் மொழியினாலேயே இன்னும் ஏதாவது கேட்க வேண்டும் என்னும் ஆவலினால்தான். தாங்கள் எவ்வளவோ எழுதியிருக்கிறீர்கள்; எழுதிக் கொண்டு வருகிறீர்கள். ஆனாலும் ஆசைக்கோர் அளவுண்டோ? அதிக ஆசையினால்தான் அவ்விதம் ஏதாவது கேட்கத் தூண்டுகிறதே தவிர உண்மையில் கதையோ, கருத்தோ புரியாததினால் அல்ல என்று நிச்சயமாகச் சொல்லலாம் என்பது என் அபிப்பிராயம்;

வியாழக்கிழமை சாதாரண கிழமையாகி விட்டது, தங்கள் கதை இல்லாமல். ஆனால் ஒவ்வொரு வாரமும் ரேடியோ ஸ்டேஷனுக்குச் செல்வது சிரமமாக இருக்குமல்லவா தங்களுக்கு. அவகாசம் கிடைத்து, சிரமமும் இல்லாதிருக்கும் பொழுது 'கல்கி' பத்திரிகையில் எழுதுங்கள்.

மதுரை
28—1—57

ஜெயலக்ஷ்மி

சிரவகலாசாலை மலர் வெகு ஜோர்: ஆனால், ராஜாஜியின் சிறுவர் கதையைத் தேடினோம், தேடினோம், அகப்படவேயில்லை. ஏன் எங்களை ஏமாற்றி விட்டீர்கள்?

புதிய சித்திரத் தொடர்கதையைப் பார்த்த பின் அடுத்த வாரக் "கல்கி" இன்றே வந்துவிடாதா என்று ஏங்குகிறோம்.

பழனியூர்
28—1—57

ஜி. ராமன் 7-ம் வகுப்பு
எஸ் குருநாதன் 6-ம் வகுப்பு
பி. மாடசாமி 8-ம் வகுப்பு
தமிழரசி 3-ம் வகுப்பு

நல்லவர்களுக்கு வோட்டு

நான் 1927 வருஷம் முதல் இன்றுவரை காந்தியவாதியாகவும் காங்கிரஸ் அங்கத்தினராகவும் இருந்து வருகிறேன். 1930–31 போராட்டங்களில் என்னால் முடிந்தவரை சாதாரணத் தொண்டனாக இருந்தவன். பல போராட்டங்களில் கலந்து கொண்டவன். 1942ம் வருஷத்தில் 'வெள்ளையனே வெளியேறு'ம்படி பணித்த நம் மகாத்மாவின் பொன்மொழியைப் பின்பற்றியவன்.

அதன் பின் ஓர் சிறிய தொழிலை நடத்தித் தற்போது ஜீவனம் நடத்தி வருபவன். தற்சமயமும் கொத்தவால் சாவடி காங்கிரஸ் கமிட்டியில் நான் நிர்வாக அங்கத்தினனாகப் பணி புரிகிறேன்.

நம் செந்தமிழ் நாட்டின் சீரிய கொள்கையுடைய எமது கல்கி 27-1-57 இதழில் நல்லவர்களுக்கு வோட்டுப் போடுங்கள்! என்ற தலையங்கத்தை ஒருமுறைக்குப் பலமுறை படித்துப் பரவசமடைந்தேன். அதில் தாங்கள் எழுதிய ஒவ்வொரு வார்த்தையையும் நான் மனப்பூர்வமாய் ஆதரிக்கிறேன். தங்களுடைய தீரம், உண்மை, அஞ்சாமை, ஆர்வம் மிகுந்த கட்டுரையை எமது 14-வது டிவிஷனில் போற்றாதவர்களில்லை. ஏன், நம் செந்தமிழ் நாட்டின் செல்வர் செல்விகளின் அபிப்பிராயமும் அதுதான். வாழ்க, 'கல்கி' பத்திரிகை.

சென்னை-1
24—1—57 பி. எம். மருளாண்டி நாயகர்

"காங்கிரஸ் நிலைத்து நிற்க"

"நல்லவர்களுக்கு வோட்டுப் போடுங்கள்" என்ற தலையங்கம் சரியான சமயத்தில் வெளியானது குறித்து நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். தேர்தலில் மக்களின் கடமை என்ன என்பதை இரத்தினச் சுருக்கமாகச் சொல்லி விட்டீர்கள்.

தற்பொழுது இருக்கும் சூழ்நிலையில் அமரர் "கல்கி"யும் இதையேதான் எழுதியிருப்பார். இத் தருணத்தில் ஆசிரியர் "கல்கி"யின் ஞாபகம் வருகிறது. ஆம். அவர் தம் 'மகுடபதி'யில், "அன்றைய தினம் பிரிட்டிஷ் அதிகாரத்தின் மகத்துவத்தை மண்டையிலும், முதுகிலும், தோள் பட்டைகளிலும், முழங்கால் சில்லுகளிலும் அனுபவித்தார்கள்" என்று எழுதி யிருக்கிறார். யார் அனுபவித்தார்கள்? காங்கிரஸ் தொண்டர்கள் அனுபவித்தார்கள். அரும்பாடுபட்டுச் சுதந்திரத்தை வாங்கிக் கொடுத்தார்கள்.

அப்படிப்பட்ட காங்கிரஸ் மகாசபை தற்பொழுது, தான்பெற்ற செல்வாக்கை, உலகம் போற்றும் புகழை இழந்து விடுமோ என்று ஐயப்படும்படி சம்பவங்கள் நடக்கின்றன. ஆகவேதான் நாம் "நல்லவர்"களாகப் பார்த்து வோட்டுப் போட வேண்டிய நிலைமை வந்து விட்டது.

சென்னை
30—1—57 டி. எஸ். கிருஷ்ணமூர்த்தி

எதேச்சாதிகாரம்

கல்கி 27-1-57 இதழில் வெளியான தலையங்கம் படித்தேன். உள்ளதை உள்ளபடியே எடுத்துச் சொல்லி மக்களுக்குத் தேர்தலில் செய்ய வேண்டிய கடமைகளை எடுத்துக் கூறியதற்குப் பாராட்டுகிறேன். தற்சமயம் காங்கிரஸின் பெயரால் நிற்கும் பல அபேட்சகர்களைப் பார்த்தால் இவர்களுக்கும் காங்கிரஸுக்கும் ஏதாகிலும் சம்பந்தம் உண்டா என்று சந்தேகம் எழுகிறது. இவ்வாறு தமிழ் நாட்டில் அபேட்சகர்களைப் பொறுக்கி எடுத்திருப்பது காமராஜின் எதேச்சாதிகாரத்தை எடுத்துக் காண்பிப்பதோடு, தமிழ் நாடு காங்கிரஸும் சரியில்லை என்பதையும் குறிக்கிறது. எங்கள் பட்டுக்கோட்டைத் தொகுதியில் கூடக் காங்கிரஸோடு தொடர்பு இல்லாத ஒருவரை அதன் சார்பாக நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்களால் புனிதமான காங்கிரசுக்கு மாசு ஏற்படுகிறது.

அழகிநாயகிபுரம்
29—1—57 கே. ராமதுரை



ஆசிரியர்களின் அவதி

சுமார் மூன்று ஆண்டுகளுக்கு மேலாகத் தென் ஆற்காடு, வட ஆற்காடு ஜில்லாக்களில் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஜில்லா போர்டுகள், பஞ்சாயத்துக்கள் ஆகியவைகளின் நிர்வாகத்தில் ஓராசிரியர் பாடசாலைகள் திறக்கப்பட்டுள்ளன.

ஜில்லா போர்டு நிர்வாகத்தின் கீழுள்ள ஓராசிரியர் பள்ளிகளுக்கு அவ்வப்பொழுது சரிவரச் சம்பள பட்டுவாடா செய்யப்படு

கிறது. ஆனால் பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழுள்ள ஓராசிரியர்களுக்குப் பள்ளி திறக்கப் பட்டு மூன்றாண்டுகளுக்கு மேலாகியும்சம்பளப் பட்டுவாடா செய்யப்படவில்லை. குறிப்பாக, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங் களில் உள்ள ஓராசிரியர்களைப் பார்க்கும் போது மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

ஓர் விவசாயி நிலத்தைக் கஷ்டப்பட்டு உழுது விட்டு ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டே பருவமழை பெய்யாதா என்று ஏங்குவதுபோல ஆசிரியர்கள் பஞ்சாயத்துத் தலைவர்களையும் பாராமல், தங்கள் கையி லுள்ள கொஞ்ச நஞ்ச பணத்தையும் மேலதி காரிகளுக்குத் தபாலுக்கும், தந்திக்கும் செலவு செய்து விட்டு என்றைக்காவது நமக்கு விடிவு காலம் வராதா என்று எதிர் பார்த்து ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மணக்மேடு
26—1—57

ஆர். கே. மணியன்

அசிரத்தை ஏன்?

ஒரு வருஷத்துக்குள் ஹைதராபாத்திலும் அரியலூரிலும் ரயில் விபத்து ஏற்பட்டு அதனால் அநேக உயிர்ச்சேதங்களும் சொத்துச் சேதங்களும் ஏற்பட்டன. அரியலூர் விபத் தில் ஏற்பட்ட சேதத்துக்கு என்ஜினீயரிங் இலாகாதான் பொறுப்பாளி என்றும் மழை உடைப்புத்தான் சேதத்துக்குக் காரணம் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது எல்லோருக் கும் தெரிந்த விஷயம்.

இவ்வளவு அனுபவத்துக்குப் பிறகும் ரயில்வே இலாகாவினர் அசிரத்தையாக இருப்பது வருந்தத்தக்கது. அதாவது நான் அடிக்கடி ரயில் பிரயாணம் செய்பவன். இன்று காலை நான் கோவில்வெண்ணியி லிருந்து நீடாமங்கலம் போகும் மெயில் வண்டிக்காகச் சில நிமிஷ நேரம் ஸ்டேஷனில் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற் பட்டது. அந்தச் சமயம் ஸ்டேஷனில் சில நண்பர்களுடன் பேசிக் கொண்டே கொஞ்ச தூரம் நடந்து சென்றேன்.

அந்தச்சமயம் சுமார் ஆறு ஜோடி 'ஸ்லீப் பர்'களையும் தண்டவாளத்தையும் இணைக் கும் ஜாயிண்டுகளில் உள்ள துண்டுமரக் கட்டைகள் எதிர் எதிராக நகர்ந்து பக்கத் தில் விழுந்திருந்தன. மேற்படி கட்டைகள் தண்டவாளம் நகராமலும் ஆடாமலும் இருப்பதற்காக உபயோகிக்கப்படுபவை. ஒரு ஜோடி கட்டைகள் மாத்திரம் நகர்ந்து அதனால் கால் அங்குலம் தண்டவாளம் நகர்ந்தாலும் எப்பேர்ப்பட்ட சேதம் ஏற் படும் என்று நினைப்பதற்குக்கூட பயம் ஏற் படுகிறது. ஆறு ஜோடிகள் நகர்ந்து ஒன்று இரண்டு இடங்களில் ரயில் தடம் புரண்டால் பிரயாணிகளின் கதி என்ன?

இது விஷயமாக பி. டபிள்யூ. லைன் மேஸ்திரியைக் கேட்டதற்கு. ''நான் என்ன செய்ய முடியும்? கட்டைகள் ரொம்பப் பழமையானவை. புதியது அனுப்பிவைக் கும்படி பல தடவைகள் கேட்டும் அனுப்பப் படவில்லை'' என்று சொல்லுகிறார். புதிய திட்டங்கள் போடுவதைக் காட்டிலும் ரயில் பாதைகளைச் செப்பனிடுவதே முக்கியம் என்பதை ரயில்வே உத்தியோகஸ்தர்கள் உணர்ந்து கொள்வார்களா?

கோவில்வெண்ணி
28—1—57

கே. ஜி. சீனிவாசன்

தியாகராஜ ஆராதனை


2

1. நாதோபாசகரும் இசை உலகத்தின் மங்காத ஜோதியும் சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரும் அவதார புருஷருமான ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் ஆராதனை விழா வழக்கம் போல் திருவையாற்றில் இவ்வருஷமும் வெகு விமரிசையாக நடந்தது. விழா ஆரம்பத்தில் அரியக்குடி ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார், மகாராஜபுரம் ஸ்ரீ விசுவநாத ஐயர், செம்மங்குடி ஸ்ரீ சீனிவாச ஐயர் முதலிய மற்றும் பல வித்துவான்களும் சேர்ந்து பக்தியுடன் பஞ்சரத்னக் கீர்த்தனங்கள் பாடும் காட்சி.

2. தில்லி கர்நாடக சங்கீத சபையின் ஆதரவில் சென்ற ஜனவரி மாதம் 19-ம் தேதியிலிருந்து தியாகப்பிரம்ம ஆராதனை விழா கொண்டாடப்பட்டது. மேற்படி சங்கீத சபை சென்ற இருபது வருஷ காலமாகக் கர்நாடக சங்கீதத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு வருகிறது. அச்சபையின் நிர்வாகத்தில் சங்கீதப் பள்ளிக்கூடமும் நடந்து வருகிறது. தியாகப் பிரம்ம உற்சவத்தின் போது தில்லி சங்கீத சபையைச் சேர்ந்த பாடகர்களும் மாணவிகளும் தியாகப்பிரம்மத்தின் பஞ்சரத்னக் கீர்த்தனங்களைப் பாடித் தில்லி ரசிகர்களை மகிழ்வித்தனர்.

3. தியாகப் பிரம்மத்தின் 110-வது ஆராதனை மகோற்சவத்தை பம்பாயிலும் பக்தர்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். ஸ்ரீ டி. வி. ராமாநுஜம் விழாவை ஆரம்பித்து வைத்து, தியாகப்பிரம்மத்தின் மகிமையை விவரித்துக் கூறினார். அவ்விழாவில் ஏராளமான சங்கீத வித்வான்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

★★★





ஈழநாட்டுப் பிரயாணம் ⑤

பத்துத் தலைகளையுடைய இராவணனை நேயர்களுக்குத் தெரியாதா, என்ன? அவன் சீதையைச் சிறைப்பிடித்துச் சென்று இலங்கையில் வைத்ததும் அதன் காரணமாக ராம லட்சுமணர்களும் வானர சேனைகளும் இலங்கைக்குச் சென்று யுத்தம் செய்ததையும் நாம் அறிந்திருக்கிறோம். பின்னர் ''இந்தா விபீஷணா! இலங்காபுரி ராஜ்யம்!'' என்று ராமன் இலங்கையை ராவணன் தம்பி விபீஷணனுக்கு மகுடம் சூட்டி வைக்கும்படி நேர்ந்த சம்பவத்தையும் அறிவோம். அதற்கு அத்தாட்சியாக இப்பொழுதுகூட இலங்கையில் விபீஷணன் கோயில் இருக்கிறது.

இலங்கைக்குப் போயிருந்த போது விபீஷணன் கோயிலுக்குச் சென்றேன். இலங்கைத் தலைநகரில் இருந்து நாலு மைல்களுக்கு அப்பால் 'கலனி' என்னும் இடத்தில் இந்தக் கோயில் இருக்கிறது. விபீஷணன் கோயிலைப் பார்த்த போது ஒரு கணம் திகைப்புத்தான் ஏற்பட்டது. ராமனால் முடிசூட்டப்பட்ட விபீஷணனை இப்படிச் சின்ன ஒரு ஓட்டு வில்லைக் கட்டடத்துக்குள்தானா வைப்பது என்று எண்ணி வேதனைப் பட்டேன். அசட்டு விபீஷணன் தனக்குக் கிடைத்த இலங்கை ராஜ்யத்தையும் சிங்களவர்கள் ஆட்சியில் ஒப்படைத்துவிட்டு அந்த ஓட்டு வில்லைக் கட்டடத்துக்குள் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான்.

இந்த இடத்துக்கே ஒரு தனி மகிமை இருக்கிறது போலும். இதே இடத்தில்தான் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னால் புத்தர் பிரான் இலங்கைக்கு வந்த போது கலனி கங்கைக்கு மேலே ஆகாய வெளியில் அமர்ந்து உபதேசம் செய்தாராம்.

''இது என்ன நம்ப முடியாத விந்தையாக இருக்கிறதே!'' என்று கூறி விடாதீர்கள். இதற்கும் ஆதாரமாக இங்கு ஒரு புத்தர் கோயிலே இருக்கிறது.


இவ்வாறு புத்தர் கோயிலும், விபீஷணன் கோயிலும் இருக்கும் இடத்துக்கு அருகில்தான் இன்றைய இலங்கைத் தீவின் தலைநகரமான கொழும்பு நகரம் இருக்கிறது.


கொழும்பு நகரம் சென்னை நகரைக் காட்டிலும் சிறிய நகரம்தான். ஆனாலும் அதன் அமைப்பு மிக நேர்த்தியானது. செல்வத்தில் சிறந்தது. அதாவது வர்த்தகம் கொழிக்கும் நகரம். இவ்வளவு வர்த்தகம் மிகுந்த நகரத்தைத் தமிழ் நாட்டில் காண முடியாது. கொழும்பு நகரில் லக்ஷ்மிதேவியே கொலுவீற்றிருக்கிறாள் என்றுதான் சொல்ல வேண்டும். பார்க்கும் இடமெல்லாம் கடைகள்! வர்த்தகக் கூடங்கள்தான்! வீதியில் தலையில் சாமான்களை வைத்துக் கொண்டு விற்கும் பத்தாம் நூற்றாண்டு வர்த்தக முறையில் இருந்து இன்றைய நவீன நாகரிகம் நிறைந்த வியாபார முறை வரையில் இந்தச் சின்ன நகரில் இருக்கின்றன.

ஒரு மூன்றடுக்கு மாளிகையைக் காண்பித்து, ''இது ஒரு கடை!'' என்றார்கள். இந்தக் கடையில் இல்லாத சாமானே கிடையாது. ஒரே ஒரு பெரியகூடம்; அதில் பல வர்த்தகப் பகுதிகள். அதே அளவு இட வசதி கொண்ட முதல் மாடியில் இன்னொரு பகுதி. இரண்டாவது மாடியில் இன்னும் பல பகுதிகள்; இவ்வாறு போய்க் கொண்டே இருக்கின்றன. இப்படிப் பல கடைகள் கொழும்பு நகரில் இருக்கின்றன. இந்த முறையில் அமைந்த கடைகள் மிகப் பெரிய வியாபார ஸ்தலமான பம்பாய் நகரத்தில் கூட இருக்குமோ என்பது சந்தேகம்தான்.

பலவகையான வாணிபம் நடந்து வரும் வீதிகளில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய பகுதி பேட்டை என்ற பெயர் கொண்ட வணிக மண்டபமாகும். இங்கு ஏராளமான தமிழ் நாட்டு வியாபாரிகள் இருக்கின்றனர். வணிகத் துறையில் உலக மக்களுடன் போட்டி போட்டு உயர்ந்த ஸ்தானத்தை வகித்துக் காட்டும் திறமை தமிழ் மக்களுக்குச் சிறப்பாக உண்டு என்பதை நிரூபித்து வருகிறார்கள். வியாபார தர்மத்திலிருந்து சிறிதும்

இலங்கைத் தலைநகரில் இரண்டு நாள்





பிறழாமல், வெளிநாட்டிலிருந்து வரவழைக்கப்பட்ட பொருள்களாக இருந்தாலும் அவைகளைக் குறைந்த லாபத்தில் மலர்ந்த முகத்துடன் மக்களுக்குக் கொடுக்கும் அழகைப் பார்த்துப் பார்த்து அநுபவிக்கலாம்.

கொழும்புத் துறைமுகத்தில் உலகத்தின் பல நாடுகளில் இருந்தும் வர்த்தகக் கப்பல்கள் வரிசை வரிசையாக வந்து நிற்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சி. ஒவ்வொரு கப்பலிலும் அந்தந்த நாட்டுக் கொடி வீசிப் பறக்கும் அழகைப் பார்த்தாலே உலக நாடுகள் அனைத்தும் கொழும்பு நகரைத் தங்கள் நாட்டுச் சந்தையாகச் செய்து வரும் உண்மையைப் புரிந்து கொள்ள முடிகிறது.

கொழும்பு இலங்கையின் தலைநகரமாக விளங்குவதற்கு இந்தத் துறைமுகம்தான் காரணம். இந்தச் சமயத்தில் கொழும்பு நகரின் பழைய சரித்திரத்தையும் சிறிது தெரிந்து கொள்ளலாம்.

கொழும்பு நகரின் கதை

பதினாறாம் நூற்றாண்டில் இந்த நகரம் போர்ச்சுக்கீசியர் கையில் இருந்தது. பின்னர் டச்சுக்காரர் வசம் சென்றது. பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் ஆட்சிக்குள் வந்தது. இவர்கள் காலத்தில்தான் இந்தத் துறைமுகம் நன்றாகச் சீர்திருத்தம் செய்யப்பட்டு இன்று இருக்கும் நிலைக்கு உயர்ந்தது.


கொழும்பு நகரின் அமைப்பை லண்டன்மாநகருடன் ஒப்பிட்டுச் சொல்லுகிறார்கள், காரணம் இந்த நகரைப் புதிய முறையில் அமைத்தவர் லண்டன் நகரை நிர்மாணித்த நகரக் கலைச் சிற்பியான ஸர் பேட்ரிக் அபர்க்ரோம்பி. இவருடைய நகர நிர்மாணத் திறமை கொழும்பு நகரின் ஒவ்வொரு பகுதியிலும் பிரதிபலிக்கிறது.

நேர்நேரான சாலைகள் - சாலைகளை நாலு பகுதிகளாகப் பிரித்து வைத்துப் போக்கு வரத்துச் சாதனங்களுக்கு வசதி செய்திருக்கும் அழகு! சாலைகளுக்கு இருபுறமும் வரிசை வரிசையாக மலர் குலுங்கும் மரங்களை வைத்திருக்கும் முறை! சில சாலைகளில் பலவித வர்ணங்களால் பூத்துக் குலுங்கும் மர வரிசைகளின் அழகு, எல்லாமே பார்த்து அனுபவிக்க வேண்டிய அருமையான காட்சிகள்!

ஆங்காங்கு ஐந்தாறு சாலைகள் வந்து ஓரிடத்தில் கூடுகின்றன. இந்த மாதிரி ஒவ்வொரு சாலைச் சந்திப்புகளிலும் வட்ட வடிவமான புல் தரைகள் இருக்கின்றன. கொழும்பு நகருக்குப் புதிதாகப் போகிறவர்களுக்கு மேற்படி வட்டப் புல் தரைகளில் ஒன்றுக்கொன்று வித்தியாசம் தெரியாது.

கடற்கரை ஓரமாக முக்கியமான சர்க்கார் கட்டடங்கள் அமைந்திருக்கின்றன. 'ராணி இல்லம்' என்ற கவர்னர் ஜெனரல் வசிக்கும் சர்க்கார் மாளிகை. இதற்கு அருகாமையிலேயே பாராளுமன்றக் கட்டடங்கள். இலங்கையின் இதர பகுதிகளில் உள்ள பழங்காலக் கட்டடங்களையும் அதன் நாகரிகத்தையும் உணர்ந்தவர்கள், கலை உணர்ச்சி உள்ளவர்கள் இந்தக் கட்டடங்களை எல்லாம் அவ்வளவு அழகானவை என்று கூற மாட்டார்கள். ஆனாலும் அவற்றின் கம்பீரத்தைப் பற்றி மட்டும் யாரும் குறை கூற முடியாது.

கொழும்பு நகரையும், அதன் துறைமுகத்தையும், கடை வீதிகளையும் மிகப் பெரிய ஹோட்டல்களையும் பார்த்தால் இலங்கைத் தீவு என்னவோ தமிழ் நாட்டைவிட மிகப் பெரிய பூமியாகத் தோன்றும். ஆனால் இலங்கைத்





கொழும்பு நகர மண்டபம்-போட்டோ: கே. வி. என். போகன்.

தீவு அப்படி ஒன்றும் பெரிய நிலப்பரப்பு கொண்டது அல்ல. தமிழ் நாட்டில் உள்ள இரண்டு ஜில்லாக்களின் விஸ்தீரணம்கூட இருக்காது. இலங்கைத் தீவின் மொத்த விஸ்தீரணமே 25,332 சதுர மைல்கள்தான். ஏக்கர் அளவில் கூறினால் 1,62,12,480 ஏக்கர் விஸ்தீரணம் உடையது. 1,60,23,040 ஏக்கர்தான் நிலப்பரப்பு. மற்றப் பகுதி எல்லாம் தண்ணீர்ப் பரப்புதான். இருக்கும் நிலப் பரப்பிலும் மக்களுக்கு உபயோகப்படாத நிலப்பகுதியும் இன்னும் பல லட்சம் ஏக்கர்களுக்குக் காடுகளும் இருக்கின்றன.

இலங்கைத் தீவின் அகல நீளத்தை மைல் கணக்கில் சொன்னால் நீளம் வடக்கில் இருந்து தெற்கு வரை 270 மைல், அகலம் மேற்கே கொழும்பிலிருந்து கிழக்கே சங்கமம் வரை 140 மைல். இதையே மேல் மாகாணம். மத்திய மாகாணம், தென் மாகாணம், ஊவா மாகாணம். வட மாகாணம், கீழ்மாகாணம், வடமேல் மாகாணம், வடமத்திய மாகாணம் சப்ரகமுவ மாகாணம் என்று ஒன்பது மாகாணங்களாகப் பிரித்திருக்கிறார்கள்.

இலங்கைத் தலைநகரமான கொழும்பு நகரம் இருப்பது மேல் மாகாணத்தில். கொழும்பு நகரத்தின் ஜனத்தொகை நாலு லட்சத்து இருபத்து மூவாயிரத்துச் சொச்சம். சென்னை நகரின் ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதி கூட இல்லை. ஆனாலும் சென்னை நகரைவிட எத்தனையோ விதங்களில் பிரயாண வசதிகள் நிறைந்த அழகான நகரம் கொழும்பு என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இரண்டு மாடி பஸ்கள், டிராலி பஸ்கள் அதாவது ரப்பர் சக்கரம் போட்ட டிராம் கார்கள், சிறியதும் பெரியதுமான டாக்ஸிகள் எல்லாம் ஏராளமாக இருக்கின்றன.

கொழும்பு நகரில் ரிக்ஷாக்களைக் காண முடியவில்லை. இதைப் பற்றி விசாரித்ததில் ரிக்ஷாக்களைப் படிப்படியாகக் குறைத்து விட்டதாகக் கூறினார்கள். சென்னை நகரில் பஸ் ஸ்டாண்டுகளிலும், நாலு பேர்கள் கூடி நிற்கும் இடங்களிலும், கடற்கரையிலும், வீட்டு வாசலிலும் காணும் பிச்சைக்காரர்களைக் காண முடியவில்லை. இதைப் பார்க்கும்போது மனதுக்குத் திருப்தியாகவே இருந்தது. இந்த நிலை சென்னையில் என்று ஏற்படுமோ?

சென்னை பஸ்களில், நகரப் பெண்களுக்கு என்று சில இடங்கள் ஒதுக்கப்பட்டிருப்பது போலக் கொழும்பு நகரில் உள்ள பஸ்களிலும் டிராலிகளும் புத்த பிக்குகளும் என்று சில இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. புத்த பிக்குகள் பஸ்ஸுக்குள் ஏறினால் மக்கள் மிகுந்த மரியாதையுடனும் பக்தியுடனும் எழுந்து அவர்களுக்கு இடம் அளித்துக் கௌரவிக்கின்றனர். புத்த பிக்குகளிடம் காண்பிக்கும் இந்தக் கருணை பெண்மணிகளிடம் அவர்கள் காட்டுவதில்லை. இந்த நாகரிகத்தை அவர்கள் எப்பொழுது கற்றுக் கொண்டு கடைப்பிடிக்கப் போகிறார்களோ?

பற்களைப் பார்க்க முடியவில்லை!

சென்னை நகரில் ஆட்டோ ரிக்ஷாக்காரர்களுடனும், டாக்ஸிக்காரர்களுடனும் அல்லல்பட்டு அவதிப்பட்டவர்கள் கொழும்பு டாக்ஸிகளைப் பாராட்டாமல் இருக்கமாட்டார்கள்.

சென்னை ஜனத்தொகையையும், கொழும்பு ஜனத்தொகையையும் ஒப்பிட்டுக் கொழும்பில் இருக்கும் டாக்ஸி கார்களின் தொகையைக் கணிக்க முடியாது. சென்னை நகரில் ஓடும் டாக்ஸி தொகையை விட மூன்று பங்கு அதிகமான டாக்ஸிகள் ஓடுகின்றன. அடாடா! டாக்ஸி என்றால் அவையல்லவோ டாக்ஸிகள்!

டாக்ஸி வேண்டும் என்று டெலிபோனில் கூப்பிட்டுவிட்டு வாசலுக்கு வருவதற்குள் நமக்காக டாக்ஸி வந்து விடுகிறது. சிங்கள டாக்ஸிகள் ஒவ்வொன்றிலும் கம்பியில்லாத் தந்தி சாதனம் பொருத்தியிருக்கிறார்கள். நாம் டாக்ஸி வேண்டும் என்று டாக்ஸிகாரர்களின் தலைமைக் காரியாலயத்துக்கு டெலிபோன் செய்தால், அவர்கள் நாம் எங்கிருந்து டெலிபோன் செய்கிறோமோ அந்தஇடத்துக்கு அருகில் இருக்கும் டாக்ஸிக்காரரை நம்மிடம் அடுத்த நிமிஷமே அனுப்பி விடுகிறார்கள்.

நாம் கூப்பிடும் இடத்துக்கு அருகில் இருக்கும் டாக்ஸியை அவர்கள் எப்படிக் கண்டு பிடிக்கிறார்கள், தெரியுமா?

டாக்ஸிகார்களின் தலைமைக் காரியாலயம் குறிப்பிட்ட தெருவில், குறிப்பிட்ட நம்பர் உள்ளவீட்டுக்கு, குறிப்பிட்ட நபருக்கு டாக்ஸி கார் வேண்டும் என்று டெலிபோனில் சொல்கிறது. இது நகரில் உள்ள அத்தனை டாக்ஸியிலும் அதில் இருக்கும் ஒலிபெருக்கியின் மூலம் கேட்கிறது. உடனே குறிப்பிட்ட தெருவுக்கு அருகிலோ அல்லது அந்த இடத்திலேயோ இருக்கும் டாக்ஸி டிரைவர் டாக்ஸியில் இருக்கும் டெலிபோன் மூலம் தாம் அங்கு செல்லுவதாகச் சொல்லுகிறார். 'சரி' என்று அந்த டிரைவருக்கு உத்தரவு கொடுக்கப்பட்டு விடுகிறது. கொழும்பு டாக்ஸிகளில் பிரயாணம் செய்யும் நாம் இப்மாதிரி சம்பாஷணைகளை அடிக்கடி கேட்பதன் மூலம் இந்த விவரத்தை அறிந்து கொள்ள முடிகிறது.

இதுபோன்ற வசதி இலங்கையைத் தவிர இங்கிலாந்து நகரத்தில்தான் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இலங்கைத்தீவில் நான் கண்ட மற்றொரு அதிசயம் அங்குள்ள எல்லாருமே பல் அழ

குடையவர்களாயிருப்பதுதான். அவர்கள் பற்களைப் பார்த்துப் பார்த்து மகிழலாம். நான் இலங்கைத் தீவில் இருக்கும்போது அனேகமாக எல்லாருடைய பற்களையும் பார்த்தேன். பொதுக் கூட்டங்களில் பிரசங்கங்களைக் கேட்டு மகிழ்ந்த தமிழ் அன்பர்களின் பற்களைப் பார்த்தேன். விலங்கு வனத்தில் மிருகங்களின் பற்களைப் பார்த்தேன். கண்டிகோவிலில் புத்தரின் பல்லைக்கூடப்பார்த்தேன். ஆனால் ஒரே ஒரு இனத்தவர்களின் பற்களைமட்டும் என்னால் பார்க்க முடியவில்லை. டாக்ஸி டிரைவர்கள் பற்களைத்தான் சொல்கிறேன். அவர்கள் பற்களைப் பார்க்க வேண்டும் என்பதற்கு எவ்வளவோ முயன்றேன். ஒரு இடத்திலிருந்து ஒரு இடத்துக்குப் பிரயாணம் செய்தவுடன் டாக்ஸி மீட்டரில் உள்ள தொகைக்குச் சற்று அதிகமாகக் கொடுத்தேன். அந்த மனிதர் நான் கொடுத்த அதிகமான தொகையைப் பெற்றுக் கொண்டு வாயைத் திறந்து பல்லைக் காண்பிப்பார் என்று எதிர்பார்த்தேன். ஊஹூம்; அந்த டிரைவர் என்னை ஏமாற்றி விட்டார். அந்த

சமஸ்கிருதக் கல்லூரியின் பொன் விழா

தமிழகத்தில் பல்லவர் ஆட்சிக் காலத்துக்கு முன்பிருந்தே தமிழ் மொழியும் வடமொழியும் பேரரசர்களாலும் புரவலர்களாலும் பேணிப் போற்றிக் காப்பாற்றப்பட்டு வந்திருக்கின்றன. பாரத நாட்டிலே, பிரிட்டிஷார் அடியெடுத்து வைத்து ஆட்சிபுரியத் தொடங்கிய காலத்திலிருந்துதான் நம் நாட்டு மொழிகளுக்குச் செல்வாக்கு குறையலாயிற்று. எனினும் ஆங்காங்கே நம் தேச மொழிகளினிடத்தும் பாரதப் பண்பாட்டினிடத்தும் சிரத்தைகொண்ட பெரியோர்கள் இல்லாமற் போகவில்லை. அப்படிப்பட்ட பெரியோர்களில் முக்கியமாகக் குறிப்பிடப் படவேண்டியவர் மகான் வி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள். அவர் 1906-ம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பழைய குருகுல முறையில் மாணவர்கள் வடமொழி பயில சம்ஸ்கிருதக் கல்லூரியைத் தோற்றுவித்தார். அவர் தொடங்கிவைத்த அரும்பணியை அவரது புதல்வர்கள் ஸ்ரீமான்கள் கே. பாலசுப்ரமண்ய அய்யர் கே. சந்திரசேகரய்யர் ஆகியவர்கள் இன்றுவரை திறம்பட நிர்வகித்து வருகிறார்கள். அதன் பயனாக, பாரத நாட்டிலே பெரும் புகழ் பெற்று விளங்குகிறது!



இந்தக் கல்லூரியின் பொன் விழா ஜனவரி 27, 28 தேதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்றது. டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள், பாரதத்தின் உதவி ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் அவர்கள், ஸ்ரீ சிந்தாமண் தேசமுக் அவர்கள், டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர்கள் இந்தப் பெரு விழாவில் கலந்து கொண்டனர். தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த சம்ஸ்கிருத வித்பன்னர்களும் பண்டிதர்களும் தக்க முறையில் கௌரவிக்கப்பட்டனர். சம்ஸ்கிருதக் கல்லூரியின் பொன்விழாவை யொட்டி, ஒரு மலர் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் சமஸ்கிருதக் கல்லூரியின் பிறப்பு வளர்ப்பைப் பற்றிய வரலாறும், இன்னும் பல அரிய கட்டுரைகளும், பேராசிரியர்களின் படங்களும், கல்லூரியின் வளர்ச்சிக்குப் பாடுபட்ட கொடையாளிகளின் புகைப்படங்களும் மிளிர்கின்றன. சம்ஸ்கிருதக் கல்லூரியின் பொன் விழாக் காட்சிகள் சிலவற்றை மேலே படத்தில் காணலாம்.

மனிதர் தம் மணிபர்ஸைத் திறந்து வாடகைக்கு மேல் நான் கொடுத்த அதிகச் சில்லறையைத் திருப்பிக் கொடுத்தார். இன்னொரு முறை வாடகைத் தொகையை விடச் சற்றுக் குறைத்துக் கொடுத்தேன். அப்பொழுதும் அவர் வாயைத் திறந்து பல்லைக் காண்பிக்க வேண்டுமே? கிடையாது. டாக்ஸிமீட்டரைச் சுட்டிக் காட்டித் தமக்குச் சேர வேண்டியதை மட்டும் கணக்காகப் பெற்றுக் கொண்டார்.

கொழும்பு நகரில் டாக்ஸி டிரைவர்கள் சில்லறைக்காகப் பிரயாணிகளிடம் பல்லைக் காண்பிக்கும் பழக்கமே வைத்துக் கொள்ளவில்லை. கொழும்பு நகரின் செல்வ வளத்துக்கும் பணப் புழக்கத்துக்கும் அங்குள்ள டாக்ஸி வாடகை அப்படி ஒன்றும் அதிகமில்லை. சென்னை நகரைவிடக் குறைவுதான். மைலுக்கு எட்டணாதான்! ஆனாலும் கொழும்பு நகரில் எட்டணாவுக்குள்ள மதிப்பு சென்னையில் நாலு அணாவுக்குத்தான் சமமாகும். அவ்வளவு அதிகமான வித்தியாசம் இருக்கிறது இலங்கைத் தீவின் அதிசயமான வாழ்க்கைத்தரம்.

*** *** ***

கொழும்பில் நன்றாகச் சாப்பிடுவார்களோ நல்ல வீட்டில் வசிப்பார்களோ என்பதை எல்லாம் பற்றித் தெளிவாகச் சொல்ல முடியாது. ஆனால் எல்லாரும் மோட்டார்கார் வைத்திருக்கிறார்கள். சுமார் முந்நூறு ரூபாய் வருமானம் உள்ளவர்கள் கூடச் சொந்தத்தில் ஒரு மோட்டார் கார் வைத்திருக்கிறார்கள்.

காரணம் இலங்கை சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு கார் வாங்குவதற்கு வேண்டிய ரூபாய் கடனாகக் கொடுத்து உதவுகிறது. அது போலவே இலங்கையில் உள்ள மோட்டார் கம்பெனிகள் யாருக்கு வேண்டுமானாலும் மாதத் தவணையில் கார் விற்பனை செய்கின்றன. கொழும்பு கடை வீதிகளில் கார்கள் கண்ணுக்கு எட்டிய தூரம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் காட்சியைப் பார்த்தபோது எனக்கு ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மகாசபைதான் நினைவுக்கு வந்தது.

மாலையில் கடற்கரைக்குச் சென்றேன். சென்னை கடற்கரை அழகானதா, கொழும்பு கடற்கரை அழகானதா என்று கேட்டால் சென்னை கடற்கரையைப் போலவே கொழும்பு கடற்கரையின் அழகும் ஒரு விதத்தில் சிறப்புடையதுதான் என்று சொல்லுவேன். சென்னை கடற்கரையில் நீண்ட நெடுந்தூரத்துக்குக் காணும் வெண் மணல் பரப்பும், அழகுமிக்க கடற்கரையும் இங்கு இல்லை. ஆனால் கடற்கரை அலை மோதும் இடத்துக்கு வெகு சமீபத்திலேயே மனிதர்கள் நடப்பதற்குரிய அருமையான சாலை இருக்கிறது. அதற்கப்புறம் விசாலமான பசும் புல்தரை. அதையும் தாண்டி அழகு மிக்க பெரிய மோட்டார் சாலை.

சென்னை நகரில் காண முடியாத இன்னொரு காட்சி இங்கு விசேஷமானது. சென்னை கடற்கரையில் தமிழ்நாட்டு மக்களை மட்டும் தான் பெரும்பாலும் காணலாம். ஆனால் கொழும்பு கடற்கரையில் தமிழ் மக்கள், சிங்கள மக்கள், மேல்நாட்டு மக்கள், இன்னும் மலேயா, ஜப்பான், சைனா போன்ற உலக மக்களின் கூட்டம் உலவிக் கொண்டிருக்கும்.


சிங்களப் பெண்கள் விதம்விதமான ஆடைகளை அணிந்து கொண்டு உல்லாசமாக நடப்பதையும், புருஷர்களும் குழந்தைகளும் குதூகலமாகச் செல்வதையும் பார்த்து மகிழலாம். பொதுவாக, கொழும்பு கடற்கரைக் காட்சி பார்த்து மகிழவேண்டிய அற்புதமான காட்சி. இலங்கைத் தலைநகரமான கொழும்பில் இருந்துதான் இன்று சிங்கள மந்திரிகள் இலங்கையில் கருணை ஆட்சி புரிந்து வருகிறார்கள். கொழும்பு நகரைப் போலவே சரித்திரமும் வரலாறும் போதிக்கும் பல நகரங்கள் இலங்கைத் தீவு முழுவதிலும் இருக்கின்றன. ஏன், கொழும்பு நகரிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் சில சரித்திர முக்கியம் நிறைந்த நகரங்கள் காட்சி அளித்துக் கொண்டிருக்கின்றன.

கொழும்பு நகரையும் அதன் செல்வ வளத்தையும் பார்த்த பிறகு, "இதை விடச் செல்வ வளம் நிறைந்த பகுதி ஈழத்தில் எங்கே இருக்கப் போகிறது?" என்று எண்ணினேன். அது எவ்வளவு தவறானது என்பதை ஈழத்தாய் எனக்கு அறிவுறுத்தினாள்.

அவ்விதம் ஈழத்தாய் அறிவித்த விந்தைகளை நாளைய தினம் காண்போம். ரத்தினபுரியில் நவரத்தினங்கள் விளையும் அதிசயத்தையும், பூமிக்குள் இருந்து அதை எடுக்கும் ரத்தினச் சுரங்கங்களையும் பார்ப்போம். (தொடரும்)

ஒலியும் ஒளியும்






ஒலித்துறையிலும், ஒளித்துறையிலும் பிலிப்ஸ் கம்பெனியார் நம் தேசத்துக்குச் செய்து வரும் ஒப்பற்ற சேவைகள் யாரும் அறிந்தவை. விதம் விதமான விளக்குகள், அவற்றுக்கு வேண்டிய பல்புகள், நவீன முன்னேற்ற அம்சங்களைக் கொண்ட ரேடியோக்கள், ரேடியோ கிராம்கள், டெலிவிஷன் காட்சிகள், இவற்றை எல்லாருக்கும் விளங்கக் கூடிய முறையில் கவர்ச்சிகரமாகக் கண்காட்சியில் அமைத்து மொழி மூலமாகவும் எழுத்து மூலமாகவும் விளக்கிக் காட்டினார்கள். பிலிப்ஸ் விற்பனையுடன் சேவையும் ஒரு அம்சமாக இணைந்து செயல்படும் முறையும் போற்றத் தக்கது.

சென்னை ராஜாஜி ஹாலில் 23-1-56 அன்று பிலிப்ஸ் அகில இந்திய ரேடியோ, விளக்கு ஐந்தாவது மகாநாடு வெகு விமரிசையாக நடந்தேறியது. அதையொட்டி மவுண்ட்ரோட் 'பிலிப்ஸ் ஹவுஸ்'ல் நடைபெற்ற கண் காட்சியில் பிலிப்ஸ் கம்பெனியாரின் உற்பத்திகள் அனைத்துமே இடம் பெற்றிருந்தன.

மகாநாட்டையும் கண்காட்சியையும் வெற்றிகரமாக நடத்திய பிலிப்ஸ் ரேடியோ கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ எப்.எப்.வான்ரிஜின் அவர்களையும் மானேஜர் ஸ்ரீ வி. ஆர். லட்சுமிரதனையும் விளம்பர அதிகாரி ஸ்ரீ வி. நரசிம்மனையும் பெரிதும் பாராட்டுகிறோம்.




வாழ்க்கையில்
நீங்கள்
பெறுவதென்ன?
விளங்கும் வீரியமா
அல்லது
வாழ்க்கையின் சந்தோஷத்தை கவலை, தெம்பின்மை, சிரமம் முதலியன கெடுக்காமல் காத்துக்கொள்ளுங்கள். வாழ்க்கையில் உண்மை வெற்றி தெம்பினுல்தான் ஏற்படும்—ஸனடோஜன் புதுபலம் அளித்து, உடல்வலிமை மனசக்தி அதிகரிக்கச் செய்கிறது. 25,000 த்துக்கு மேற்பட்ட வைத்தியர்கள் அதன் அபூர்வ சக்தியளிக்கும் குணத்திற்கு அத்தாட்சி அளிக்கிருர்கள்.
ஸனடோஜன்
-மிக்க உயர்ந்த பால் டானிக்



ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

65

வாழ்க்கையில் எவ்வளவோ அபாயங்கள். எப்போதும் மரண பயம். எப்படி யிருந்தபோதிலும் மெய்ப் பொருளைப் பற்றி நம்முடைய அசிரத்தைக்கு அளவே இல்லை. அகம்பாவமோ அதற்கும் மேல். வாழ்க்கையில் ஒரு பயமும் இல்லாமற் போய் விட்டால் இன்னும் எவ்வளவு அதிக அகம்பாவம் கொள்வோம்!

[யங் இந்தியா 7—7—27]

ஹிம்சையை நாம் வழக்கப் படுத்திக் கொண்டு விட்டபடியினால் கொலை என்பது வெகு எளிதாகி விட்டது. சிறு காரணங்களுக் கெல்லாம் பிற உயிர்களைக் கொல்கிறோம். மக்களுமே ஒருவரை யொருவர் கொல்லத் தயங்குவதில்லை. உண்மையில் நாம் தெய்வபக்தி கொண்டிருந்தால், அன்பும் அருளுமே அவன் வடிவம் என்று ஆண்டவனை நாம் நம்பினோமானால், இப்படி ஜீவஹிம்சை செய்வோமா? நடுங்க மாட்டோமா? உயிருக்கு பயந்து விஷ ஜந்துக்களையும் பாம்புகளையும் பூச்சிகளையும் கொல்கிறோம். நானுமே இவ்வாறு செய்கிறேன். ஆயினும் எனக்கு அறிவும் தைரியமும் அருள வேண்டுமென்று இடைவிடாமல் ஆண்டவனைப் பிரார்த்திக்கிறேன். உயிர்களை மாய்க்கும் அவசியமில்லாமல் வாழும் திறமையை அடைய வேண்டுமென்று இடைவிடாமல் இறைஞ்சுகிறேன். ஆண்டவனிடம் நான் கோரும் அருளை, மற்ற உயிர்களிடம் நான் காட்டும் சக்தியை அடைய வேண்டுமென்று எப்போதும் பிரார்த்தித்து வருகிறேன். [ஹரிஜன் 9—1—37]

உயிர்களுக்குள் பரிசுத்தமான பிராணி பால்தரும் பசு. எல்லா உயிர்களுக்குமாகச் சேர்ந்து மனிதனை இறைஞ்சுகிறது, "நம்மைக் கொல்ல வேண்டாம்" என்று. "உயிர்களுக்குள் சிறந்த வடிவம் எடுத்திருக்கிறாய், மனிதனே! நமக்கு அருள்வாய். கொல்லாதே" என்று எல்லாப் பிராணிகளுக்குமாகப் பசு நம்மைப் பார்த்துக் கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு கெஞ்சுவதை அதன் கண்களில் காணலாம். "நம்மைக் கொல்லவா நீ பிறந்தாய்? நம் ஊனைத் தின்று பிழைக்கவா ஆண்டவன் உன்னைப் படைத்தான்? எங்களுக்கு நண்பனாக இருக்க மாட்டாயா? எங்களுக்குக் காப்பாக இருக்க மாட்டாயா?" என்று தன் கண்கள் வழியாய்ப் பசு நம்மிடம் மன்றாடுகிறது.

[யங் இந்தியா 26—6—24]

கருணைமூர்த்தியான பசுவை நான் பூஜை செய்வதை விட மாட்டேன். உலகமெல்லாம் எதிர்த்தாலும் அது பூஜைக்கு உரியது என்று உறுதியாகச் சொல்வேன். [யங் இந்தியா 1—1—25]

இனாம்





மறந்துவிடாதீர்கள்! "ஓ.கே." வனஸ்பதி டின்களில் பரிசுக் கூப்பன்கள் உள்ளன. அவற்றிற்குப் பதிலாக அழகான அமைப்புடன் கூடிய ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்களை வெகுமதியாகக் கொடுக்கிறோம். "ஓ. கே." வனஸ்பதி கூப்பன்கள் சேருங்கள். உங்களுக்குப் பிடித்த பரிசைப் பெறுங்கள்.

மேலும் விவரங்கள் அறிய, உங்கள் அருகில் உள்ள "ஓ. கே." வியாபாரியிடமிருந்து படங்களுடன் கூடிய 'போல்டரை' வாங்கிப் பாருங்கள்.

OK ஓ.கே வனஸ்பதி

ஒரு அவுன்ஸிற்கு 700 I.U. வைட்டமின் 'A' கொண்டது

1, 2, 5, 10 பவுண்டு டின்களில் கிடைக்கிறது.

தயாரிப்பவர்கள்:

தி ஈஸ்ட் ஏஷியாடிக் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், மதராஸ்-1.

EP



மாலைவல்லியின் தியாகம்

அத்தியாயம் 7

பிக்ஷுவின் ஏமாற்றம்!

புத்தபிக்ஷுணி கடற்கரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தாள். கலங்கமாலரையரும் பூதுகனும் அவள் செல்வதையே வியப்புடன் நோக்கினார். இந்தச் சமயத்தில் அந்த புத்த விஹாரத்திலிருந்து வேறொரு உருவமும் வெளியேவந்து கொண்டிருந்தது. அந்த உருவம் அவர்களுக்குச் சமீபம் வந்ததும் அது யாரென்று அவர்கள் தெரிந்து கொண்டார்கள். அன்று பூசை வேளையில் அந்தப் பெண்மீது எந்த பிக்ஷு குற்றம் சுமத்தினாரோ, அவரேதான் என்றுதெரிந்து கொண்டதும் அவர்களுக்கு வியப்பு ஏற்படவில்லை. அந்த பிக்ஷு முன்னால் சென்ற அந்தப் பெண்ணைப் பின்பற்றிச் செல்லுகிறவர் போல் அந்தச் சோலையைத் தாண்டி நடந்தார். பூதுகன் அலட்சியமாகச் சிரித்துக்கொண்டே, ''கலங்கமாலரையரே! இதென்ன துறவு வாழ்க்கை? ஒரு பெண்ணைப் பற்றிய கவலை

கி.ரா.கோபாலன்

தான் ஒரு துறவியின் கொள்கையா? ஒரு நடத்தையை உளவு பார்த்து அவன் மீது குற்றம் சுமத்துவதுதான் ஒரு புத்த பிக்ஷுவின் இலட்சியமா? இப்படிப்பட்ட கவலையில் மூழ்கி இருக்கும் ஒரு பிக்ஷு எப்படிக் கடைத்தேற முடியும்? புத்த பெருமான் புத்த வக்கத்தில் சொல்லுகிறார். 'கண்ணைக் காத்தல் நலம்; காதைக் காத்தல் நலம். உள்ளத்தைக் காத்தல் நலம்; வாக்கைக் காத்தல் நலம்: இவை எல்லாவற்றையும் காத்துக் கொள்ளும் பிக்ஷு சகல துக்கங்களிலிருந்தும் விடுபட்டுவிடுகிறான்' என்று. கலங்கமாலரையரே! பாவம்! இந்த பிக்ஷு எதைக் காக்கப் பாடுபடுகிறார் என்பது உங்களுக்குப் புரிந்து விட்டதா?''

ஏதோ யோசனையில் இருந்தவர் போலிருந்த மாலரையர் தூக்கத்திலிருந்து விழித்தவர் போல், ''பூதுகா! இதில் ஏதோ ரகசியம் இருக்கிறது. இதை எப்படியேனும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும்!'' என்றார்.



'' அது ஒரு கடினமான காரியமல்ல. நீங்கள் ஒரு புத்த பிக்ஷு என்ற நிலையில் அவர்களைப் பின் தொடர்ந்து போவது உசிதமாகாது. நீங்கள் உங்கள் இருப்பிடத்துக்குச் செல்லுங்கள். நான் இதைக் கவனித்துக்கொள்ளுகிறேன்'' என்றான்.

மாலரையருக்கு அவனுடைய யோசனை மிகவும் நலமானதாகவே பட்டது. '' ஆம்! உன் யோசனை சிறந்ததுதான். நான் போகிறேன். நீ இப்பொழுதே அவர்களைப் பின் தொடர்ந்து சென்று விஷயத்தை அறிந்து கொள்வது நலம்'' என்றார்.

பூதுகன் அதற்கு மேலும் அங்கு தாமதிக்கவில்லை. அந்த பிக்ஷுணியைத் தொடர்ந்து சென்ற பிக்ஷுவின் பின்னால் அவனும் நடந்தான்.

இளம் பருவத்தினளான அந்த பிக்ஷுணி அந்த நிலவிடையே நிழல் உருவம் நகர்ந்து செல்வதுபோல் அந்தச் சோலையைத் தாண்டி, கடற்கரையைக் கடந்து, பட்டினப்பாக்கத்தை நோக்கி நடந்தாள். அவளைத் தொடர்ந்து சென்ற பிக்ஷுவும் அவள் எங்கே செல்கிறாள் என்பதை அறிய நினைப்பவர் போல் அவளுக்குப் பத்தடி பின்னால் நடந்து கொண்டிருந்தார். பூதுகன் அந்த பிக்ஷுவுக்குப் பத்தடி பின்னால் நடந்து கொண்டிருந்தான். அந்த அழகான நிலவொளியில், அகன்ற வீதிகளும், அழகான கட்டடங்களும் நிறைந்த அந்தப் பட்டினப்பாக்கம், அந்தச் சமயத்திலும் அமர உலகம் போலக் காட்சியளித்தது என்றால் கரிகாலன் போன்ற பேரரசர்கள் அங்கு வாழ்ந்த நாளில் எப்படி இருந்திருக்க வேண்டும் என்று சொல்லவும் வேண்டுமா? வானளாவி நிற்கும் மாட



மாளிகைகளோடு கூடிய ராஜ வீதிகள், ரத வீதிகள், பெரிய வணிகர்களும் பிரபுக்களும் வாழ்ந்த வீதிகள், அமைச்சர்கள் சேனாதிபதிகள் முதலியோர் வசித்த வீதிகள், ரத சாரதிகள், போர் வீரர்கள், யானைப் பாகர்கள் முதலியோர் வாழ்ந்த வீதிகள், அதற்கடுத்து வேதியர்கள், சோதிடர்கள் முதலியோர் வசித்த வீதிகள், அதை அடுத்து இசை வல்லுனர்கள், நாட்டியக் கணிகையர்கள் முதலியோர் வாழ்ந்த வீதிகள், ஒன்றுக்குப் பின் ஒன்றாக அந்த வீதிகள்தான் எவ்வளவு அழகாக அமைக்கப்பட்டிருந்தன! இத்தகைய அழகிய நகரைச் சிருஷ்டிக்கக் கரிகாலன் எத்தகைய பாடு பட்டானோ! ஒவ்வொரு வீதியிலும் அந்த வீதிகளில் உள்ள ஒவ்வொரு வீடும் அங்கு வாழ்பவர்களின் தகுதிக்கு உரிய முறையில் அமைக்கப்பட்டிருந்தது. இந்த வீதிகளிடையே அழகான தேவாலயங்களும், யானை, குதிரை முதலியன கட்டுவதற்கான கூடங்களும் சிறந்த முறையில் அமைக்கப்பட்டிருந்தன. அமைதி நிறைந்த அந்த நடுநிசிப் பொழுதில் அந் நகரின் பூரண எழிலும்—அழிவுற்ற சாம்ராஜ்யத்தின் பெருமைகளை யெல்லாம் ஏதோ கனவில் நினைவுக்குக் கொண்டு வருவது போலத்தான் இருந்தது. ஒரு வம்ச அரசர்களின் சாம்ராஜ்யம் அழிந்து விட்டது. ஆனால் இன்னும் அந்த சாம்ராஜ்ய பாரம்பரியத்தில் வந்த பெருமக்கள் நகரில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். எந்தெந்த வீதியில் எத்தகையவர்கள் இருந்து வாழ்ந்தார்களோ, அத்தகையோரின் சந்ததிகள்தான் அந்தந்த வீதிகளில் வாழ்ந்து வந்தனர். அமைச்சரின் மகன் அமைச்சனாக இல்லா விட்டாலும், போர் வீரனின் மகன் போர்வீரனாக இல்லா விட்டாலும் சாம்ராஜ்யம் அழிந்தும் அதன் பெருமை அழியாதிருப்பது போல, தங்கள் முன்னோரின் பெருமை தங்களுக்கு இல்லா விட்டாலும் அத்தகைய வீரமும் திறமையும் உள்ளவர்களாகத்தான் இருந்தனர், கடந்த நாட்களைப் போன்ற நாட்களும் திரும்ப வரும் என்ற கனவோடு.

அந்த இளம் பிக்ஷுணி பட்டினத்து ராஜ வீதிகளைத் தாண்டி, ரத வீதி தாண்டி, இன்னும் பல வீதிகளையும் கடந்து, இசைவாணர்களும் நாட்டியக் கணிகையர்களும் வாழும் வீதிக்கு வந்தாள். ஒரு காலத்தில் கோவலனும், மாதவியும் மகிழ்ந்திருந்த வீதியல்லவா அது? எடுக்க எடுக்கக் குறையாது அன்னமளிக்கும் அக்ஷய பாத்திரத்தை ஏந்தி உலகில் பசிப்பிணியைத் தீர்த்துப் புரட்சி செய்து காட்டிய மணிமேகலை பிறந்த வீதியல்லவா அது! இப்பொழுதும் அந்தப் பெருமைகளை, எழில் மிக்க உல்லாச கூடங்களையும் மாடங்களையும் தழுவி நிற்கும் நிலவு சொல்லிச் சொல்லி மன ஆதங்கமடைவது போல் தானிருந்தது.

அந்த இளம் பிக்ஷுணி நாட்டியக் கணிகையர்கள் வாழும் அந்த வீதியை அடைந்தது. அவளைத் தொடர்ந்து வந்த பிக்ஷுவுக்கு ஆச்சர்யத்தை அளித்ததோ இல்லையோ பூதுகனுக்குச் சிறிது ஆச்சரியத்தைத்தான் அளித்தது. இத்தகைய இளம் பருவத்திலுள்ள ஒரு பிக்ஷுணி இந்த வீதியை அடைந்தது தனக்காகக் காத்திருக்கும் தன் காதலனை அடைய வேண்டும் என்பதற்காகத்தான் இருக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்து விட்டான்

பூதுகன். அவனுக்கு இவ்வளவு நேரமும் உளவு பார்ப்பதில் இருந்த ஆர்வமும் சுவாரசியமும் குறைந்து விட்டது. 'இதென்ன? சகஜம்! இந்தப் பருவத்தில் இதை யார் கட்டுப்படுத்த முடியும்?'


பௌத்த பிக்ஷுணி என்பதால் ஒரு இளம் வயது நங்கையின் மனத்திலிருந்து இத்தகைய ஆசைகள் அழிந்து விடுமா? இதைப் பின்தொடர்ந்து வந்து உளவு பார்த்துத் தெரிந்து கொள்வதனால் என்ன லாபம்? உலகத்தில் ஒவ்வொரு ஜீவனும் இன்பம் அனுபவிக்கத்தானே பிறந்திருக்கின்றன? பௌத்த பிக்ஷுணி இன்ப வேட்கையைத் தீர்த்துக் கொள்வதனால் என்ன பாவம் இருக்கிறது? இந்த உலகத்தில் இன்பம் அனுபவிக்கும் வரையில்தான் சுவர்க்கம். துக்கம் அனுபவிக்கும் வரையில் இதுதான் நரகம். சுவர்க்கம் என்று தனியாக எதுவும் இல்லை, நரகம் என்று தனியாக எதுவும் இல்லை. கடவுள், மதம், ஆத்மா, சுவர்க்கம், நரகம், தவம், விரதம், தியானம், பூசை என்றெல்லாம் மனிதன் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொண்டு ஏன் உழல வேண்டும்? இதிலிருந்தெல்லாம் தங்கள் மன இச்சைக்காகச் சிறிது விலகி நிற்பவர்களை மனிதன் ஏன் தூஷிக்க வேண்டும்? ஏன் திரஸ்கரிக்க வேண்டும்? புத்தர் பெருமான் உலகத்தின் துக்கத்தையெல்லாம் துடைத்தெறிவதற்குத்தானே முயன்றார்? பிறருடைய இன்பங்களுக்கு இடையூறாக நின்று அவர்களுக்குத் துக்கத்தையும் துயரத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டம் வகுத்தாரா? இந்த உலகில் பற்றை விட்டு இந்த உலகின் நலனுக்காகத் துறவு பூணும் மனிதர்களைத்தானே தம்முடைய சங்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று முயன்றார்? பருவத் துடிப்பு நிறைந்த இத்தகைய இளம் பெண்களையெல்லாம் பிக்ஷுணிகளாக்கிக்கட்டுப்படுத்தி அவர்களுடைய இன்ப வாழ்க்கையையெல்லாம் சீர் குலைக்க வேண்டுமென்று அவர் நினைத்தாரா? ஒரு இளம் பெண்ணைப் பற்றி முன்னதாகவே யோசிக்காமல் சங்கத்தில் அனுமதித்து அவளைப் பிக்ஷுணியாக்கிய பிறகு, அவளுடைய நடைமுறைகளைக் கண்காணிக்கப் புகுவது பின்புத்திதானே? இவள் ஒழுங்கு தவறியவள் என்றால் இவளைத் தொடர்ந்து இவளுடைய நடத்தைகளை உளவு பார்க்க முயற்சி செய்யும் அந்த பிக்ஷுவினுடைய யோக்கியதையைப் பற்றி என்ன சொல்வது? பிறருடைய தினசரி வாழ்க்கை முறையில் குறுக்கிடும் இந்த பிக்ஷுவை யல்லவா முதலில் விசாரித்துத் தண்டனை அளிக்க வேண்டும்? போகட்டும்—இந்தப் பயித்தியக்கார பிக்ஷுவைப்போல் நானும் ஏன் அந்தப்பெண்ணைப் பின்தொடர்ந்து உளவு பார்க்க வேண்டும்?

இவ்வாறு அவன் எண்ணியவனாக அப்பொழுதே அங்கிருந்து திரும்பிவிட நினைத்தான். ஆனால், அடுத்த கணம் அவனுக்கு மேலும் ஒரு பேராச்சர்யத்தைக் கொடுக்கும் வண்ணம் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அந்த பௌத்த பிக்ஷுணி அங்கொரு மாளிகையின் வாயிலையடைந்து கதவைத் தட்டிய போதுதான் அவனுக்கு இத்தகைய திகைப்பும் வியப்பும் ஏற்பட்டன. அந்த வீட்டின் கதவு தட்டப்பட்டவுடனே திறக்கப்பட்டது. அவ்விளம் பிக்ஷுணி அந்த வீட்டுக்குள் நுழையவும் கதவு மறுபடியும் தாளிடப்பட்டு விட்டது.

அவளைத் தொடர்ந்து வந்த பெரிய பிக்ஷு மிகவும் ஏமாற்றம் அடைந்தவர் போல் தயங்கியபடியே அந்த வீட்டின் வாசலில் நின்றார். அந்த பிக்ஷுவைத் தொடர்ந்து வந்த பூதுகன் சிறிது ஆத்திரமும் வேகமும் கொண்டவன்போல் பிக்ஷுவின் பின்னால் வந்து அவருடைய தோளைப் பிடித்து உலுக்கினான். அந்த பிக்ஷு பேயால் அறையப்பட்டவர்போல் நடுங்கிய வண்ணம் திரும்பிப் பார்த்தார். நிலவொளியில் பூதுகனின் முகமும் அதில் நிறைந்திருந்த கோபமும், ஆத்திரமும் அவருக்கு நன்கு தெரிந்தன.

பூதுகன் ஏளனமாகச் சிரித்துக் கொண்டே, "அடிகள் என்ன இப்படிப் பார்க்கிறது? இந்த வேளையில் அதுவும் இந்த வீதிக்கு இப்படிப்பட்ட கோலம் தரித்தவர்கள் வரக்கூடாதென்பது மத தருமமாய் இருக்கலாம்; ஆனால், அது மனித தர்மம் என்று நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்—இது பாபமல்ல. ஒருவன் தன் இச்சையை அடக்கிக் கொண்டு, விரும்பும் இன்பத்தைத் துறந்து அடங்கி வாழ்வதுதான் மகா பாபம் என்பதுதான் என் சித்தாந்தம். அடிகள் அச்சப்படுவானேன்? தாராளமாகக் கதவைத் தட்டலாம்" என்றான்.

பிக்ஷு ஏதோ தடுமாறியவர் போல் பரபரவென்று விழித்தார். "நீ சொல்வது போல் நான் அத்தகைய விருப்பத்தைக் கொண்டு இங்கு வரவில்லை. நான் வந்தது வேறு காரணம். 'புலனடக்கத்தோடு, நிதான உணர்வுடனும், நல்லறத்திலே நாட்டத்துடனும், நிறைந்த வீரியத்துடனும், இன்பங்களை எதிர்பாராமல் வாழ்ந்து வருவோனை, பாறைகள் நிறைந்த மலையைச் சூறாவளி அசைக்க முடியாதது போல் மாறன் வெல்ல முடியாது' என்று ததாகதரே சொல்லி இருக்கிறார்" என்றார்.



உங்கள் கடிகார வியாபாரியிடம் 50,000 திறமைவாய்ந்த வேலையாட்கள் இருக்கின்றனர்

உங்கள் கடிகார வியாபாரி ஒற்றை ஆளாக தன் ஷாப்பில் வியாபாரம் செய்கிறார் என்று நீங்கள் எண்ணலாம். தவிர அவரிடம் எத்தனை பேர் வேலை செய்கிறார்களென்று உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம்-கண்களுக்குத் தென்படாமலிருக்கலாம். ஆனால் 50,000 திறமை வாய்ந்த வேலையாட்கள் பின்னணியிலிருந்து தேவையானபொழுது கடிகார வியாபாரிக்கும் உங்களுக்கும் உதவியளிக்க ஆர்வத்துடன் காத்திருக்கிறார்கள். ஜுவெலட்—லிவர் கடிகாரம் செய்வதில் விசேஷ பயிற்சி பெற்ற இந்த 50,000 கைத்திறன் வாய்ந்த நிபுணர்கள் ஸ்விட்ஸர்லாந்து கடிகாரத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். மூன்று நூற்றாண்டுகளாக கடிகாரத் தொழிலில் பரம்பரையாக ஆர்வம் செலுத்துவதால் அவர்களுடைய ரத்தத்திலேயே ஊறிக் கிடக்கின்ற இயற்கையான அறிவுத் திறன் சிறு விஷயங்களையும் நுணுக்கமாக ஆராயும் தன்மை இவைகளால் உலகிலேயே ஸ்விட்ஸர்லாந்து கடிகாரங்கள் பெயர் பெற்றவையாகிவிட்டன. தயாரிப்பாளரிடமிருந்து அணிபவரின் கையை அடையும் வரை, கடிகாரங்களை திறமை சாலிகளும், கவனமுள்ளவர்களும் கையாண்டு வருவதை ஸ்விட்ஸர்லாந்து கடிகாரத் தொழில் அதிபர்கள் கண்காணித்து வருகிறார்கள். ஆதலால்தான் இந்த 50,000 நிபுணர்களும் தங்களுடைய உதவியையும் ஆதரவையும் தகுதிவாய்ந்த கடிகார வியாபாரிக்கு அளிக்கின்றனர். எனவே சிறந்த கடிகாரங்கள் எவை என்பதை உங்கள்கடிகார வியாபாரி ஒருவர் மட்டுமே எடுத்துச்சொல்ல முடியும். சிறந்த கடிகாரத்தை தேர்ந்தெடுக்க வழிகாட்டியாக விளங்குவதோடு உங்களுக்குத் தேவையானபோது பயனளிக்கக் கூடிய முறையில் பணி ஆற்றுவார் என்பதும் நிச்சயம். உங்கள் கடிகார வியாபாரியின் அனுபவம் உங்களுக்கு ஆதரவு அளிக்கிறது.

ஜுவெல்கள் பொருத்தப்பட்ட ஸ்விஸ்—லிவர் கடிகாரம் ஒரு அவசியமான தேவைப் பொருளேயன்றி ஆடம்பரத்திற்கல்ல

ஸ்விட்ஸர்லாந்து கடிகார தயாரிப்பாளர்கள்

FHI-34-TAM



சென்னை நகரில் நடைபெற்ற குடியரசு தினக் கொண்டாட்டத்தில் விதம் விதமான அலங்கார ஊர்வலங்கள் நடைபெற்றன. இந்த அற்புத ஊர்வலத்தில் பல தொழில் ஸ்தாபனங்களும் குதூகலத்துடன் கலந்துகொண்டு ஊர்வலத்துக்குச் சிறப்பளித்தன. இந்த அலங்கார ஊர்வலத்தில் பங்கெடுத்துக் கொண்ட 'தெளிவ்' கம்பெனியின் வனப்பு வாய்ந்த படகைப் பக்கத்தில் இருக்கும் படத்தில் காணலாம். இந்த 'தெளிவ்' படகுக்குச் சென்னை சர்க்கார் இரண்டாவது பரிசு அளித்துக் கௌரவித்தனர்.

"ஓகோ! அப்படியா? அறிந்து கொண்டேன். அடிகளார் இத்தகைய வீதிகளுக்கு வர வேறு காரணம் என்ன இருக்கப் போகிறது? பிக்ஷை ஏற்க வந்திருக்கலாமோ? அதுவும் இந்த நடு நிசியில்...? பிக்ஷா பாத்திரமும் தங்கள் கையில் இல்லையே?" என்றான்.

பௌத்த பிக்ஷுவுக்கு அந்தச் சமயம் பூதுகனிடமிருந்து எளிதில் தப்ப முடியும் என்று தோன்றவில்லை. அந்தச் சமயம் அவனுக்கு நயமாகவே பதில் சொல்லி எப்படியாவது அந்த இடத்தை விட்டு அகன்றால் போதும் என்று அவருக்குத் தோன்றியது. "சங்கத்தைச் சேர்ந்த பௌத்த பிக்ஷுணி ஒருத்தி இங்கு வந்தாள். அவளைக் கவனிப்பதற்காகவே நான் இங்கு வந்தேன்" என்றார் சிறிது தயக்கத்தோடு.

பூதுகன் 'கலகல'வென்று ஒரு ஏளனச் சிரிப்புச் சிரித்தான். "பிக்ஷுக்கள் என்றால் பிக்ஷுணிகளைக் கவனிக்கத் தானே இருக்கிறார்கள்? இதில் ஒன்றும் தவறில்லை. அடிகளார் பிக்ஷுணியைக் கவனித்தாகி விட்டதா? அந்த பிக்ஷுணி எங்கேயோ?" என்றான்.

"அவள் இந்த வீட்டுக்குள் போய் விட்டாள். நான் போகிறேன். அவள் எங்கே வருகிறாள் என்று கவனிக்கத்தான் வந்தேன், அவ்வளவுதான்" என்று கூறினார் பிக்ஷு.

"அவ்வளவுதானா! இந்த வீட்டுக்குள்ளேயா சென்றாள்? நீங்கள் அச்சப்பட வேண்டாம். தாராளமாய் வீட்டுக் கதவைத் தட்டுங்கள். இன்னும் சிறிது தெளிய விஷயங்களைத் தெரிந்து கொண்டு விடலாம். அவளைத் தொடர்ந்து இவ்வளவு தூரம் வந்து விட்டு இவ்வளவு மாத்திரம் தெரிந்து கொண்டு போவது போதாது என்று நினைக்கிறேன்" என்றான் அவன் பரிகாசமாக.

பூதுகன் தன்னை மிகவும் விபரீதமான சூழ்நிலையில் சிக்க வைக்க நினைக்கிறான் என்பதை அவனுடைய ஏளனம் நிறைந்த வார்த்தை மூலமாக அறிந்து கொண்டார் அவர். அந்தச் சமயத்தில் அவனோடு அதிக நேரம் பேசிக் கொண்டிராமல் அவ்விடமிருந்து சென்று விட நினைத்தார். அவர் ஒரு விதமாகச் சமாளித்துக் கொண்டவராக, "நாங்கள்

எந்த வீட்டிலும், அதுவும் இந்த நேரத்தில் நுழையவே கூடாது. அது எங்கள் தருமத்துக்கு விரோதம். சங்கத்தில் சேர்ந்த ஒரு பிக்ஷுணி தருமத்துக்குப் புறம்பாக நடந்தால் அதனால் சங்கமே பாழாகி விடும். இப்படிப்பட்டவளைச் சங்கத்திலிருந்து விலக்குவதுதான் உத்தமமான காரியம். இந்த பிக்ஷுணியைப் பற்றிச் சிறிது சந்தேகம். அதைக் கவனிக்க வேண்டுமென்றுதான் வந்தேன். ஒரு பிக்ஷுணி இந்த நேரத்தில் தனக்குரிய இடமாகிய விஹாரத்திலிருந்து வெளியே வருவது சாதாரண காரியமா? எனக்கு அவளைப் பற்றித் தெரிந்தவரையில் போதும்-பௌர்ணமியன்று இரவு நடக்கும் பாபப் பிராயச்சித்த சடங்கான பாடி மோக்ஷத்தில் அவளைச் சங்கத்திலிருந்து நீக்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து விடுகிறேன்...'' என்று சொல்லி, அந்த இடத்திலிருந்து அதி வேகமாகக் கிளம்பினார் பிக்ஷு.

பூதுகன் அவரைத் தடுத்து நிறுத்திச் சிறிது நேரம் அவரோடு ஏதேனும் வம்பு செய்யலாம். ஆனால் அப்படிச் செய்ய அவனுக்கு மனமில்லை. அந்தச் சமயம் அவரை விட்டுவிடத் தீர்மானித்தான். அவன் சிரித்துக் கொண்டே, ''அடிகளாருக்குக் கடைசியாக ஒரு வார்த்தை — பூதுகன் என்ற நாஸ்திகனைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கலாம். அவன்தான் நான். எனக்கும் புத்தர், தருமம், சங்கம் இவைகளைப்பற்றிக் கொஞ்சம் தெரியும். ததாகதரின் உபதேச மொழிகளில் ஒன்றை மாத்திரம் உங்களுக்குச் சொல்லி உங்களைவிட்டு விடுகிறேன். 'ஒரு பிக்ஷு தன் சகல பாவங்களையும் தன்னிடமிருந்து நீக்கிக் கொள்ளவே எப்பொழுதும் முயற்சி செய்ய வேண்டும். எப்பொழுதும் தான் செய்யும் கர்மங்கள் நற்கர்மங்கள்தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவைகளுக்கு ஆதாரமாக இருப்பது அவன் உள்ளத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வது தான். மாதக்கணக்காக மூடன் தர்ப்பைப் புல்லின் முனையினால் துளித் துளியாக உணவை எடுத்து உண்டு வந்தாலும், இருதயத்தைச் சுத்தமாக வைத்துக் கொண்டு தர்மத்தை நன்கு அறிந்தவர்களின் பதினாறில் ஒரு பகுதிக்குக்கூட அவன் ஈடாக மாட்டான்'' என்றான்.

அந்த இடத்தில் அதிக நேரம் நின்றால் பூதுகன் ததாகதரின் மற்ற உபதேசங்களையும் தனக்கு எடுத்துச் சொல்ல ஆரம்பித்து விடுவானோ என்று பயங்கொண்டவர் போல அந்த இடத்தை விட்டு வேகமாக நடந்தார் அந்த பிக்ஷு. பூதுகன் அந்த பிக்ஷு தலைமறையும் வரையில் அங்கு நின்றபடியே பார்த்து விட்டு, அந்த மாளிகையின் வாயிற் கதவை வந்து தட்டினான். சிறிது நேரத்தில் கதவு திறக்கப்பட்டது. கையில் தீபம் ஏந்திய வண்ணம் வந்து வாயிற் கதவைத் திறந்த நடுத்தர வயதுடைய ஒரு பெண்மணி முகத்தில் மகிழ்ச்சிக்குறி தோன்ற, ''வாருங்கள்! உங்கள் வருகை அத்தி பூத்தாற் போல் இருக்கிறது. இரண்டு தலைமுறைகளுக்குப் பின் சோழ சாம்ராஜ்யத்தை இந்த நாட்டில் நிலை நிறுத்திய பிறகுதான் நீங்கள் வருவீர்களோ என்று நினைத்தேன்'' என்று உபசார வார்த்தைகள் சொல்லி அவனை உள்ளே அழைத்துச் சென்றதிலிருந்து ஏற்கனவே அவன் அந்த இடத்திலுள்ளவர்களோடு நெருங்கிப் பழகியவன் என்பதைத் தான் எடுத்துக் காட்டியது.

பூதுகன் சிரித்துக் கொண்டே, ''அது இருக்கட்டும், சுதமதி! வைகைமாலை எங்கே?'' என்றான்.

''அவளுக்கென்ன? ஆட்டத்திலும் பாட்டத்திலுமே காலத்தைக் கழித்து விடலாம் என்று நினைக்கிறாள். இரவு பகல் என்று பார்க்காமலேயே அப்பியாசம் நடக்கிறது. ஏனென்றால் அவள் ஆட்டத்தைப் பார்த்து இவள் பாட்டுக்குச் சோழ மன்னன் மான்யம் கொடுத்தது போல் யாராவது கொடுத்துவிடப் போகிறார்கள் அல்லவா?'' என்று பூதுகனிடம் சொல்லிக் கொண்டு வரும் போது அம்மாளிகையின் பின்கூடத்திலிருந்து இசையொலியும், நாட்டியமாடும் சதங்கை யொலியும் கேட்டன. பூதுகன் சுதமதியின் வார்த்தைகளைக் காதில் வாங்கிக் கொள்ளாதவன் போல் உள் கூடத்திற்குச் சென்றான்.

அது மிகவும் அழகான மாளிகை. வெளிக்கூடத்தைவிட உள்கூடம் நாட்டியம் ஆடுவதற்காகவே அரங்கு போல் மிகவும் அழகாக அமைக்கப்பட்டிருந்தது. கூடத்துக்கு நேராக அமைக்கப்பட்டிருந்த மேடையில் கம்பளங்கள் விரிக்கப்பட்டிருந்தன. புத்த பெருமான் தியானத்தில் அமர்ந்திருப்பது போலச் சலவைக்கல் படிவம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அமர உலகத்து அரம்பையர்களில் ஒருத்தியே அங்கு வந்து நடனம் ஆடுவது போல் வைகை மாலை நடனம் ஆடிக் கொண்டிருந்தாள். அது கூடப் பூதுகனுக்கு ஆச்சரியத்தை விளைவிக்கவில்லை. அவள் நாட்டியத்துக்குத் தகுந்தாற்போல் யாழை மீட்டிப் பாடிய ஒரு உருவம் தான் அவனைத் திகைக்க வைத்தது. (தொடரும்)


நேர்த்தியான துணிகள்...
மல்கள்
வாயில்கள்
லான்கள்
கேம்பிரிக்குகள்
தி பின்லே மில்களின் தொகுப்பு

பாகப் பிரிவினை

ஜி.கே.பொன்னம்மாள்

மார்கழி மாதத்துக் குளிர் தாங்க முடியவில்லை. போர்வையால் நன்றாக இழுத்துப் போர்த்திக் கொண்டு திரும்பிப் படுத்தேன். பஜனை கோஷ்டி வந்துகொண்டிருப்பதற்கு அறிகுறியாகப் பாட்டு, மிருதங்கம், ஜாலரா இவைகளின் ஓசை தெருக் கோடியிலிருந்து நன்கு கேட்டது.

அடுத்த நிமிஷம் "இந்தாருங்கள், எழுந்து வாசலுக்கு வாருங்கள். பஜனை கோஷ்டி வருகிறது" என்று எழுப்பினாள் என் மனைவி.

"பேஷாக வந்து விட்டுப் போகட்டும். அதற்கு நான் எதற்கு? நான் படுக்கையிலிருந்தபடியே, கடவுளை நினைத்துக் கொள்கிறேன்" என்றேன் விட்டுக் கொடுக்காமல்.

"நன்றாயிருக்கிறது. அப்படி என்ன தூக்கம்? சின்னக் குழந்தையா என்ன? தெருக்காரர்கள் பார்த்துச் சிரிக்கப் போகிறார்கள். எழுந்து முகத்தைக் கழுவிக் கொண்டு வாருங்கள்" என்று உத்தரவிட்டு விட்டு, 'பளிச்'சென்று விளக்கையும் போட்டு விட்டாள். விளக்கு வெளிச்சம் கண்ணை உறுத்தியது. வேறு வழியில்லாமல் எழுந்து வாசல் பக்கம் வந்தேன்.

கணபதி ஐயருக்கு வயது அறுபத்தைந்து இருக்கும். இந்த வயதிலும் அவர் தலையில் 'மப்ளரை'ச் சுற்றிக் கொண்டு கையில்ஜாலராவுடன் பக்திப் பாடல் பாடிக் கொண்டு வருவதைப் பார்த்து என்னால் வியக்காமல் இருக்க முடியவில்லை. என் மனைவி அவரைப் பார்த்து விட்டு என்னையும் ஒரு முறை முறைத்தாள். அந்தப் பார்வையில் "நீங்களும் இருக்கிறீர்களே இப்படி!" என்ற பொருள் நிறைந்திருந்தது. பஜனை கோஷ்டி தெருவைக் கடந்து சென்ற பிறகும் நான் வாசலிலேயே நின்று கொண்டிருந்தேன். என்ன என்னவோ யோசனைகள்!

அந்த இருள் பிரியும் வேளையில் காவேரியில் ஸ்நானம் செய்து விட்டு ஈரப்புடவையுடன்காவேரி மாமி வருவது தெரிந்தது. மாமி பக்கத்தில் வந்ததும் புன்னகை ததும்ப "என்ன சாமா, காலை ஏழு மணி வரையில் தூங்கும் வழக்கமுள்ள உன்னைக்கூட இந்தப் பஜனைப் பாட்டு எழுப்பி விட்டாற் போல் இருக்கிறதே" என்றாள்.

"அது இருக்கட்டும், மாமி! பத்து நாட்கள் முந்தித் தானே ஜுரம் என்று அவதிப்பட்டீர்கள்? இப்படி விடியற் காலையில் பச்சை ஜலத்தில் முழுகாவிட்டால் என்ன கெட்டு விடும்? உடம்பைக் கவனித்துக் கொள்ள மாட்டேன் என்கிறீர்களே?"

"எனக்கு உடம்புக்கு என்ன வந்து விடப் போகிறது? உன்னிடம் சொல்ல வேண்டும் என்று நினைத்தேன். பம்பாயிலிருந்து முரளி வந்திருக்கிறான். குழந்தை ஊருக்கு வந்து எட்டு வருஷங்களாகி விட்டன. உனக்குச் சிநேகிதனுச்சே. இன்றைக்குச் சாப்பாடெல்லாம் நம்ம வீட்டிலே வைத்துக்கொள்ளலாம். எங்கே உன் மனைவி பங்கஜம்? அவளையும் அழைத்துக் கொண்டு வந்து விடு. எனக்கு நிற்க நேரமில்லை. மறந்து விடாதே. கட்டாயம் வந்துவிடு" என்று சொல்லி விட்டுப் போனாள் காவேரி மாமி.

மாமிக்குத் தன்மகனிடம் எத்தகைய அன்பு? இந்தக் குளிரையும் பொருட்படுத்தாமல் காலையில் குளித்து நல்ல கறிவகைகள் சமைத்துத் தன் கையாலேயே மகனுக்குப் பரிமாற வேண்டும் என்ற ஆசை. ஆனால் மகனுக்கும் தாயிடத்தில் இதே அன்பு இருக்குமா?

முரளியை எனக்கு நன்றாகத் தெரியும். பி. ஏ. வரையில் என்னுடனேயே படித்து விட்டு, உத்தியோகம் பார்க்கப் பம்பாய்க்குப் போய் விட்டான். இப்பொழுது ஐந்நூறு ரூபாய் சம்பாதிக்கிறான். பணக்காரக் குடும்பத்தில் கலியாணமும் செய்து கொண்டான். படித்த, அழகிய மனைவி, மணி மணியாக இரண்டு குழந்தைகள். கடவுள் எந்தவிதத்திலும் அவனுக்குக் குறைவைக்கவில்லை. வேலையாகிப் பம்பாய் போனதிலிருந்து அவன் ஊர் வரவேயில்லை. தாயாருக்கும் எப்பொழுதாவது இரண்டு வரி எழுதுவான். அதுவும் "நம்ப தெரு சீனு பம்பாய்க்கு வரும் போது நல்ல புளியாகக் கொஞ்சம் கொடுத்து அனுப்பு. வடுமாங்காயும் கறி வடாமும் மறந்து போய் விடாதே. உன் கையால் செய்த முறுக்குசாப்பிடவேண்டும் என்று உன் நாட்டுப்பெண் ரொம்ப ஆசைப்படுகிறாள்" என்று இந்தப் 'பாணி'யில் தனக்குவேண்டியதையே எழுதியிருப்பான். இந்தக் கடிதத்தைப் பார்த்ததும் காவேரி மாமிக்கு ஆனந்தம் தாங்காது. உடனே பட்சணம் செய்து, ஊறுகாய் போட்டுக் கொடுத்தனுப்பினால் தான் அவளுக்கு நிம்மதி ஏற்படும்.



காவேரிமாமிக்கு மூன்று குழந்தைகள். மூத்த பிள்ளை முரளி. இரண்டாவது பெண் பகவதி. அவள் கல்யாணமாகி இரண்டு

வருஷங்களுக்கெல்லாம், கணவனை இழந்து வீட்டுக்கே வந்துவிட்டாள். அவளுக்குப் புக்ககத்திலும் சொத்து ஒன்றும் கிடையாது. மூன்றாவது பிள்ளை பாலு, ஊரிலேயே நில புலன்களைப் பார்த்துக் கொண்டு தங்கி விட்டான். இவன் சுபாவம் முரளிக்கு நேர் எதிரானது. அம்மாவை விட்டு ஒரு கணம் கூடப் பிரியமாட்டான். 'அக்கா, அக்கா' என்று பகவதியிடமும் அன்பு அதிகம். காவேரி மாமியின் கணவர் இறந்துபோகும் போது ரொக்கமாக இரண்டாயிரம் ரூபாயும், வேண்டிய நிலபுலன்களும் மாமி பேரிலேயே எழுதிவைத்து விட்டுத்தான் போனார். பாலு தன் மாமா பெண்ணையே கல்யாணம் செய்து கொண்டு ஊரோடு தங்கிவிட்டான்.

★

இப்போது முரளி வந்திருப்பதிலும் விசேஷம் இருக்கும். அவனுக்கு ஏதாவது காரியம் ஆகவேண்டியிருக்கும்; வந்திருப்பான். கண்டிப்பாகத் தாயாரைப் பார்த்து விட்டுப் போவதற்காக இராது என்று மனத்துக்குள் எண்ணிக் கொண்டேன்.

சரியாகப் பத்து மணிக்குக் காவேரி மாமியின் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தேன். ''வா, சாமா! எங்கே வராமல் இருந்து விடுவாயோ என்று நினைத்தேன்'' என்று வாய் நிறைய வரவேற்றாள் மாமி.

''வராமலிருப்பேனா, மாமி!'' என்றபடி நாற்காலியில் உட்கார்ந்தேன். முரளியும் குடும்ப விஷயம், ஆபீஸ் விஷயம் என்று ஏதேதோ பேசிக் கொண்டிருந்தான். முரளி இந்த எட்டு வருஷங்களில் நன்றாக வாட்டசாட்டமாக வளர்ந்து விட்டான். பேச்சிலும் தோற்றத்திலும், ''நல்ல உத்தியோகத்தில் இருக்கிறேன். பட்டணவாசி, நான்'' என்ற அழுத்தம் காணப்பட்டது. பேச்சுக்கு நடுவே, ''மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துக் கொண்டுவரக்கூடாதா'' என்று கேட்டேன்.

''குழந்தைகளுக்குப் படிப்பு கெட்டு விடும். மனைவிக்கு உடம்பு சரியில்லை. எதற்கு வீண் அலைச்சல்?'' என்று மழுப்பி விட்டான்.


சாப்பாடு முடிந்தது: முரளிக்கு அது பிடிக்கும், இது பிடிக்கும் என்று எத்தனையோ சமைத்திருந்தாள் காவேரி மாமி. சாப்பிட்டு விட்டு வெற்றிலை போட்டுக் கொண்டோம்.

''அம்மாவுக்கு உடம்பு பலஹீனமாக இருக்கிறது. நான் ஊருக்குப் போவதற்கு முன் பாகத்தைப் பிரித்து விட்டால் நன்றாக இருக்கும்; நீ என்றால் வாய் கட்டு விடுமா? எல்லாம் யோசித்துச் செய்ய வேண்டிய காரியம்'' என்று பேச்சை ஆரம்பித்தான் முரளி. அப்பொழுதுதான் அவன் வந்ததன் காரணம் எல்லோருக்கும் வெட்டவெளிச்சமாய்த் தெரிந்தது.

மாமியின் முகத்தில் ஈயாடவில்லை. சற்று நேரத்துக்கு யாரும் ஒன்றும் பேசவில்லை. முரளியின் மாமாதான் பதில் பேசினார். ''இதென்னடா முரளி, புது மாதிரிப் பேச்சாக இருக்கிறது? நீங்கள் இரண்டே பிள்ளைகள். இதற்குப் பாகம் என்ன வேண்டியிருக்கிறது? காவேரி, இந்த வீட்டையும் நம்ம புளியமரத்துக்கு அருகில் இருக்கிற இரண்டு ஏக்கரா நிலத்தையும் பகவதி பேருக்கு எழுத வேணும்னு சொல்லிக் கொண்டிருக்கிறாள். பகவதி யாரு? உனக்குத் தங்கைதானே! அந்தப் பெண்ணை நாளைக்கு யார் காப்பாற்றுவார்கள்? அவளுக்கு ஒரு வீடும் சாப்பாட்டுக்கு நெல்லும் இருந்ததானால், அவளைப் பற்றிக் கவலையில்லை. காவேரிக்கும் மனசு நிம்மதியாக இருக்கும்'' என்று கூறி நிறுத்தினார் முரளியின் மாமா.

''அதெல்லாம் முடியாது. பகவதியின் கலியாணத்தின்போதே வேண்டிய சீர்வகைகள் எல்லாம் செய்தாகி விட்டது. பணத்தையும் நகைகளையும் அவள் கணவன் குதிரைப் பந்தயத்தில் ஆடித் தொலைத்தான் என்றால் அதற்கு யார் பொறுப்பு? அவள் என்னுடனே பாலுவுடனே இருக்கட்டும். வீட்டையெல்லாம் அப்படி எழுதிவைக்க நான் விடமாட்டேன்'' என்று தீர்மானமான குரலில் சொன்னான் முரளி.

காவேரி மாமிக்குக் கண்களில் நீர் நிறைந்து விட்டது. ''அப்படியெல்லாம் சொல்லாதேடா முரளி. அவளுக்கு யார் கதி? நீ நன்றாகச் சம்பாதிக்கிறாய். உனக்கு இந்த



வீட்டைவிட நல்லதாக ஒன்று கட்டிக்கொள்ளலாமே?'' என்று சமாதானம் செய்தான்.

'' அம்மா! நீ ஏன் அவனுக்குப் பயப்படணும்? இந்தப் பணம் அப்பா உழைத்துச் சம்பாதித்தது. அதை உன் விருப்பப்படியே செய்து கொள்ள உரிமை உண்டு என்றும் அவர் எழுதி வைத்திருக்கிறார். உன் இஷ்டப்படி அதை யாருக்கு வேண்டுமானாலும் கொடுக்கலாம். பம்பாய்க்குப் போய் எட்டு வருஷங்களாகி விட்டன. இந்தப் பக்கம் திரும்பிப் பார்த்திருக்கிறானா உன் பிள்ளை? பணம் பங்கு கேட்க மட்டும் வந்துவிட்டான்'' என்று பொரிந்து தள்ளினான் பாலு.

இந்தச் சமயம் பகவதி மெதுவாகக் கூடத்துக்கு வந்தாள். அழுது அழுது அவள் கண்கள் சிவந்திருந்தன.

'' அம்மா, எனக்காக யோசிக்காதே. குடும்பத்தில் கலகம் வேண்டாம். அண்ணாவின் பங்கை அவனுக்குக் கொடுத்துவிடு. எனக்கு வேண்டியதை அப்பா செய்துவிட்டுத்தான் போனார். என் தலைவிதி இப்படி அலங்கோலமாகிவிட்டது. எனக்கு எதற்குப் பணமும் காசும்! கடவுள் விட்டபடி நடக்கும்'' என்று சொல்லி விட்டாள். அவள் குரலில் காணப்பட்ட உறுதி என்னைத் தூக்கிவாரிப்போட்டது.

''நீயாவது சொல்லேன், சாமா!'' என்று என்னைப் பார்த்துச் சொன்னாள் மாமி.

''நம் வீட்டுக் காரியங்களில் பிறர் தலையிட வேண்டிய அவசியமில்லை'' என்று முகத்தில் அறைந்தாற்போல் பேசிவிட்டான் முரளி.

எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. 'பள்ளிப் படிப்பில் உயிருக்கு உயிராக நட்புக் கொண்டிருந்த முரளியா என்னைப் பார்த்து இப்படிப் பேசுகிறான்! எல்லாம் பணம். பணத்தாசை வந்துவிட்டால் மனிதனைப் பேயாக மாற்றி விடுகிறது' என்று நினைத்துக் கொண்டே பேசாமல் எழுந்து வெளியே வந்து விட்டேன்.

மறுநாள் ஊரிலிருந்து என் மாமனார் 'கிறிஸ்துமஸ்' விடுமுறைக்கு வருவதாகத் தந்தி வந்தது. எட்டு மணிக்கே என்னை ஸ்டேஷனுக்கு அனுப்பிவிட்டாள் என் மனைவி. வேறு வழியின்றி விநாடிக்கொருதரம் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே, ஸ்டேஷனில் உலாவிக் கொண்டிருந்தேன். முரளியின் மாமாவும் பகவதியும் நின்று கொண்டிருப்பதைப் பார்த்துப்பிரமித்துப்போனேன்.

''முரளி ஊருக்குப் போய் விட்டானா? பகவதி எங்கு போகிறாள்?''என்று கேட்டேன்.

''என்னால் ஒருவருக்கும் கஷ்டம் வேண்டாம். அம்மாவுக்கு என்னைப் பற்றித்தான் கவலை. நான் எஸ். எஸ். எல். சி. பரீட்சையில் தேறியிருக்கிறேன். பட்டணத்திலே எங்கள் நாத்தனார் வீட்டிலிருந்து கொண்டு 'டிரெயினிங்' படித்து எப்படியோ ஒரு உபாத்தியாயினி வேலை சம்பாதித்துக் கொண்டு விடலாம். இந்த யோசனையை எங்க நாத்தனார் அன்றைக்கே சொன்னாள். நான்தான் நமக்கு அண்ணா இருக்கிறான், தம்பி இருக்கிறான், பணமும் இருக்கிறதென்று அவள் பேச்சைக் கேட்கவில்லை. நேற்றைக்கு ஒரு நொடியில் அண்ணா என் நிலைமையை எடுத்துக் காட்டி விட்டான். இதனால் எனக்கு வருத்தமே இல்லை. குடும்பத்தில் வீணாகச் சண்டை எதற்கு?'' என்று பீறிட்டுக் கொண்டு வரும் அழுகையை அடக்கிக் கொண்டு பகவதி கூறினாள். பிறகு இருவரும் வண்டியில் ஏறிக் கொண்டார்கள்.

இரண்டு நாட்கள் விசேஷம் எதுவுமில்லாமல் சென்றன.

'' பணம் இருந்தாலும் கஷ்டம், இல்லாவிட்டாலும் கஷ்டம். முரளி பாகம் பிரித்துக் கொண்டு விட்டானாம். வீட்டை விற்றுப் பணமாகக் கொடுத்தால் போதும் என்றானாம். பாலு வீட்டை வைத்துக் கொண்டு பணத்தை அண்ணனுக்குக் கொடுத்து விட்டான். பகவதி பட்டணம் போய் விட்டாள். காவேரி மாமி கண்ணீர் விடுகிறாள்'' என்றாள் என் மனைவி சாதம் போட்டபடியே.

'அதெல்லாம் மாப்பிள்ளை, இந்தக் காலத்தில் பெற்றவள் அதற்கு மேல் எதிர்பார்க்கக் கூடாது. இந்தக் கிழவிக்கு என்ன வேணும்?'' என்று என் மாமனார் நியாயம் பேசினார்.

நாட்கள் ஊர்ந்து சென்றன. எதிலும் மாறுதல் இல்லை. கோயில், குளம், வயல், கிராமம் எல்லாம் அப்படியே இருந்தன. ஆனால் காவேரி மாமி மட்டும் மாறி விட்டாள். முன் இருந்த சிரிப்பும் சந்தோஷமும் எங்கோ மறைந்து விட்டன. தன் குழந்தைகளின் மன வேற்றுமையைக் கண்டு, கதி கலங்கி மனம் தளர்ந்து விட்டாள். பாலுவிடம் கூடச் சரியாகப் பேசாமல் எந்நேரமும் ''எனக்கு இன்னும் காலம் வரவில்லையே? கடவுளே, என்னை அழைத்துக் கொண்டு என் கவலைகளை அகற்றி விடேன்'' என்று மனம் உருக வேண்டிக் கொள்வாள்.

ஒரு வருஷம் ஓடி மறைந்தது. மார்கழி மாதக் குளிர் மறுபடியும் வந்து விட்டது. கம்பளியால் மூடிக் கொண்டு வாசலில் வந்து நின்றேன்.

'' இதோ பாருங்கள், காவேரி மாமியின் பிள்ளை முரளி இறந்து விட்டானாம். தந்தி வந்திருக்கிறது. மாரடைப்பாம். ஒரே அழுகை. சீக்கிரம் போங்கள்'' என்று துரிதப்படுத்தினாள் என் மனைவி.

காவேரியின் வீட்டுக்குத் தலை தெறிக்க வேகமாக ஓடினேன்.

'குழந்தை அத்தனை ஆசைப்பட்டுப் பாகத்தைப் பிரித்துக் கொண்டானே. இப்படிப் போய் விட்டானே. எத்தனை சண்டை போட்டான்! நான் இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா, கடவுளே!'' என்றெல்லாம் புலம்பினாள் காவேரி மாமி.

எத்தனை முயன்றும் அவளைச் சமாதானப் படுத்தவே முடியவில்லை.

'' அம்மா, உடம்பு பலஹீனமாயிருக்கிறானே, எப்பொழுது இறந்து விடுவானோ என்று பயந்து சண்டை போட்டுப் பாகத்தைப் பிரித்துக் கொண்டான். பாவி, இப்பொழுது அவனே போய் விட்டானே. மரணம் நேரிடுவதற்கு வயது வித்தியாசம் இல்லை'' என்றார் பாலுவின் மாமா.

''சாமா! பகவதிக்குத் தந்தி கொடு'' என்றான் பாலு. அவன் கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகியது. அதுதான் சகோதர பாசம் போலும்!

இலக்கியச் செல்வம்-18

ஓர் ஒலியும் உயிர்

பேராசிரியர்:
அ. சீநிவாச ராகவன்

சிற்றில் - நம்முடைய வாழ்க்கை என்னும் இந்தச் சிறிய மணல்வீடு - இது சிதைந்து விடுமோ என்ற கவலை எல்லோருக்கும் வருகிறது. பலருக்கு, மரண பயத்தின் காரணமாக, அதில் ஒரு பகுதியாக, இந்தக் கவலை முளைக்கிறது. வேறு சிலருக்கு - அவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம் - இதே கவலை விசித்திரமான வேறொரு முறையில் தோன்றுகிறது. அவர்கள் சத்தியப் பொருளை நாடிச் செல்லும் மெய்ஞ்ஞானியர். வாழ்க்கையின் அடித்தலமாய் நிற்கும் கடவுள் என்ற உறுதியின் அரவணைப்பை நாடி, அவர்கள் நாளெல்லாம் அதைத் தேடுகிறார்கள். ஆனால், அது கைக்குக் கிட்டும்போது, சரேலெனக் கையைப் பின்னே இழுத்து, பிரிய மனமில்லாமல் இந்த உலகத்தைத் திரும்பிப் பார்க்கிறார்கள். இது மெய்ஞ்ஞானப் பாதையில் சிலருக்கு ஏற்படும் நிலை.

'தொல்லை நிறைந்த உலகந்தான், துயரம் மண்டிய காடுதான். ஆனாலும் என்ன? இங்கே, இந்த அல்லற்களரிலே, மேன்மையும், அழகும், இன்பமும் பயிராக வில்லையா? இவற்றை எப்படி விடுவது? இன்பமோ, துன்பமோ, அதை உணர்ந்து நின்ற 'நான்' என்ற தத்துவம், இதுதானே இதுவரை நான் கண்ட உண்மை? இது மறைந்து விட்டால், காண்பதற்கு எதுதான் இருந்தாலும், காண்பதற்கு நான் இருக்க மாட்டேனே!' இப்படியெல்லாம் உயிர் எண்ணுகிறதோ என்னவோ, உடம்போடு உயிருக்கு உண்டான நெடு நாளையத் தொந்தம், இந்த மண்ணிலே அதற்குள்ள பிடிப்பு, அவ்வளவு எளிதில் தளர்வதாய் இல்லை. இறைவனையே சதமென்று தேடிச் சென்று, அவன் அருள் நிழலை நெருங்கும் ஞானியர்க்குக்கூட இந்த நிலை என்றால், உயிர் எவ்வளவு அழுத்தமாக இந்த உலகில் வேரூன்றி நிற்கிறது என்று பார்த்துக் கொள்ள வேண்டியதுதானே!

' மாணிக்கவாசகர் இதைச் சொல்கிறார். எவ்வளவோ தவம் செய்து, தண்ணீரையும் காற்றையுமே உணவாகக் கொண்டு, புலன்களை அடக்கிய முனிவரும் காண முடியாத அந்தப் பரம்பொருள், இவரை ஒரு வார்த்தையால் ஆட்கொண்டு, 'நீ என் பொருள்' என்று பற்றியது. பிறகு நடந்ததை மாணிக்கவாசகரே பேசுகிறார், கேட்போம் :

'பற்றினாய் பதையேன் மனம்மிக உருகேன்
பரிகிலேன் பரியா உடல் தன்னைச்
செற்றிலேன் இன்னும் திரி தருகின்றேன்
திருப் பெருந்துறை மேவிய சிவனே

'இறைவனே, நானாக வந்து, என் சிறு முயற்சியினால் உன்னை அடைவது என்பது முடிகிற காரியமா? இல்லை.



பேரருள் பாலித்து, நீயாகவே வந்து, எனக்கு உபதேசம் செய்து, என்னை ஆட்கொண்டாய். என்னைப் பற்றினாய். அப்படி இருந்தும், இன்னும் இவ்வுலக பந்தத்தை முற்றிலும் நான் விடவில்லை. இன்னும் இங்கே திரிகிறேன். உடம்போ சாக மாட்டேன் என்று சாதிக்கிறது. என்ன முரட்டு உடம்பு இது. 'பரியா' உடம்பு! இதை எண்ணி நெஞ்சு பதைக்கிறதா, மனம் உருகுகிறதா. இல்லை.

ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டு
என் உள்ளமும் போய்
நான் கெட்ட

அந்த நிலை சித்தியாகவில்லை என்று வருத்தமாவது வேண்டாமா. அதுவும் இல்லையே! இங்கேயல்லவா 'பரிகிலேன்' ஆக, வருத்தம் இல்லாதவனாகத் திரிந்து கொண்டிருக்கிறேன்!' என்று வருந்துகிறார் மாணிக்கவாசகர்.

இந்த நிலையிலிருந்தும், இறைவனுடைய அருள், உயிரை மீட்கிறது. மீட்டு, வீடு பேறு அளிக்கிறது. ஆனால் இது நடைபெறுவதற்கு முன், உலக வாழ்க்கையை நோக்கி, உயிர் ஓடுகிறது; அதற்குள்ளே தன்னைப் புதைத்துக் கொண்டு, இறைவனுடைய அருட்கரத்தில் அகப்படாமல் ஒளிந்து கொள்ளப் பார்க்கிறது. ஆனால் இறைவனோ, இதற்கு இடம் தருவதில்லை. உயிரை அவன் விடாமல் தொடர்கிறான். உயிர் ஓடுமிடம் எல்லாம், அவனும் அளவிடமுடியாத அன்போடு, ஓடுகிறான். அவனைத் துறந்து, எங்கும் நிறைந்துள்ள அவனைப் புறக்கணித்து, போவதற்கு இடம் எங்கும் இல்லை என்பதை, உயிரானது உணரும்படியாக அவன் செய்கிறான். உலகில் உள்ள எந்தப் பொருளும், வாழ்க்கையில் வடிவாகும் எந்த உறவும், நிரந்தரமான புகலிடமாக அமையாது என்பதை, ஓடி ஓடிச் சலித்து, தோல்விக்குமேல் தோல்வியே கண்டு, கடைசியில், உயிர் தெரிந்து கொள்கிறது. இந்த அறிவு வந்ததும், பற்று எதுவும் இல்லாத நிலை தோன்றுகிறது. 'எங்கும் போய்க் கரை காணாது' ஒன்றுமில்லாமல், அகதியாய், நிகம்பரமாய் நிற்கும் உயிரை, இறைவன் அணைத்துக் கொள்ளுகிறான். எதையோ இழந்து விட்டோமே என்று கலங்கிய உயிர், கணப்பொழுதில், எல்லாவற்றையும் பெற்று விடுகிறது.

வறட்டுத் தத்துவம் இது. யாருக்கு வேண்டும் என்று நினைக்கிறீர்களோ என்னவோ? இந்தத் தத்துவத்தை, தத்துவமாக இல்லாமல், அனுபவமாக, கவிதையாக, யாராவது தந்தால்...... அப்படித் தருகிறான் பிரான்சிஸ் தாம்ஸன்* என்ற ஆங்கிலக் கவிஞன்.

மனிதனுடைய உள்ளம் என்று நாம் பேசுகிறோமே அந்த அக உலகம், அதற்குக் கொழுகொம்பாக நிற்கும் புற உலகமான இந்த மண், அதைச் சுற்றி உள்ள விசுவவெளி, அங்கே சுழலுகின்ற கோடி கோடி மண்டலங்கள், இத்தனையும் வந்து போகின்ற காலம் என்ற முடியா நெடும் பரப்பு- அதாவது, உள்ளம், ஞாலம், விசும்பு, இவை வந்துபோகும் காலம்** இவையெல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, பெரிய, மிகப் பெரிய நாடக அரங்காக அமைகின்றன. இந்த அரங்கிலே, இரண்டு நாடகப் பாத்திரங்கள். ஒன்று கவிஞன், மற்றொன்று அவனை விடாமல் துரத்தி வருகின்ற இறைவன் என்ற வேட்டை நாய். மனித உயிர்களின் பிரதிநிதியாகக் கவிஞன் நிற்கிறான். இறைவனிடமிருந்து தப்பி ஓடுவதற்கு, உயிர் என்ன பாடுபடுகிறது என்பதைக் கவிஞன் சொல்ல வருகிறான். காலம், இடம், மனம், இம் மூன்று உலகங்களிலும் ஒரே சமயத்தில் ஓடி ஒளிய முற்படுகிறது உயிர்.

பருவ காலங்கள் மாறி மாறி வருகின்றன. வருஷங்கள் திரண்டு திரண்டு நெடு வளைவுகளாய்ச் சமைகின்றன. இந்த வளைவுகளின் அடியிலே, இரவும் பகலும் ஓயாமல் அமைத்த காலம் என்னும் நீண்ட வழி. இந்த வழியாக ஓடுகிறது உயிர். ஓடும்போதே, மனத்தின் உள்ளே பின்னிக் கிடக்கும் கருத்து, உணர்ச்சி, உறவு இவற்றால் ஆகிய ஆயிரம் ஆயிரம் பாதைச் சுழல்களிலும் அது விரைகிறது. 'எங்கேதான் ஓடட்டுமே, என்னிடமிருந்து தப்பி விட முடியுமா?' என்று உயிரைத் தொடர்ந்து வருகிறது, பதற்றமில்லாமல், உறுதியான கதியில், தொடர்ந்து வருகிறது இறைவன் என்ற வேட்டை நாய்.

*Francis Thompson: 'The Hound of Heaven.'

**மாணிக்கவாசகர்: திருச்சதகம் 43.



கொடை வள்ளல் டாக்டர் அழகப்பச் செட்டியாருக்குக் குடியரசு தின விழாவின்போது பாரத சர்க்கார் 'பத்மபூஷன்' என்ற கௌரவப் பட்டம் வழங்கிக் கௌரவித்தனர். அந்தப் பட்டத்தைப் பாராட்டி டாக்டர் செட்டியாருக்கு ஏராளமான வாழ்த்துச் செய்திகள் வந்த வண்ணம் இருந்தன. அதே போலப் பாரதநாட்டின் பிரமுகர்கள் பலர் நேரிலும் வந்து பார்த்துப் பாராட்டி விட்டுச் சென்றனர். மைசூர் கவர்னர் ஜெயசாமராஜ உடையார், சென்னை நாட்டுக் கவர்னர் பி. ராமகிருஷ்ணராவ், யூனிவர்சிடி கமிஷன் தலைவர் சி. டி. தேஷ்முக், ஸர் சி. வி. ராமன், திருமதி சி. வி. ராமன் ஆகியோர் பத்மபூஷன் டாக்டர் அழகப்பச் செட்டியார் அவர்களை வந்து பார்த்துப் பாராட்டிவிட்டுச் சென்றனர்.

சென்ற நேருஜீ ஜயந்தியின்போது வெளியான 'கல்கி' நேரு ஜயந்தி மலரில்தான் 'அழகப்பரின் அதிசய சாதனை'களைப் பற்றிய கட்டுரைத் தொடரை ஆரம்பித்தோம். கட்டுரை முடிவடைந்தவுடன் அவருக்குப் பாரத சர்க்கார் பத்மபூஷன் பட்டம் அளித்தனர். பத்மபூஷன் பட்டம் பெற்ற அழகப்பரை டாக்டர் பட்டம் பெற்ற பிரதமர் நேருஜீ அவர்கள் சென்று பார்த்து அவர் உடல் நலனைப் பற்றி விசாரித்த காட்சியை மேலே படத்தில் காணலாம்.

பருவகாலம் பலப் பலவாய்ப்
  படர்ந்து பின்னிய பந்தர்க்கீழ்
இரவும் பகலும் இழைத்திட்ட
  எண்ணத் தொலையா நெடுவழியே
வரை ஒன்(று) இல்லா(து) அலையு(ம்) மனம்
  வளைந்த பாதைச் சுழல்களிலே
ஒருவன் அவன் எனைத்தொடர்ந்துவர
  ஓடி ஒளிக்க முற்பட்டேன்.

வாழ்க்கையில் துயரம் என்னும் பனி வந்து கவிகிறது. களிப்பு என்னும் ஓடை ஜிலுஜிலுவென்று ஓடுகிறது. நம்பிக்கை என்ற அடித்தலத்தின் மேல், எத்தனையோ ஆசைகள், எதிர்காலத்தைப் பற்றி நாம் எழுப்பும் மனோகரமான எத்தனையோ மனக் கோட்டைகள் அடுக்கடுக்காக உயர்ந்து நிற்கின்றன. துயரத்திலும், உவகையிலும் உயிர் ஒளிந்து கொள்ளப் பார்க்கிறது. மனக் கோட்டையின் நெடுமுடியில் ஏறுகிறது. அங்கிருந்து சரிந்து, பயமென்னும் இருண்ட குகையில் விழுகிறது. ஆனால் எங்கே சென்றால்தான் என்ன? இறைவனுடைய பாதம், சலியாமல், அங்கெல்லாம், உயிரைத் தொடர்ந்து வருகிறது.

ஓடிஒளித்தேன் துயர்ப் பனியில்
  ஓடும் உவகை ஓடையினில்;
நாடிப் புனைந்த மனக்கோட்டை
  நனிவக் கோயில் முடிநடந்தேன்;
ஆடிச் சரிந்தேன் பயங்குகையின்
  அகன்ற பேழ்வாய்ப் பேயிருளில்;
தேடி என்னைச் சலியாமல்
  தெய்வப் பாதம் தொடர்ந்தனவால்

எப்படித் தொடர்கின்றன? கலக்கமில்லாமல், தளர்ச்சி இல்லாமல், பதற்றம் எதுவும் இல்லாமல், 'வெற்றி இறுதியில் எமக்கே' என்று சொல்வன போல, வீறு கொண்டு அதிர்ந்து வருகின்றன. தொடர்ந்து வருகின்ற இந்த அடியோசையும் பின் வாங்கும்படியாக, குரல் ஒன்று ஓங்குகிறது. 'என்னை விலக்க முற்பட்டு, எனக்கு உண்மையாக இல்லாமல் ஓடுகிறாயே, நீ புகலாக எண்ணும் பொருள்கள் உனக்கு உண்மையாய் இருக்கக் கூடும் என்று நினைக்கிறாயா? பேதையே, என்னை விலக்குகின்ற உன்னை, எல்லாப் பொருள்களும் தம்மிடமிருந்து விலக்கி விடும்' என்று அந்தக் குரல் முழங்குகிறது:

கலக்க மின்றி அவசரமின்றிக்
  கதியில் அமைந்து நேர் அதிர
விலக்க மாகா வீறுடைய
  வீறுகொண்டு தொடரும் அடித்
தலத்தில் இருந்து பெருந்தொனி
  தன்னின் அதிர்ந்து ஒருகுரல் பேசும்:
விலக்க என்னை உன்னிலுனை
  விலக்கும் ஒன்றும் எப்போதும்.

(ஒலி தன்னில் — ஒளியை விட)

இந்தக் குரலின் எச்சரிக்கையைக் கேட்டு, உயிர் இறைவனிடம் திரும்புகிறதா? இல்லை. அதற்கு மாறாக, முன்னிலும் வேகமாக ஓடி ஒளியத் தலைப்படுகிறது. விசுவவெளி எங்கும், ஒவ்வொரு அணுவும், அதிரும்படிக்கு அடியெடுத்து வைத்து, இறைவன் பின் தொடர்கிறான். இந்த வேட்டையைக் காண, நாமும் கூடவே போவோம்.


தேநீர்
கொண்டு
களைப்பை
வெல்லுங்கள்
சோர்வையகற்றுவதன் மூலம்,
உங்கள் சக ஊழியர்களுடன் பழகு
வதற்குரிய சிறந்த மனோநிலையை
உங்களிடம் உண்டாக்குவது
தேநீரின் நல்ல குணம் என்று.
உலக முழுவதிலும் மேலும் மேலும்
அதிக மக்கள் அறிந்து வரு
கிறார்கள். ஆதலால் தேநீர்
ஒரு சாதாரண பானம் மட்டுமல்ல.
அது உடலின் பாலனமாகும்.
நான்தான் டீ — ஊழியர்களின் நண்பன்
TEA BOARD INDIA



(சென்ற வாரத் தொடர்ச்சி)

சஞ்சயர் விடைபெற்றுக் கொண்டு வெளியேறியதும் மத்குனி பக்கத்து அறையிலிருந்து வெளியே வந்தார்.

''தர்மராஜரே! தாங்கள் உகந்த பதிலையே கூறினீர்கள். இப்பொழுது நான் சொல்வதைக் கேளுங்கள். இன்று மாலையிலேயே நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு தூதுவனைக் குரு ராஜாவான திருதராஷ்டிரரிடம் அனுப்பிவையுங்கள். 'வணக்கத்துக்குரிய என் பெரிய தந்தையே! தங்கள் உத்தரவைச் சிரமேற் கொள்கிறேன். சற்றுக்கூட விருப்பம் இல்லாமல் இருந்த பொழுதிலும் தங்களை உத்தேசித்து நாங்கள் இந்த மூன்றாவது சொக்கட்டான் ஆட்டத்திலும் கலந்து கொள்ளத் தயாராயிருக்கிறோம். ஆனால் தாங்கள் செய்து வைத்திருக்கும் பகடை தேவையில்லை. நாங்கள் எங்கள் பகடையினாலேயே விளையாடுகிறோம். தாங்கள் குறிப்பிட்டிருக்கும் நிபந்தனைகளுக்கும் பூர்ண சம்மதமே. ஆனால் எங்கள் நிபந்தனை ஒன்றே ஒன்று. அதை நிராகரிக்கக் கூடாது. சகுனியும் நாங்களும் மூன்றே மூன்று தடவை மட்டும்தான் பகடை உருட்டுவோம். எவரது காய்களிலே அதிக எண்கள் காணப்படுகின்றனவோ, அவரே வெற்றியடைந்ததாகக் கருதப்படுவார்!' என்று ஓர் ஓலையும் கொடுத்தனுப்புங்கள்!'' என்றார் மத்குனி.

யுதிஷ்டிரர் கம்பீரமாக நகைத்தார். ''ஹே, சுபலநந்தனரே! மத்குனி மாமாவே! தாங்கள் சரியான ஆசாமிதான். சகுனிக்கேற்ற சகோதரர்தான். ஆனால் இப்பொழுது தங்களுக்கு ஒரு மரை கழன்றிருக்கிறதோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது. தங்கள் பேச்சைப் பார்த்தால். எந்த நம்பிக்கையின் பேரில் நான் சகுனியோடு சொக்கட்டான் ஆடச் சம்மதிப்பது? மூன்றே மூன்று தடவைகள் மட்டும் காய் உருட்டினால் போதும் என்கிறீர்களே, ஏன்? உங்கள் பேச்சிலே ஏதோ சூது நிறைந்திருப்பதாகத் தோன்றுகிறது. ஒருவேளை நீங்கள் துரியோதனனது வேவுகாரராக இருக்கலாம் அல்லவா? இல்லையென்பதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது?'' என்று மடக்கினார்.

''பொறுமை வேண்டும், மகாராஜா, பொறுமை வேண்டும்!''

மத்குனி அவரது குற்றச்சாட்டைக் கண்டு கலங்கி விடவில்லை. உறுதியான குரலிலே மேலும் தொடர்ந்தார்: ''நான் தங்களது சந்தேகங்கள் அனைத்தையும்

இப்பொழுதே தீர்த்து வைக்கிறேன். அப்புறம் என்னைப் பற்றி ஒரு முடிவுக்கு வாருங்கள். நீங்கள் திருதராஷ்டிரர் தரும் காயினால் விளையாடுவீர்களானால், உங்கள் தோல்வி நிச்சயம். ஏனெனில், பொல்லாத சகுனி திருதராஷ்டிரர் தரும் காயை எடுத்துக் கொள்வது போல் எடுத்துக் கொண்டு, அதைத் தன் காயினால் மாற்றிக் கொண்ட பின்னரேதான் ஆடுவான். வால்லிகத் தீவிலே நான் பேசாமல் உட்கார்ந்திருக்கவில்லை. மிகுந்த ஆராய்ச்சிக்கும் சோதனைக்கும் பிறகு, அவனது காயைக் காட்டிலும் சக்தியில் சிறந்த பகடையைச் சிருஷ்டித்திருக்கிறேன். நான் புதிதாக நிர்மாணித்திருக்கும் காயினால் தாங்கள் விளையாடுங்கள். சகுனி தோற்பது நிச்சயம். அப்புறம் உங்கள் வெற்றியில் உங்களுக்குச் சந்தேகம் எழக் காரணம் இல்லையே! ஆனால் இன்னொரு முக்கியமான விஷயம். நான் புதிதாகச் செய்திருக்கும் பகடையில் உள்ள யந்திரம் மிக மிக நுட்பமானது. அதனால் ஒரே நாளில் அதிகமான தடவைகள் உருட்டுவது உசிதமாகாது. சகுனியின் காயிலும்கூட இதே போன்ற வேறு ஒரு கருவிதான் பொருத்தப்பட்டிருக்கிறது. அதோடு தாங்களோ இப்பொழுது வெறி பிடித்தவர் போல ஆடப் போவதில்லை. வெற்றியை உத்தேசித்துத்தான் ஆடப் போகிறீர்கள். அதனால்தான் சொல்கிறேன், மூன்று தடவைகள் உருட்டுவது போதுமானது என்று!....... தங்களுக்கு அவசியம் என்று தோன்றினால், தங்களது மற்ற சகோதரர்களுக்கும் விஷயமனைத்தையும் சொல்லி விடுங்கள். ஆனால் அவர்கள் கடிந்து கொள்கிறார்களே என்பதற்காக உங்கள் முடிவை மாற்றிக் கொண்டு விடாதீர்கள். இதோ பாருங்கள்! இது தான் நான் புதிதாகச் செய்த காய். வேண்டுமானால் தாங்களே பரீக்ஷையும் செய்து பார்த்துக் கொள்ளுங்கள்!''

யுதிஷ்டிரர் யானைத் தந்தத்தினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த அந்தப் புதிய காயைக் கையில் வாங்கிப்பார்த்தார். சகுனியின் காய் போலவே நேர்த்தியாக வழுவழு வென்று இருந்தது. முதுகுப் புறம் வட்டமாயமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு புள்ளிக்கும் இடையே மிக மிக சூக்ஷ்மமான துவாரம் வேறு செய்யப்பட்டிருந்தது. மத்குனி சொன்னதின் பேரில் அவர் காயை உருட்டிப் பார்த்தார். என்ன ஆச்சரியம்! மூன்று தடவைகளும் மத்குனி கூறியபடி ஆறு புள்ளிகளே விழுந்தன!

''காய்கள் நம்பிக்கைக்கு உகந்தவையாகத்தான் இருக்கின்றன. ஆனால் தாங்கள் நம்பிக்கைத் துரோகம் செய்யவில்லை என்பதற்குப் பொறுப்பாளி யார்?'' என்று மத்குனியைப் பார்த்துக் கேட்டார் யுதிஷ்டிரர்.

மத்குனி இலேசாக நகைத்தார். ''தங்களுக்கு நம்பிக்கை உண்டாகவில்லை என்றால் என்னை இப்பொழுதே சிறையில் அடைத்து வையுங்கள், மன்னர் மன்னவா! தாங்கள் தோற்றுவிட்டதாகச் செய்தி கிடைத்தால், உடனே என் காவலுக்காகப் போடப்பட்டிருக்கும் காவலாளிகள் என் தலையைச் சீவி விடட்டும். தாங்கள் இப்பொழுதே அவர்களுக்கு இம்மாதிரி உத்தரவு போட்டு வைப்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை!'' என்றார்.

''சரி, அப்படியே ஆகட்டும்!'' என்று ஒப்புக் கொண்ட யுதிஷ்டிரர் சிறிது நேரம் ஏதோ யோசனையில் ஆழ்ந்து விட்டார். பிறகு யோசனை கலைந்து, ''அது சரி! சகுனியின் காய் என் காயினிடம் தோற்று விட்டது என்றால் அதற்கு என்ன அர்த்தம்? அந்த ஆட்டம் தர்மத்துக்கு விரோதமானதாக ஆகாதா? ஒரு விதத்தில் சூது நிறைந்ததாக முடியாதா?'' என்று கேட்டார்.

''ஐயோ, மகாராஜா!'' என்று கூறிய மத்குனி தலையில் கையால் ஓங்கி அடித்துக் கொண்டார். ''என்ன இருந்தாலும் உங்களைப் போன்ற சாதுவை நான் பார்த்ததே இல்லை. உங்கள் இருவருடைய



காய்களுமே மந்திர சக்தி வாய்ந்தவை. அப்படியிருக்கும் பொழுது சூது-வாது என்ற பேச்சுக்கு இடம் ஏது? அதோடு, தர்மராஜா! இம் மூன்றாவது சூதாட்டத்திலே நான் அல்லவோ இரு கட்சிகளாகவும் இருக்கிறேன்! இரண்டு காய்களுமே என்னால் செய்யப்பட்டவை. ஒன்றியாக நானே ஆடுவதற்குப் பதிலாக நீங்களும் சகுனியும் ஆடுகிறீர்கள். நீங்கள் இருவரும் எனது ஆட்டத்துக்கு ஒரு நிமித்த மாத்திரமாக இருக்கிறீர்களே ஒழிய வேறு என்ன? இரு கட்சிகளையும் ஆடுபவன் நான்தானே?'' என்றார்.



யுதிஷ்டிரர் மறுபடியும் யோசனையில் ஆழ்ந்து விட்டார். பிறகு சிறிது நேரம் கழித்து, ''மாமா! உங்கள் பேச்சைக் கேட்ட பின் என் நிலை இன்னும் விசித்திரமாகி விட்டது. தர்மத்தின் போக்கு இருக்கிறதே, அது மிக மிக சூக்ஷ்மமானது. யோசிக்க யோசிக்க நான் மேலும் மேலும் தர்மசங்கடத்தில் சிக்கித் தவிக்கிறேன். தங்கள் சாதாரண வாழ்வு என் கையில் இருக்கிறது. ஆனால் என் புத்தி, தர்மம், ராஜ்யம் எல்லாமே தங்கள் கையில் இருக்கின்றன. இந்தச் சொக்கட்டான் ஆடும் பைத்தியம் பொல்லாதது தான். இருந்தாலும்.... இருந்தாலும், இப்பொழுது தங்கள் கட்டளைக்குக் கீழ்ப் படிவதுதான் உசிதமாகத் தோன்றுகிறது. கொண்டு வாருங்கள், அந்தக் காயை. என்னிடம் கொடுத்து விடுங்கள்!'' என்றார்.

''தர்மராஜர் யுதிஷ்டிரருக்கு வெற்றி கிட்டுவதாக!'' என்று மத்குனி மகிழ்ச்சியுடன் கோஷமிட்டார். ''. ஆனால் மகாராஜா! இந்தக் காய் இப்பொழுது என்னிடமே இருக்கட்டும். உகந்த பணிவிடைகளும் பூஜையும் செய்யாமல், இந்தக் காய் தங்களிடம் இருக்குமானால் இதன் குணங்கள் குன்றிவிடக் கூடும். அதனால் நினைக்கும் பலன் கிட்டாமற் போவதற்கும் இடம் இருக்கிறது. எனவே, தாங்கள் சொக்கட்டான் ஆட்டத்துக்குப் போகும் அன்றைய தினம் என்னிடமிருந்து காயை வாங்கிக் கொள்ளுங்கள். அதுதான் நல்லது'' என்றார்.

வெகு விமரிசையாகச் சூதாட்டத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் ஆரம்பமாயின. மத்குனியைச் சந்தித்த மறுநாளே யுதிஷ்டிரர் தமது தம்பிமார்களிடம் சொக்கட்டான் ஆடப் போவதாகத் தாம் தீர்மானித்திருக்கும் விஷயத்தைக் கூறினார். தம்பிமார்கள் ஆட்சேபித்தார்கள்; முணுமுணுத்தார்கள்; பல தடைகள் சொன்னார்கள். அண்ணனுக்கு அடங்கிய தம்பிமார்களாகையால் கடைசியில் தங்கள் சம்மதத்தைத் தெரிவித்து விட்டார்கள். ஆனால் திரௌபதி ஒருத்தி மட்டும்தான் வாய் திறந்து ஒன்றுமே சொல்லவில்லை. சகதேவனை அனுப்பித் துவாரகையிலிருந்து வாசுதேவனை வரவழைத்து விட்டாள். தமது மூத்தண்ணா பலராமருடன் கிருஷ்ண பரமாத்மாவும் சொக்கட்டான் மண்டபத்தில் பிரசன்னமாகி யிருந்தார்.

ஏகமனதாகப் பலராமர் அச்சபைக்குத் தலைவராக்கப்பட்டார். பலராமர் தமது தலைமைப் பீடத்தில் அமர்ந்ததும் அமராததுமாகச் சபையைத் துவக்கிவைத்துக் கூறினார்:

''நண்பர்களே! ஒரு காரியத்தில் தீர்மானமாக இறங்கிவிட்ட பின் தாமதமாக்குவதில் எவ்விதமான பயனும் இல்லை. எனவே ஆட்டம் உடனடியாக ஆரம்பமாகட்டும். கௌரவர்கள் சார்பில் சகுனியும் பாண்டவர்கள் தரப்பில் யுதிஷ்டிரரும் ஒவ்வொரு காய் வைத்துக் கொண்டு ஆட்டத்தை ஆரம்பிப்பார்கள். ஒவ்வொருவரும் மூன்று முறைகள் மட்டுமே பகடை உருட்டுவார்கள். யாருடைய காய் அதிகப் புள்ளி காட்டுகிறதோ, அவரே வெற்றியடைந்தவராகக் கருதப் படுவார். தோற்றுப் போன தரப்பினர் ராஜ்யத்தை ஒப்படைத்து விட்டு, அதாவது வெற்றி கொண்டவருக்கு விட்டுக் கொடுத்து விட்டுக் கானகம் நோக்கிச் சென்றுவிட வேண்டும். — சுபல நந்தனரான சகுனி அவர்களே! தாங்கள்தான் பிராயத்தில் முதிர்ந்தவர். அதனால் தாங்களே முதலில் காய் உருட்டி ஆட்டத்தை ஆரம்பித்துவைக்கவேண்டும்!''

பலராமர் பேசி முடித்ததும் சகுனி பகடை உருட்டினார். அவரது காய் கொஞ்சதூரம் ஓடி நின்றது. மேல் புறம் ஆறு புள்ளிகள் காட்சியளித்தன. கர்ணனும் துரியோதனனும் மகிழ்ச்சி வெறியில் வானம் அதிர, ''வெற்றி நமது!'' என்று கூச்சலிட்டனர்.

''யுதிஷ்டிரா! இப்பொழுது நீ உன் காயை உருட்டு!'' என்று உத்தரவிட்டார் தலைவர் பலராமர்.

யுதிஷ்டிரர் தமது பகடையை உருட்டினார். ஒரு கணம் உருண்டு காய் நிலைத்து நின்றது. அதிலும் ஆறு புள்ளிகளே காட்சி அளித்தன. ''தர்மராஜ

ருக்கு ஜே!'' என்று பாண்டவர்கள் உரக்க வெற்றி முழக்கம் செய்தனர்.


பலராமர் கடிந்து கொண்டார்: ''வீணுக எதற்கு வாயைச் செலவிட்டுக் கத்துகிறீர்கள்? இன்னும் யாருக்கும் வெற்றி கிட்டவில்லே. இருவரது ஆட்டமும் சமமாகவேதான் இருக்கிறது!''

சகுனி மறுமுறை பகடை உருட்டினுர். இந்தத் தடவை அது அதிகமாக உருளவில்லே. தரையில் விழுந்ததுமே அது ஸ்திரமாகி நின்று விட்டது. கவனித்த பொழுது ஐந்து புள்ளிகளே அதில் காட்சியளித்தன. யுதிஷ்டிரர் காயிலோ ஆறு புள்ளிகள்! அவர் ஆடியபொழுது தமது காய் கொஞ்சம் அதிருவதைக் கவனித்தார் சகுனி. இருந்தாலும் வெளிக்குக் காட்டிக் கொள்ளவில்லே.

பாண்டவர்கள் கோஷ்டி ஆனந்த வெறியில் அலே ஓசை போல் வெற்றி முழக்கம் செய்தது. பலராமர் கண்களில் கோபக்கனல் வீச, ''யாராவது கூச்சலிட்டால், காதைப் பிடித்து இழுத்து வெளியே கொண்டு தள்ளி விடுவேன்!'' என்று இரைந்தார்.

கடைசி ஆட்டத்தைப் பார்ப்பதற்காகச் சபையில் அமைதி நிலவியது. எல்லோரும் ஆவலுடன் எட்டி எட்டிப் பார்க்கலாயினர். இரு தரப்பினரும் பகடை உருட்டினுர்கள். சகுனியின் காயில் ஒரே ஒரு புள்ளி மட்டும் தெரிந்தது. யுதிஷ்டிரரின் காயிலோ பழைய படியே ஆறு புள்ளிகள் காணப்பட்டன.

பலராமர் தலைமைப் பீடத்தில் எழுந்து நின்ற வண்ணம், ''வெற்றி யுதிஷ்டிரருக்கே!'' என்று ஆரவாரத்துக்கிடையேதம் முடிவைத் தெரிவித்தார்.



அப்பொழுது சபையிலே ஒரு அதிசயம் நிகழ்ந்தது. கூடியிருந்தவர் அனைவரும் கண் கொட்டாமல் வியப்புடன் பார்க்கலாயினர். தரையிலே கிடந்த யுதிஷ்டிரரின் காய் தாவிக் குதித்துக் கொண்டு சகுனியின் காயை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தது. உயிரற்ற காய் குதித்துக் குதித்துச் செல்வதென்ருல் யாருக்குத்தான் ஆச்சரியமாயிராது? ''இந்திர ஜாலம்! மாயா ஜாலம்!'' என்று கூடியிருந்தோர்கள் அனைவரும் கூச்சலிட்டனர்.

துரியோதனன் கைகளையும் கால்களையும் உதறிக் கொண்டு, ''யுதிஷ்டிரர் வெற்றிக்காக மட்டரகமான மோசடி முறையைக் கையாண்டிருக்கிருர். எனவே, நான் அவர் வெற்றி கொண்டார் என்பதை ஒப்புக் கொள்ள முடியாது!'' என்று கூவினன்.

பலராமர் கை கமர்த்தி, ''நான் இரு காய்களையும் பரிசோதித்துப் பார்க்கிறேன். அமைதியாயிருங்கள்!'' என்ருர்.

சகுனி ஒரே தாவாகத் தாவித் தம் காயைக் கையில் எடுத்துக் கொண்டு, ''நான் என் காயைப் பரிசோதிக்கவிடமாட்டேன்!'' என்று முரண்டு பிடிக்கலானுர்.

பலராமர் சற்று வெறியில் இருந்தார். சகுனியின் கன்னத்தில் ஒரு அறை வைத்துக் காயைப் பிடுங்கிக் கொண்டார். ''காயைக் கொடுக்க முடியாது என்று சொல்கிறவன் நீ யாரடா?'' என்றும் கடிந்து கொண்டார். பிறகு இரண்டு காய்களையும் கருங்கல்லில் ஓங்கியடித்து உடைத்தார்.

சகுனியின் காயிலிருந்து எட்டுக்கால் பூச்சி வகையைச் சேர்ந்த 'குடு குடு' என்னும் பூச்சி உயிர் அற்றது போல வெளியே வந்து விழுந்து கால்களை உதைத்துக் கொள்ளலாயிற்று. யுதிஷ்டிரரின் காயிலிருந்து பல்லி இனத்தைச் சேர்ந்த 'கோதிகா' வெளியே வந்து 'குடுகுடு' பூச்சியின் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து கவ்வியது.

சபை முழுவதிலும் ஏகப் பரபரப்பு! சலசலப்பு! திருதராஷ்டிரர் பதறிப் போய், ''என்ன ஆயிற்று? என்ன ஆயிற்று?'' என்று கேட்டார்.

''சகுனியின் காய்க்குள்ளே 'குடுகுடு' பூச்சி இருந்தது!'' என்ருர் பலராமர்.

''வேடிக்கையாக இருக்கிறதே! யாருக்கும் அது எந்தவிதமான தொந்தரவும் கொடுக்கவில்லேயே!''

''இல்லே. யாருக்கும் எந்தவிதமான அபாயமும் விளைவிக்கவில்லே. இந்தப் பூச்சி இருக்கிறதே, இது மிகவும் பொல்லாத பூச்சி. மல்லாந்து படுக்கவோ புரண்டு படுக்கவோ இதற்குத் தெரியாது. காய்க்குள் இருந்ததனுல் எப்பொழுதும் படபடத்துக்கொண்டிருந்திருக்கிறது. யுதிஷ்டிரருடைய காய்க்குள்ளே ஒரு கோதிகா இருந்தது படைத்த பிரம்மனே வந்தாலும் இதைப் புரண்டு படுக்கும்படி செய்ய முடியாது. இது குடுகுடுவின் உயிர்ச் சத்துரு. கோதிகாவின் வாசனையைக் கண்டுதான் சகுனியின் காய்க்குள்ளிருந்த குடுகுடு பயந்து நடு நடுங்கிப் போய்ச் சுருட்டி மடக்கிக் கொண்டு

கிடந்திருக்கிறது. இந்தக் கோதிகாவின் காரணமாகத்தான் அது தன் வேலையைச் சரியாகச் செய்யவில்லை!''

திருதராஷ்டிரருக்கு இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கப் பொறுமை இல்லை. ''அது போகட்டும். வெற்றி யாருக்கு?'' என்று கேட்டார்.

பலராமர் தமது தீர்ப்பைக் கூறினார்: ''ஐயந்திரிபுக்கு இடமின்றி யுதிஷ்டிரருக்குத் தான் வெற்றி. இருவருமே சூதுள்ள காய்களை வைத்துக் கொண்டு விளையாடினார்கள். எனவே, ஒருவர் சூது செய்து ஆடினார் என்ற வாதம் செல்லாது. சகுனி கெட்டிக்காரர்தான். ஆனால் யுதிஷ்டிரர் கெட்டிக்காரத்தனத்தில் அவரையும் மேவி விட்டார்!''

பலராமர் பேசி முடிக்கும் வரை கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்க தர்மராஜாவான யுதிஷ்டிரருக்குப் பொறுமையில்லை. எழுந்து நின்று மதுனியின் கதை முழுவதையும் கூறினார்.

''தர்மராஜாவான யுதிஷ்டிரனே! இதில் வருத்தப்படுவதற்கு என்ன இருக்கிறது? சூதாட்டச் சட்டம் இம்மாதிரி மோசடி நிறைந்த காய்களை உபயோகிப்பதற்குத் தான் இடம் கொடுக்கிறதே!'' என்றார் பலராமர்.

யுதிஷ்டிரர் அவர் சமாதானத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ''கலப்பை மன்னரே! தாங்கள் பெரும் வீரர் என்பதை ஒப்புக் கொள்கிறேன். உங்களுக்குச் சாஸ்திர விஷயங்கள் துளிக் கூடத் தெரியாது! பகவான் மனு என்ன சொல்லியிருக்கிறார், தெரியுமா?

'அப்ராணிபிர் யத்க்ரியதே
தல்லோகேத்யூத முச்யதே
ப்ராணிபிர் க்ரியதே
யஸ்துஸ விக்ஞேய: ஸமாஹ்வய:'

அதாவது உயிர் இல்லாத பொருளைக் கொண்டு ஆடும் ஆட்டம் உலகத்தில் சூதாட்டம் என்று கூறப்படுகிறது. உயிருள்ள பொருள்களைக் கொண்டு ஆடும் ஆட்டத்தை சமாஹ்வயம் என்கிறார்கள். ஆடு, கோழிச் சண்டை ஆகியவை இவ்வகையைச் சேர்ந்தவை. ஆனால் குரு ராஜரான திருதராஷ்டிரர் என்னை உயிர் இல்லாத சொக்கட்டான் ஆட்டத்துக்குத்தான் அழைத்திருந்தார். ஆனால் தெய்வ வசமாக என் காய்க்குள்ளிருந்து உயிருள்ள பிராணி கிடைத்திருக்கிறது ஆகவே, இந்த ஆட்டம் சட்டப்படி செல்லாதது!'' என்றார்.

கர்ணனுக்கு ஆனந்தம் தலை கொள்ளவில்லை. படபடவென்று கைகளைத் தட்டி, ''தர்மராஜரே! உமக்குத் தர்மராஜர் என்ற பெயர் முற்றிலும் பொருந்தும்!'' என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான்.

பலராமர் விரக்தி மனப்பான்மையோடு. ''தர்மராஜரின் சாஸ்திர அறிவு அபாரமானது; ஆழமானது. ஆனால் உலக அறிவுதான் பெயருக்குக் கூடக் கிடையாது. இந்த ஆட்டம் சட்டப்படி செல்லாது என்றால் முன்பு நடந்த இரண்டு சொக்கட்டான் ஆட்டங்களும் கூடத்தான் சட்டப்படி செல்லாதவை. திருதராஷ்டிரரே! தங்கள் மைத்துனரின் மோசகரமான செயலினால், அநாவசியமாகப் பாண்டவர்கள் பெருங் கஷ்டங்களுக்கு உள்ளாக நேர்ந்தது. இப்பொழுது இவர்களது ராஜ்யத்தைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள். இல்லாவிட்டால் நீங்கள் நரகத்தில் உழன்று அல்லலுற நேரிடும்!'' என்றார்.

யுதிஷ்டிரர் கோபித்துக் கொண்டு விட்டார். ''இந்த வீண் பேச்சுக்களெல்லாம் எனக்குக் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை. அதோடு இந்தச் சூதாட்டத்தைக் கண்டாலே எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. நாங்கள் போர் புரிந்தே எங்கள் ராஜ்யத்தை மீட்போம். பெரியப்பா! நமஸ்காரம் நாங்கள் போய் வருகிறோம்!'' என்றார்.

தமது கூடாரத்துக்கு வந்ததும், யுதிஷ்டிரர் முதல் காரியமாகக் காவலாளிகளை அழைத்து, ''உடனே மதுனியை விடுதலை செய்து விடுங்கள். பாவம், அவரது அவ்வளவு முயற்சிகளும் வீணாகி விட்டன!'' என்றார்.

யுதிஷ்டிரரின் வாய் மொழியாக நிகழ்ந்தது அத்தனையும் கேட்ட மதுனி தலையில் அடித்துக் கொண்டார். ''ஆண்டவனே! எல்லா இடங்களிலும் நீ வலிமை பொருந்தியவனாகத்தான் இருக்கிறாய். நான் செய்த தவறினால் வந்த வினை இது. கோதிகாவுக்கு ஆகாரத்தைக் கொடுத்துக் கொடுத்துக் கொழுக்கச் செய்து விட்டேன். அதனால்தான் அந்தத் துஷ்ட கோதிகா குதித்தோடிக் காரியத்தைக் குட்டிச்சுவராக்கி விட்டது. பலராமரோ சரியான சமயத்தில் கை கொடுத்து உதவி, நிலைமையைச் சமாளிக்கத்தான் முயன்றிருக்கிறார். ஆனால் தர்மராஜரான யுதிஷ்டிரர் சாஸ்திரங்களிலிருந்து உபமானத்தை எடுத்துக் கையாண்டு காரியத்தை மேலும் கெடுத்து விட்டார்! இப்பொழுது என்னை விடுதலை செய்வதனால் என்ன பயன்? துஷ்டன் துரியோதனன் கோபக் கனல் வீசும் கண்களாலேயே என்னைக் கொன்று போகக்கிவிடப் போகிறானே!''

இவ்விதம் கூறியவாறே மதுனி ஒன்றும் தோன்றாதவராகித் தலையைப் பிடித்துக் கொண்டு அப்படியே தரையில் உட்கார்ந்து விட்டார்.

சமூக நன்னலம்

சுபீட்சப் பாதையில் நாம் இரண்டாவது மைல் கல்லை அடைந்துவிட்டோம். சமுதாய செழிப்புக்காக திட்டமிடுவதில் நாம் இப்போது இரண்டாவது கட்டத்திலிருக்கிறோம். எனவே சமூக நன்னல சேவைகளையும் கூடவே இன்னும் அதிகரிக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. இந்த சமூக நன்னல சேவைகளால் ஏற்படும் நன்மைகளையும் நாம் எல்லோரும்தான் பகிர்ந்துகொள்ளப்போகிறோம். உயர்ந்த கல்வி, சிறந்த மருத்துவ வசதிகள், ஆலைத் தொழிலாளர் நன்னலம், குடிபெயர்ந்தோர் குடியமைப்பு, பின்தங்கிய வகுப்பினர் முன்னேற்றம் இவைகளுக்காக இரண்டாவது திட்டத்தில் கணிசமான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. எல்லோருக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்ற சமுதாய நல முயற்சியின் ஒரு பகுதியே இது.


டாக்டர்கள், நர்சுகள், சுகாதார சிப்பந்திகள் இவர்களின் எண்ணிக்கை முறையே 18 சதவிகிதம், 41 சதவிகிதம், 75 சத விகிதம் அதிகரிக்கும். மருத்துவ விடுதிகளில் படுக்கைகளின் எண்ணிக்கையும் 12.600 க்கு உயரும். இச்சுகாதார சௌகர்யங்களுடன் கூடவே கல்வி, குடும்பக் கட்டுப்பாடு, தாய் சேய் நன்னலமும் விருத்தியடையும்.

6-11 வயது கோஷ்டியைச் சேர்ந்த குழந்தைகளில் 63 சத விகிதத்தினருக்கும், 11.14 வயது கோஷ்டியைச் சேர்ந்த குழந்தைகளில் 23 சத விகிதத்தினருக்கும் கட்டாய இலவசக் கல்வி வசதியளிக்கப்படும். பிரைமரி கட்டத்தில் அதிகமாகும் 77 லட்சம் மாணவர்களுக்கும், நடுத்தரக் கட்டத்தில் அதிகமாகும் 13 லட்சம் மாணவர்களுக்கும் இடவசதியளிக்க வேண்டி கல்விக்கூடங்களின் எண்ணிக்கையும் கூடவே அதிகரித்தாக வேண்டும்.

எனவேதான் இரண்டாம் திட்டத்தின் மொத்த முதலீட்டில் 23 சதவிகிதம் அதாவது ரூ. 945 கோடி சமூக நல சேவைக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்

சமுதாய சுபீட்சத் திட்டம்



நாட்டு வைத்தியம்

ஸ்ரீ ஹரி

முன்னுரை

"வணக்கம்" என்று சொல்லிக் காலில் விழுந்து வணங்கிய சீடனை இரு கைகளாலும் தூக்கி நிறுத்தினார் குரு நாதர்.

குருகுல வாசம் முடிந்த பிறகு குரு நாதர் விரும்பிய காணிக்கையைச் சம் பாதித்து வந்து சமர்ப்பித்து, விடை பெறும்போது நடந்த நிகழ்ச்சி. சீடனை நோக்கி, குருநாதர் சொல்லுகிறார்:

"மகனே! குருநாதன் விரும்பிய காணிக்கையைக் கொடுத்துவிட்டதோடு உன் கடன் தீர்ந்ததென்று எண்ணாதே! குரு சிஷ்யப் பிணைப்பு அறுபடாமல் இருக்க முயல வேண்டும். சிஷ்யப் பரம்பரை பெருகப் பெருக, அவரைப் பிணைத்து மாலையாகத் தொடுக்கும் நூல் வளரவும் மாலை நீளவும் வகை செய்ய வேண்டும். இதுதான் நீ உன் குரு குலத்துக்கு அளிக்கும் முக்கியமான காணிக்கை; உன் கடமையும் அதுதான். இதற்காக நீ செய்ய வேண்டியது இரண்டு வகைக் கருமங்களாகும்."

"அவ்வாறே செய்யச் சித்தமாயிருக்கிறேன். தயவுசெய்து அவை என்னவென்று கூறவேண்டும்" என்றான் சீடன்.

"உன் அறிவைப் பெருக்கிக் கொள்ள, நீ இடைவிடாமல் தொடர்ச்சியாக, மேன்மேலும் படித்துக் கொண்டே இருக்க வேண்டும். இது ஒன்று. நீ கற்றவற்றை, உன்னிடம் கற்க வருவோருக்குப் புகட்ட வேண்டும் இது மற்றொன்று. இம்முயற்சியால் குரு சிஷ்ய பரம்பரையைப் பெருக்கு; இப் பரம்பரையைப் பிணைக்கும் நூலை அறுபடாமல் காப்பாற்று. இது உனது கடமை; என் குருநாதன் எனக்குப் பணித்தது இதுதான். நான் உனக்குச் சொல்வதும் இதுவே" என்றார் குருநாதர்.

"அப்படியே செய்து வருவேன், சுவாமி!" என்று குருவை மறுபடியும் வணங்கி எழுந்தான் சீடன்.

இது ஒரு பட்டமளிப்பு விழா நிகழ்ச்சி. உபநிஷதம் விளக்கியுள்ளது. என்ன அருமையான உபதேசம்!

* * *

தமிழ் நூல்கள் காட்டும் மற்றொரு பட்டமளிப்பு விழாக் காட்சி.

"வாரும், ஐயா! வைத்தியப் பண்டிதரே!" என்று அழைக்கிறார் தம் பாதங்களில் விழுந்து பணியும் சீடனை. 'நேற்று மாலை வரையில் குருநாதர் நம்மிடம் பேசியமுறை ஒரு உரிமையுடன் இருந்ததே! இன்று ஏன் இப்படி நம்மை அழைக்கிறார்?' என்று சீடன் விவரம் புரியாமல் கலவரப்படுகிறான்.

இச் சீடனுக்குப் பொதுவான படிப்பு, பயிற்சிகளெல்லாம் முன்பே முடிந்தவை குருநாதரிடம் சிறப்பாக வைத்தியக் கலையைப் பயில வந்தவன். பயிற்சியும் பூர்த்தியாயிற்று. 'பண்டிதரே' என்று குருநாதர் அழைத்ததே பட்டம் அளித்ததாகும். பிறகு வைத்தியன் என்ற வகையில் அவனுடைய கடமைகளைத் தெரிவிக்கிறார் குருநாதர்.

"எமது குருநாதரான போக முனிவர் எமக்குப் பணித்ததை உமக்கும் சொல்கிறோம்" என்று தொடங்குகிறார் புலிப்பாணி. பாட்டைக் கேளுங்கள்:

ஆமேதான் பண்டிதனே! அறையக்கேளாய்
அவனிதனி லேவியோருக் கமிழ்தமீந்து
தாமேதான் அன்னமிட்டு வஸ்திரமீந்து
தயவாகத் தன்னுயிர்போல் அவரைக்காத்து
தீமைதான் வாராமற் புண்ணியவானாய்
தீர்க்கமுள்ள வைத்தியனா யிருந்துவாழ்வாய்!
நாமேதான் போகருட கடாக்ஷத்தாலே
நலமாகப் புலிப்பாணி நவின்றிட்டோமே!

அறிவைப் பயன்படுத்தும் விதத்தில் பாரதத்தின் பண்பு என்னவென்பது இவ்வுதாரணங்களிலிருந்து தெளிவாகிறதல்லவா? இவற்றைத் தழுவிய முறையில்தான் என் குருநாதர் எனக்கு உபதேசித்தார்; அவருடைய குருநாதரும் அவ்வாறேதான் உபதேசித்தாராம்!

1. முன்னோரைப் போற்றுவோம்

"நம் முன்னோர் சொன்ன...."

"முன்னோராவது, முதியோராவது? பல நூற்றாண்டுகளுக்கு முன் யாரோ சொன்னதை விடமாட்டேன் என்று



பிடித்துக் கொண்டு அலைகிறீரே. இது என்ன மடமை! இன்று விஞ்ஞானம் பெருகியுள்ள நிலையில், முன்னோர் சொன்னார், முதியோர் சொன்னார் என்ற பிதற்றல்களை ஏற்கலாமா?''

''அப்படி அவசரப்பட்டுச் சொல்லி விடாதீர்கள். கடுக்காய்க் கஷாயத்தைக் குடித்தால் வயிறு இளகிப் போகும் என்று நம் முன்னோர் சொன்னது. இது உண்மையா, இல்லையா? பார்த்துக் கொள்ளலாமே!''

''அந்தக் கடுக்காய்க்கஷாயம் உள்ளே சென்ற பிறகு என்னவாகிறது? வயிறு, குடல்களில் என்னென்ன நேரிடுகிறது? எப்படிப் பேதியாக உதவுகிறது? இதையெல்லாம் விஞ்ஞான முறைப்படி ஆராய்ந்தறிந்திருக்கிறீரா? கடுக்காய்க் கஷாயத்தைக் குடித்தால் என்னவாகும் என்று நிச்சயமாகத் தெளிவுபடாதிருக்கும்போது அதைத் துணிவுடன் எப்படி ஒருவருக்குக் கொடுக்க முடியும்? வைத்தியம் என்பது என்ன விளையாட்டா? ஒன்று கிடக்க ஒன்று செய்து விட்டால் உயிரல்லவா போய் விடும்!''


''நீங்கள் உபயோகித்து வருகிறீர்களே, சில மருந்துகள்! இவற்றைப் பற்றி நீங்களே ஆராய்ச்சிகளை நடத்தி, அவற்றின் பலாபலன்களையெல்லாம் அறிந்திருக்கிறீர்களா?''

''நானே செய்யாவிட்டால் என்ன? மேல்நாட்டு விஞ்ஞானிகள் அவ்வகை ஆராய்ச்சிகளைச் செய்து முடிவைத் தெளிந்து, ஐயந்திரிபறத் தெரிவித்துள்ளனர். உள்ளதை உள்ளபடி அவர்கள் தெரிவிப்பவர்கள். அவர்களது சொல்லில் எங்களுக்கு நம்பிக்கையுண்டு. அதை தாங்கள் ஏற்கிறோம்; பயிலுகிறோம்.''

''உள்ளதை உள்ளபடி சொல்பவர்கள் என்பதைவிட, தாங்கள் கண்டதை அல்லது காண நேரிட்டதை அவ்வாறே சொல்பவர்கள் என்பதுதான் பொருந்தும். பூதக்கண்ணாடியில் ரத்தத்தைப் பரிசோதிக்கிறார் ஒரு விஞ்ஞானி. 'இதில் 'மலேரியா'க் கிருமிகளைக் காண நேரிடவில்லை' என்று சொல்கிறாரே தவிர, 'இதில் மலேரியாக் கிருமி இல்லை' என்று சொல்ல மாட்டார். இதிலுள்ள நுட்பமான பொருளைக் கவனிக்க வேண்டும். அதே ரத்தத்தில் 'மலேரியா'க் கிருமி இருக்கலாம். ஆனால் இவர் பார்வையில் அது தென்படவில்லை என்பதுதான் அவர் சொல்வதன் பொருள். 'இதில் மலேரியாக் கிருமி இல்லையா?' என்று கேட்டால் 'நான் பார்த்த வரையில் தென்படவில்லை' என்றுதான் சொல்வார். வேறு ஒருவர் பார்வைக்கு அகப்படவும் கூடும். ஆகவே விஞ்ஞானிகள் உள்ளதை உள்ளபடி சொல்பவர்கள் என்பது பொருந்தாது. தாங்கள் கண்டதைக் கண்டபடி சொல்பவர்கள் என்பதுதான் பொருந்தும். எனவே, விஞ்ஞானிகள் ஒரு விஷயத்தைப் பற்றி ஒரு சமயம் சொன்னதே முடிவானது என்று அறுதியிட்டுச் சொல்வதில்லை. அவர் சொல்லை ஏற்கும் நீங்கள் அதுதான் முடிவு என்பது எப்படி நியாயமாகும்? நீங்கள் சொல்வது போல் மேல்நாட்டு விஞ்ஞானிகள் சொல்வதில் உங்களுக்கு நம்பிக்கை இருக்குமானால், நம் நாட்டு ஞானிகள் சொல்வதில் எனக்கு நம்பிக்கை பிறப்பதில் என்ன குற்றம்?''

''இருந்தாலும், விஞ்ஞானிகள் பரீட்சித்துத் தெளிவு காணாத மருந்துகளைக் கொடுப்பதால் பொது ஜனங்களுக்கு ஆபத்து நேரிடலாம். எனவே அவ்வகை மூட வைத்திய முறைகளைத் தடுக்க வேண்டியது அவசியம்.''

''எது மூட வைத்தியம்? நம் நாட்டு ஞானிகள் சொன்னதா மூட வைத்தியம்? கடுக்காயும், சுக்கும், மிளகும், திப்பிலியும் யாருக்குத் தீங்கு இழைத்து விட்டன? நீங்கள் நம்பும் தீர்க்கதரிசிகளான விஞ்ஞானிகள்-மேனாட்டு விஞ்



சென்னை சாந்தி மண்டபத்தில் சென்ற மாதம் கடைசி வெள்ளிக்கிழமை 25ம் தேதி நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் திரைப்பாடக திரு எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்கள் தேவார திருவாசகப் பதிகங்களையும் ஞானியர் சில பகுதிப் பாடல்களையும் மெய்யுருகப் பாடிக் கூட்டத்தினரைப் பக்தி பரவசத்தில் ஆழ்த்தி விட்டார். இப்பிரார்த்தனைக் கூட்டத்துக்கு ராஜாஜியும் விஜயம் செய்து சிறப்பித்தார்.

ஞானிகள் — முடிவான அபிப்பிராயம் காணாத பொருள்களும் மருந்துகளும் எத்தனையோ இருக்கின்றனவே! அவற்றை மட்டும் கொடுக்கலாமா?''

''அம்மாதிரியாக ஒரு மருந்தும் கிடையாது; ஒரு பொருளுமே கிடையாது. இருந்தால் ஒன்றே ஒன்று சொல்லுங்கள், பார்ப்போம்!''

''ஏன் இல்லை? இந்தச் சிரிப்பாகச் சிரித்த பி. ஸி. ஜியை எடுத்துக் கொள்ளுங்களேன்! அதில் குணம் இருக்கிறது என்பார் ஒருவர். குணமில்லை என்பார் இன்னொருவர். 'குணமிருக்கிறதென்று சொல்ல முடியாதுதான். ஆனால் அதில் கெடுதல் எதுவும் இல்லை' என்பார் மற்றொருவர். 'அடடா! அது மிகவும் ஆபத்தானது' என்பார் மற்றுமொருவர். இப்படி நிச்சயமற்ற பொருளை— அல்ல, அல்ல—மருந்தை, பாமர மக்களுக்குச் செலுத்தலாமா?''

''அதைப் பற்றிப் பேச உமக்கு என்ன உரிமை யிருக்கிறது? நீங்கள் என்ன மேல்நாட்டு வைத்தியம் படித்த நிபுணரா? விஞ்ஞானப்படி ஆராய்ச்சிகள் செய்திருக்கிறீர்களா?''

''அறிவு எல்லோருக்கும் பொது. குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிப் பேச என் உரிமையைக் கேட்கிறீர்கள். சுக்கு மிளகைப்பற்றிப் பேச உங்களுக்கு இருக்கும் உரிமையைவிட, பி. ஸி. ஜியைப் பற்றிப் பேச எனக்கு இருக்கும் உரிமை குறைந்ததில்லை. சுக்கு, மிளகு முதலியவைகளின் குண குணங்களைப் பற்றி உங்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் பலர் ஆராய்ச்சிகள் செய்து முடிவை வெளியிட்டுள்ளனர். அது விஷயம் உங்களுக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் நீங்கள் இப்படிப் பேச மாட்டீர்கள். இன்றையத் தேதியில் வேணுமானால் நீங்கள் பயின்ற கலையை நானும் பயிலவும் உங்களையும் மிஞ்சிவிடக்கூடிய அளவுக்குத் தேர்ச்சி பெறவும் கூடும். ஆனால் உங்களுக்கோ...? எங்களது கலையைப் பயில அவசியமான இலக்கிய இலக்கணங்களையும், மொழியையும் துணைக் கலைகளையும் படிக்கவே இந்த ஆயுட்காலம் போதாது. இதுதான் உங்களுக்கும் எனக்குமுள்ள வித்தியாசம். ஆகவே, யார் கலையைப் பற்றிப் பேச யாருக்கு உரிமை உண்டு என்று நீங்களே சொல்லுங்கள்!''

''என்ன சொல்கிறீர்கள்?''


''முன்னோரைப் பழிக்கிறீர்கள். அவர்களது சொற்களைக் குறை கூறுகிறீர்கள். அப்படி உங்களது முன்னோரை நீங்களே தூற்றுவீர்களானால் நாளை உங்கள் சந்ததிகள் உங்களையே குறை கூறுவார்கள். ஒரே ஒரு உதாரணத்தைச் சொல்லிவிட்டு முடித்து விடுகிறேன். என்றைக்கோ ஒரு நாள், யாரோ ஒருவன் ஏதோ ஒரு பாத்திரத்தில் கங்கை ஜலத்தை நிரப்பி வைக்கிறான். எத்தனை வருஷங்களானாலும் அந்த நீர் அசுத்தமாவதில்லை. விஞ்ஞான முறைப்படி சேகரித்த ஜலங்கூடப் புழுத்து நெளியத் தொடங்கி விடுகிறது. ஆனால் கங்கை ஜலம் அவ்வாறு ஆவதில்லை. கங்கை நீர் புனிதமானது. அகத்தையும் புறத்தையும் ஒருங்கே சுத்தமாக்க வல்லது என்று நம் முன்னோர் சொன்னது பொய்யா?''

(தொடரும்)





பாலர் மலர்




''குழந்தைக்கு டான்ஸ் காட்டுவதற்குக் கொண்டு போகிறீர்களா?''

''இல்லை, என் குழந்தை தான் டான்ஸ் ஆடப்போகிறது. அதற்குத் தான் குழந்தையை எடுத்துக் கொண்டு போகிறேன்.''

இங்கிலாந்தில், 1757—1825 ஆண்டுகளுக்கிடையே வசித்து வந்த ஜான்காப் என்ற குருடர், எந்தச் செடியையும் தம் நாவினால் ருசி பார்த்தே அது என்ன செடி என்று சொல்லி விடுவார்.




சாமா




குட்டிக் கதை




மணி என்ற முயல் அதிவேகமாகப் பள்ளிக்கூடத்துக்கு ஓடிக் கொண்டிருந்தது. பஸ்ஸ்டாண்டை அடைய ஒரு நீண்ட பாலத்தைக் கடக்க வேண்டியிருந்தது. திடீரென்று ஒரு குரல் கேட்டு முயல் மணி திரும்பியது. ஓர் ஆமை தலைகீழாகத் திரும்ப முடியாமல் தவித்துக் கொண்டிருந்தது. ''முயலாரே! தயவு செய்து என்னைப் புரட்டி விட்டு விடுங்கள். இல்லையானால் நான் இப்படியே உயிரை விட வேண்டியதுதான். என்னை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றுங்கள்!'' என்றது. முயல்வெகு நேரம் சிரமப்பட்டு ஆமையைத் திருப்பி விட்டது. ஆமைக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. ''இந்த உதவிக்கு நான் உங்களுக்கு என்ன கைம்மாறு செய்வது?'' என்று கேட்டது ஆமை. முயலுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ''அடடா! பஸ் கூட வந்து விட்டதே. நான் எப்படிப் பாலத்தைக் கடந்து பஸ்ஸைப் பிடிப்பேன்?'' என்று தவித்தது. ''முயலாரே! இதற்கு ஏன் தவிக்கிறீர்கள்? என் முதுகின்மேல் ஏறிக் கொள்ளுங்கள். நான் கொண்டு விட்டு விடுகிறேன்'' என்றது ஆமை. இதைக் கேட்டு முயலுக்குச் சிரிப்பு தாங்கவில்லை. ஆமை ''சிரிக்க வேண்டாம். நீங்கள் ஊரைச் சுற்றிக்கொண்டு போய் பஸ்ஸைப் பிடிப்பதற்குள் நான் தண்ணீரில் குறுக்கு வழியில் கொண்டு விட்டு விடுகிறேன். ஜலத்தில் என் வேகத்தை யாரும் மிஞ்சிவிட முடியாது'' என்றது. அதன்படியே முயலை முதுகில் ஏற்றிக் கொண்டு பஸ் வருவதற்கு முன்பே முயலை பஸ் ஸ்டாண்டில் கொண்டு போய்ச் சேர்த்தது.





மிருங்காவதி
சித்திரத் தொடர்கதை
3
1 அந்த அழகசுந்தரியைச் சுற்றிப் பணிப்பெண்கள் இருந்தனர். தன்னை அழைக்காமல் இருந்தும் அவளருகில் போய் அமர்ந்தான். அப்பொழுது அந்தப் பெண் கண்ணீர் விடத் தொடங்கினள். கண்ணீர் ஆறகப் பெருகி வழிந்தோடியது. இதைப் பார்த்த தேவிதத்தன் மனமுருகினன்.
2 பெண்ணரசி! நீ யார்? ஏன் கண்ணீர் விடுகிறய்? உன் துயரத்துக்குக் காரணம் யாது?
3 அதைக் கூறினால், அவள் துயரைத் தன்னால் தீர்க்கமுடியும் என்று தேவிதத்தன் கூறினன்.
4 சற்றுத் தயக்கத்துடன் அவள்......
5 அங்கர் அரசனான பாலய்யின் ஆயிரம் புத்திரிகளில் நான் மூத்தவள். என் பெயர் அழகசுந்தரி. எங்கள் தாத்தாவை விஷ்ணு நீண்ட காலம் சிறைப் படுத்தியதுடன்...
6 குஸ்திச் சண்டையில் என் தந்தையையும் கொன்று விட்டார்.
7 பிறகு எங்களை நகரைவிட்டுத் துரத்தி, நாங்கள் உள்ளே வராமல் தடுப்பதற்கு அங்கே ஒரு சிங்கத்தைக் காவல் வைத்து விட்டார்


1 "அந்தச் சிங்கம் முன்பிறவியில் யக்ஷனாக இருந்தது. தபோனின் சாபத்தினால், அவனுக்கு அந்தக் கதி ஏற்பட்டிருந்தது. நாங்கள் வாழ்ந்த இடத்தில் ஒரு சிங்கம் வாழவே எங்கள் உள்ளத்தில் துக்கம் குடி கொண்டது."
"விஷ்ணுவை வணங்கி, எங்கள் நகருக்கு மீண்டும் நாங்கள் எப்பொழுது போவோம்? என்று கேட்டோம். 'சிங்கத்தின் உருவில் இருக்கும் யக்ஷனை ஒரு மனிதன் வென்றால் அவன் சுய உருப் பெறுவான்' என்னும் உண்மையை அவர் கூறினார்." 2
"ஆகையால் எங்கள் பகைவன் சிங்கத்தை வெல்ல வேண்டும். மாவீரனே! இந்தப் பணியை நிறைவேற்றவே நான் உன்னை மயக்கி இங்கே அழைத்து வந்தேன். சிங்கத்தை வென்றதும் சாபம் நீங்கிய யக்ஷன் மிருங்கா என்னும் வாளை உனக்குப் பரிசாக அளிப்பான். அந்த வாளின் மகிமையால் நீ உலகத்தை வென்று அதன் அரசனாவாய்!" 3
மிருங்கா
4 'ஆஹா! அப்படியே செய்கிறேன்' என்றான் தேவிக்கன்.
(தொடரும்)

2. பரிசுப் பொருள்

தாமிர உலகை அடைந்ததும் கழுகரசன் "இங்கே தான் என் அக்கா வசிக்கிறாள். நாம் அவள் வீட்டில் சில நாட்கள் தங்கி யிருப்போம். அவள் உங்களுக்கு நிறையப் பரிசுகள் தர முன் வருவாள். அவற்றை யெல்லாம் வாங்கிக் கொள்ளாதீர்கள். 'எனக்குப் பரிசு கொடுப்பதானால் தங்கள் தாமிரப் பெட்டியைக் கொடுங்கள்' என்று கேளுங்கள்!" என்று கூறினான்.


இப்படிச் சொல்லிக் கொண்டே கழுகு பூமியில் வேகமாக இறங்கிவிட்டது. அவ்வளவு தான்; கழுகு ஒரு அழகிய இளைஞனாக மாறிவிட்டது!

கழுகு இறங்கிய இடம், தமக்கை வசிக்கும் அரண்மனையின் முற்றம். அங்கு இளைஞனாக மாறிய கழுகும் வியாபாரியும் கை கோத்துக் கொண்டு நடந்தார்கள். தூரத்திலேயே அக்கா தன் தம்பியைப் பார்த்து விட்டாள். முகம் எல்லாம் மலர்ந்து விட்டாள். மிகுந்த அன்போடு தன் தம்பியை வரவேற்றாள்.

"தம்பி, வந்து விட்டாயா! உன்னைப் பார்த்து மூன்று வருஷங்களுக்கு மேலாகி விட்டனவே! நீ இறந்தே போய் விட்டாய் என்று முடிவு கட்டி விட்டேன். கடவுள் கிருபையால் நீ உயிரோடிருக்கிறாய் என்பதை யறிந்து எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா? இப்பொழுது உனக்கு என்ன தரட்டும்? என்ன சாப்பிடுகிறாய்? அதைச் சொல்!" என்றாள் அக்கா பரிவுடன்.

"என்னை விட்டுத் தள்ளு அக்கா. என்னை உபசரிப்பது இருக்கட்டும். நான் நம குடும்பத்தைச்சேர்ந்த ஆள். இதோ இருக்கிறாரே இவரைக் கேள். இவர் தான் எனக்கு மூன்று ஆண்டுகள் சாப்பாடு போட்டுக் காப்பாற்றியவர். இவர் இல்லாவிட்டால்! நான் பட்டினி கிடந்து செத்தே போயிருப்பேன்!"

இதைக் கேட்டு அந்த இளைஞனுடைய தமக்கைக்கு நன்றியும் உவகையும் பொங்கி விட்டன. அவ்விருவரையும் உட்கார வைத்து மிகுந்த அன்போடு அறுசுவை யுண்டி படைத்து உபசரித்தாள். சாப்பா



டெல்லாம் ஆன பிறகு வியாபாரியைத் தனியாக அழைத்து. "ஐயா! இதோ பாருங்கள். இந்த அறையில் வேண்டிய பொன்னும் மணியும் வெள்ளியும் இருக் கின்றன. உங்கள் மனசுக்குப் பிடித்தவை களை வேண்டிய அளவு எடுத்துக் கொள் ளுங்கள்" என்றாள்.

"அம்மா! எனக்குப் பொன்னும் வெள்ளி யும் வைரமும் எதற்கு? எனக்குஉங்களிடம் இருக்கும் தாமிரப் பெட்டியைக் கொடுத் தாலே போதும்!" என்றான் வியாபாரி.

"ஓ! உங்களுக்கு அந்தப் பெட்டியா வேண்டும்! ஐயா, உங்களுக்கு ஒருநாளும் அதைத் தரமுடியாது! ஆமாம்!" என்று கண்டிப்பாகக் கூறி விட்டாள்.

தம்பிக்கு அக்காவின் இந்தக் கடுமை கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவனுக்குக் கோபமே வந்துவிட்டது. உடனே கழுகாக மாறி னான்; வியாபாரியைத் தூக்கித் தன் முதுகின் மீது வைத்துக் கொண் டான். வானில் பறந்து போகத் தலைப்பட்டான்.

"தம்பி, தம்பி! நீ போகாதே. வா!" என்று அழைத்தாள் அக்கா. அவன் கூறியதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

அக்காவுக்குப் பரிவு அதிகரித்து விட்டது. "தாமிரப் பெட்டியை வேண்டுமானாலும் கொடுக்கிறேன்!"

"இவ்வளவு தாம தித்துத் தருவதாகச் சொன்னால், யாருக்கு அக்கா வேண்டும்? கேட்டவுடன் தாரான மாகக் கொடுத்திருக்க வேண்டும்! இப்பொழுது கொடுப்பதாகச் சொல்லி என்ன பிரயோசனம்? நான் போகிறேன். போ!" என்று கூறி விட்டுக் கழுகு வேகமாகப் பறக்கத் தொடங்கி விட்டது.

வானவீதியில் பறந்துகொண்டே கழுகு, "ஐயா, வியாபாரியே! முன்னால் என்ன பார்க்கிறீர்கள்? பின்னால் நீங்கள் என்ன பார்க்கிறீர்கள். சொல்லுங்கள், பார்க்க லாம்" என்று கேட்டது.

"பின்னால் தூரத்தே நெருப்புப் பற்றிச் சுவாலை வீசி எரிவதைப் பார்க்கிறேன். முன்னால், புஷ்பங்கள் அழகழகாக மலர்ந்த சோலையைக் காண்கிறேன்" என்றான்.

"தாமிர உலகம் பற்றி எரிகிறது. புஷ் பங்கள் மலர்ந்திருக்கும் பிரதேசம்தான் வெள்ளி உலகம். அங்குதான் என் நடு அக்கா வசிக்கிறாள். நாம் அங்கே போவோம். அவளும் உங்களுக்குப் பரிசுப் பொருள்கள் கொடுப்பாள். வாங்கிக் கொள்ளாதீர்கள். வெள்ளிப் பெட்டி தான் வேண்டுமென்று கேளுங்கள்!" என்று சொல்லிக் கொடுத்தது கழுகு.

தாமிர உலகத்தில் நடந்தாற் போலவே, வெள்ளி உலகை அடைந்ததும் கழுகு இளைஞனின் உருவம் எடுத்துக் கொண் டது. அக்காவுக்கு வியாபாரியை அறி முகப்படுத்தினான். அக்காவின் உபசரிப்பும் நடந்தது. கடைசியில் பரிசுப் பொருள் விஷயம் வந்த போது, வியாபாரி வெள்ளிப் பேழைதான் வேண்டுமென்று சொன்னான். இந்தத் தமக்கைக்குக் கோபம் வந்து விட்டது. "இதைத் தேடிக் கொண்டுதான்



இவ்வளவு தூரம் வந்தாயா? அதை உனக் குக் கொடுக்கவே முடியாது போ!" என்று கூறினாள்.

அவ்வளவுதான்; இளைஞன் கழுகாக மாறினான். வியாபாரியைத் தூக்கி முதுகில் வைத்துக் கொண்டு நொடியில் பறந்து போய் விட்டான். அவன் தமக்கையோ, "தம்பி! தம்பி!" என்று பலமுறை அழைத் தாள். கழுகு அங்கே இருந்தால்தானே!

கடைசியாகக் கழுகு தனது கடைசி அக்கா இருக்கும் பொன்னுலகத்துக்குச் சென்றது. அங்கும் இவர்களுக்கு ஆசார உபசாரங்கள் நடந்தன. பரிசு கொடுக்கும் தறுவாயில், வியாபாரி கழுகு சொல்லி வைத்திருந்தாற் போலத் தங்கப்பெட்டி

தான்வேண்டும் என்று சொல்லிவிட்டான். உடனே அந்தத் தங்கப் பெட்டியைக் கொண்டு வந்து வியாபாரியிடம்கொடுத்தது. "உங்களுக்கு எல்லாவித நலன்களும் உண்டாகட்டும். இந்த அதிர்ஷ்டப் பெட்டியை எடுத்துக்கொள்ளுங்கள். என் தம்பியை மூன்றாண்டுகள் வைத்து அன்போடு காப்பாற்றினீர்களே! அதற்குக் கைம்மாறாக நான் என்னதான் கொடுக்கக் கூடாது!" என்று கூறினாள்.

பிறகு சமுகரசனின் தமக்கையின் விருப்பத்துக்கிணங்க சில நாட்கள் வியாபாரி பொன்னுலகத்தில் சந்தோஷமாகத் தங்கியிருந்தான். பின் தன் சொந்த ஊரை நோக்கிப் புறப்பட்டான்.

அப்போது சமுகரசன் அவனைப் பார்த்து "ஐயா, நான் உங்களுக்கு ஏதாகிலும் கஷ்டம் அளித்திருந்தாலும் தயவுசெய்து மன்னித்து விடுங்கள். என் மேல் கோபம் கொள்ளாதீர்கள். இன்னொரு விஷயம். இந்த மந்திரப் பெட்டியை நீங்கள் வீட்டுக்குப் போன பிறகு திறந்து பாருங்கள். அதற்கு முன்னால் வழியில் திறக்கவேண்டாம். ஜாக்கிரதை!" என்று எச்சரிக்கை செய்து அனுப்பினான்.

* * *

வியாபாரி தன் சொந்த ஊரை நோக்கி நடக்கலானான். எத்தனை நாள் நடந்தான் என்று யாரால் சொல்ல முடியும்? ஆனால் அவன் நடந்து நடந்து மிகவும் களைத்துப் போனான். அவனுக்கு எங்கேயாகிலும் சற்றுத் தங்கி ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் போல் தோன்றியது. வழியில் ஒரு பெரிய மைதானம் தென்பட்டது. அங்கு சற்று நேரம் உட்கார்ந்து ஓய்வு எடுத்துக்கொண்ட பிறகு புறப்படலாம் என்று தீர்மானித்தான்.

அந்த மைதானம் ஒரு ராட்சஸ மன்னனுக்குரிய பிரதேசம். இது வியாபாரிக்குத் தெரியாது. மைதானத்தில் உட்கார்ந்து காலை நீட்டி ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தான். ஓய்வு எடுத்துக் கொள்ளும் பொழுது சும்மா இருக்க முடிகிறதா? தன் கையிலிருந்த தங்கப் பெட்டியை ண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு அவனுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அவனை அறியாமலே மந்திரப் பெட்டியைத் திறந்து விட்டான். மந்திரப் பெட்டியைத் திடீர் என்று திறந்த மாத்திரத்தில், ஒரு பெரிய அரண்மனை போன்ற மாளிகை அந்த மைதானத்தில் தோன்றி விட்டது. என்ன ஆச்சரியம்! அந்த மாளிகையில் ஏராளமான வேலைக்காரர்கள், அலங்காரங்கள், வசதிகள் எல்லாம் நிரம்பியிருந்தன.

இந்தப் பெரிய மாளிகையைப் பார்த்து வியாபாரி மலைத்து நின்றான். அதே சமயம், "ஐயா, தங்களுக்கு என்ன வேண்டும் என்று தயவுசெய்து சொல்லுங்கள்!" என்று குரல் வந்தது.

"எனக்கு இப்பொழுது பசிக்கிறது. நல்ல சாப்பாடாக வேண்டும்" என்றான் வியாபாரி.

அவ்வளவுதான். இமை மூடி இமை திறக்கும் நேரத்துக்குள் அருமையான அறுசுவைச் சாப்பாடு வந்து சேர்ந்தது. அதைச் சாப்பிட்டானோ இல்லையோ, ஏற்கனவே நடந்து வந்த களைப்புடன் உண்ட களைப்பும் சேர்ந்து கொண்டது. கண்கள் கிறு கிறு வென்று சுழன்றன. அப்படியே படுத்துத் தூங்கி விட்டான்.

இவன் இப்படித் தூங்கிக்கொண்டிருக்கும்போது, அந்தப் பிரதேசத்து ராட்சத மன்னனுக்கு, அங்கு ஒரு பெரிய மாளிகை எழுந்திருக்கும் செய்தி எப்படியோ எட்டியது. உடனே அவனுக்குக் கோபம் வந்து விட்டது. தன் வேலைக்காரர்களைக் கூப்பிட்டு, "என்னுடைய நிலத்தில், என்னுடைய அனுமதியைக் கூடப் பெறாமல் இந்தப் பெரிய கட்டடத்தை எழுப்பியவன் யார்? அவனை உடனேயே இந்த மாளிகைகளை யெல்லாம் சுருட்டிக் கொண்டு என் ராஜ்யத்தை விட்டே ஓடச் சொல்" என்று கட்டளையிட்டான்!

அவ்வளவுதான்; வேலைக்காரர்கள் ஓடினார்கள். வியாபாரியினிடம் தங்கள் அரசனின் கட்டளையைச் சொன்னார்கள்.

இதைக் கேட்டவுடனேயே வியாபாரி நடுங்கினான். "ஐயோ! இந்த மந்திர மாளிகையை இந்த மந்திரப் பெட்டிக்குள் மறுபடியும் போகச் செய்யும் வித்தையை நான் கற்றுக் கொண்டு வரவில்லையே! இப்பொழுது நான் என்ன செய்வேன்! கடவுளே? வழியொன்றும் புரியவில்லையே!" என்று அவன் கைகளைப் பிசைந்தான்.

ராட்சத மன்னனின் வேலைக்காரர்கள் வியாபாரியின் பரிதாப நிலையைப் புரிந்து கொண்டார்கள். நேரே தங்கள் மன்னனிடம் ஓடிப் போய் வியாபாரியின் பரிதாப நிலையைச் சொன்னார்கள்.

இதைக் கேட்ட மன்னன், "அப்படியானால் ஒரு காரியம் செய்யட்டும் இந்த வியாபாரி. இவன் வீட்டுக்குப் போனதும், ஒரு புதுப் பொருளைக் காண்பான். அந்தப் பொருளை எனக்கு அனுப்பி வைத்துவிடுவதாக வாக்களித்தால் இந்த மந்திர வீட்டை மீண்டும் அந்தப் பெட்டிக்குள் நான் போகச் செய்கிறேன். இதற்கு அவன் ஒத்துக் கொள்கிறானா என்று கேட்டுவிட்டு வாருங்கள்" என்றான்.

வியாபாரி ஒத்துக் கொள்ளாமல் வேறு என்ன செய்வான்? (தொடரும்)




டுமெக்ஸ்

பால் உணவு



குழந்தைகளால் அவர்கள் ஏன் டுமெக்ஸ் பால் உணவை விரும்புகிறார்கள் என்று சொல்லமுடியாது. ஆனால் அது கிடைத்ததும் அவர்கள் எவ்வளவு மகிழ்ச்சி அடைகிறார்கள் என்பதைக் கவனியுங்கள். இதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை, ஏனென்றால் டுமெக்ஸ் தான் தாய்ப்பாலுக்கு அடுத்த சிறந்த பால் உணவாக விளங்குகிறது.

உங்கள் குழந்தைகளுக்கு டுமெக்ஸ் பால் உணவைக் கொடுத்து அவர்களின் வளர்ச்சியைக் கவனியுங்கள்



13. கண்ணீர்க் கங்கை

பானுவுக்கும் ராஜாவுக்கும் நடந்த பேச்சுக்களை யெல்லாம் மார்க்கபந்து கவனித்தும் கவனியாதவர் போல் சுந்தரியம்மாளின் படுக்கைப் பக்கம் போய் உட்கார்ந்து கொண்டார். விடுவிடென்று அறைக்குச் சென்ற ராஜா கையில் இரண்டு புத்தகங்களுடன் திரும்பி வந்தான். ''இதை யெல்லாம் படித்துப் பார், பானு! உனக்கு எளிதில் விளங்கும்'' என்று அம்மியடியில் அமர்ந்திருந்த பானுவிடம் கொடுத்தான்.

''அலமாரியில் வையுங்கள், கைக் காரியமாயிருக்கிறேன்!'' என்றாள் பானு. வேலை யெல்லாம் முடிந்த பிறகு அவள் அந்தப் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தாள். 'பாட்டாளியே, நீ அறி!' என்ற தலைப்புடன் ஒரு புத்தகம். அது மா. பரிதிமால் எழுதிய புத்தகம். அதுதான் அவன் வைத்துக் கொண்டிருக்கும் பெயர் என்பதைச் சுந்தரியம்மாள் சொல்லி அவள் அறிந்திருந்தாள். இன்னொன்று ''புரட்சி எங்கே?'' என்ற புத்தகம். அது எழுதப்பட்டவரின் பெயர் நம் நாட்டுப் பெயரல்ல. பானுவுக்கு வாயில் நுழையவில்லை. இதைத் தவிர சில துண்டுப் பிரசுரங்களும் வைத்திருந்தான். ஓய்வு நேரங்களில் அவள் அந்தப் புத்தகங்களைப் படித்துப் பார்த்தாள். முதல் பத்துப் பக்கங்களே அவளுக்கு அலுப்பைக் கொடுத்தன. அவன் பேசிக் கேட்பதுபோல்தான் புத்தகத்து வாசகங்களும் இருந்தனவே ஒழிய, வேறு வித்தியாசமில்லை. கதைப் புத்தகம் என்றால் பானுவுக்குப் பிடிக்கும்.




எனவே இன்னொரு முறை அவன் புத்தகம் கொடுக்கிறேன் என்று வந்தால் கதைப் புத்தகம் கேட்கலாம் என்று அவள் எண்ணிக் கொண்டாள்.

ஆனால் அவன் வந்தபோது கேட்கத் துணிவில்லை. ''படித்தாயா, அந்தப் புத்தகங்களை?'' என்று விசாரித்த போது தலையை ஆட்டி வைத்தாள். மேலும் மேலும் அவன் நிகழ்த்திய பிரசங்கங்களையெல்லாம் பொறுமையுடன் செவிமடுத்தாள். அதன் பலன் அவன் கொள்கைகளை அவள் தழுவினளோ இல்லையோ, பழக்கம்முதிர்ந்தது.

சுந்தரியம்மாளை ஒருவகையில் கெட்டிக்காரி, முன் யோசனைக்காரி என்று சொல்ல வேண்டும். குடும்பம் என்று ஏற்பட்டால் அவள் நோக்கு திரும்பவாம், மாற்றத்துக்கு இடமுண்டு என்பதையே அவள் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். எனவே, பானுவிடம் அவன் வலியப் போய்ப் பேசிப் பழகியதைக் கண்டு அவள் முகத்திலே நம்பிக்கை ஒளி படர்ந்தது. ஒரு சமையற்காரப் பெண் தன் மருமகள் ஸ்தானத்திலே வருவதில் உள்ளூற அவளுக்கு விருப்பமில்லைதான். என்றாலும், முதலே கிடைக்காதோ என்ற நிலைமையில் வட்டியைப் பற்றிக் கவலைப்படுவது சாத்தியமா? ஏதோ கிடைத்தவரை சந்தோஷப்பட வேண்டியதுதான்.

'பெண் அழகு. நகை நாணயமில்லாமலேயே பளிச்சென்று இருக்கிறாள். நாதி இல்லாததால் கைக்கடங்கி வாய்க்கு அடங்கி இருப்பாள், கவடுசூதும் இல்லை' என்றெல்லாம் தேற்றிக் கொண்டாள். ஆனாலும் இந்தத் திருப்தியை வெளியில் காட்டிக் கொள்ளலாமா? அது எஜமானி என்ற கௌரவத்துக்கே இழுக்காயிற்றே? எனவே, மேலுக்கேனும் பானுவை அழைத்துக் கண்டித்தாள்.



''அடி பானு! அவனோடு என்ன பேச்சு, எப்போது பார்த்தாலும்? யார் என்ன என்ற நினைப்பில்லை போலிருக்கிறது! இன்னொரு தரம் நான் கண்டால் எனக்குக் கெட்ட கோபம்வரும்!''

பானு தடுமாறினள்!

''அவர்,...உன்னை வந்து பேசக் கொடுத்தால் நான் என்ன செய்யட்டும், மாமி? எனக்கே பயமாக இருக்கிறது. சம்பளத்தைக் கணக்குப் பார்த்துக் கொடுத்து விடுங்கள். நான் பாட்டிக்குக் கடிதம் எழுதி விடுகிறேன்'' என்று கூறியபொழுது பானுவின் குரலிலே இலேசாக அழுகை இழையோடியது.

இதை அவன் மாடியிலிருந்தே கேட்டு விட்டான்போலும்! அவன் அருகிலிருக்கையில் இந்த அக்கிரமம் நடப்பதாவது?

''அம்மா!...'' என்று கனல் பறக்கக் கூவிக் கொண்டு வந்தான். ''ஏழைப் பெண்களை உன்னைப் போன்ற சோம்பேறிகள் கசக்கிப் பிழிவதை நான் ஒரு நாளும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டேன்! மனிதனை மனிதன் நசுக்கும் கொடுமையைத் தவிர்க்க வீடுகளிலே தான் முதலிலே புரட்சி உண்டாக வேண்டும்!'' என்று கூறினன்.

சுந்தரியம்மாளைச் சோம்பேறி என்று அவனைத் தவிர வேறு யார் கூறிவிட்டுப் பிழைக்க முடியுமா?

''உன்னுக்கெல்லாம் நோய்; உண்டது ஜீரணமாகவில்லை. மருந்தும் வைத்தியர் பில்லும் வீட்டை விழுங்குகின்றன! ஒரு பாட்டாளியின் மனைவியைப் போய்ப் பார்! கறுப்புச் சந்தையில் கஞ்சிக்கு அரிசி வாங்கக் கையில் காசின்றிக் கண்ணீர் விடுகிறாள். ஏன்? உனக்கு என்ன கேடு! எழுந்து வேலை செய்வதற்கு என்ன? சதை கரையட்டுமே?''

சுந்தரியம்மாள் விம்மி விம்மி அழுதாள். பானு சிலையாக நின்றாள். சுந்தரியம்மாளின் உள்ளெண்ணம் அவளுக்கு எப்படித் தெரியும்? இனமறியாத அச்சம் பானுவின் உடலினுள் குளிர்போல் பரவியது.

பாட்டியோ வேறு தெரிந்தவர்களோ இப்போது வரலாகாதா? அம்மாவோ அப்பாவோ இருந்தால் இப்படி எல்லாம் துன்பங்கள் வருமா? இது எதிலே கொண்டுபோய் விடுமோ என்றெல்லாம் கேட்டுக் கொண்டவளுக்கு அழுகை பீறிட்டுக் கொண்டு வந்தது. அப்போது மார்க்கபந்துவும் வீட்டில் இல்லை. சமையல் அறைக்குள் புகுந்து கொண்டு பிழியப் பிழிய அழுதாள். காலடிச் சத்தமும் வேட்டி விசிறும் ஓசையும் கேட்கவே, சட்டென்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

ராஜா தயங்காமல் அடுக்களைக்குள் நுழைந்தான். பாட்டாளியின் துயரம் துடைக்கும் தோழனல்லவா?

அவள் தோளில் அவன் கைவைத்ததும் திடீரென்று உடல் அல்லித் தண்டாகி ரத்தம் உறைந்து விட்டாற் போலிருந்தது. வாய் விட்டுக் கத்த முயன்றவளுக்குப் பேச்சு எழவில்லை.

''பானு, உன் சுதந்திரத்தில் நான் குறுக்கிடுவதாக நினைக்கிறாயா? ஏன் இப்படி நடுங்கிக் கண்ணீர் விடுகிறாய்?''

தடுமாறினாள் பானு. "நான் இனி மேல் இங்கு இருக்க முடியாது. சம்பளப் பணத்தைக் கொடுத்து ஊருக்கு அனுப்பிவிடுங்கள்.." என்று மெல்லிய உதடுகள் துடிக்க விம்மினாள்.

"ஏன், பானு? உனக்கென்ன கஷ்டம்? உனக்கு ஆட்சேபம் இல்லை என்றால் நான் உன்னை மணந்து கொள்ளச் சித்தமாக இருக்கிறேன். அந்தஸ்து கீழ், மேல் எல்லாம் ஒழிய வழி கோலுவேன்! உனக்குச் சம்மதமா, சொல்!" என்று ஒளிவு மறைவு தயக்கம் எதுவும் இன்றித் தைரியமாகக் கேட்டான்.



பானு ஒரு கணம் தன் கரிய பெரிய விழிகளால் அவனை நேருக்கு நேர் நிமிர்ந்து பார்த்தாள்.

அவளைப் போன்ற வேலைக்காரப் பெண்ணுக்குக் கிடைக்கக் கூடிய அதிர்ஷ்டமா? அவன் படித்தவன்; அதிகம் படித்தவன். செல்வமும் சிறப்பும் மிகுந்தவன்.

அவன் கை இன்னமும் அவள் தோள் மீதே இருந்தது. கூடை கவிழ்ந்து மலர்க் குவியல் தன் மீது சிதறினாற்போல் அவளுக்கு உடல் சிலிர்த்தது.

காலம் இறக்கை கட்டிக் கொண்டு வேகமாகப் பறந்தது.

'உன்னை மணந்து கொண்டு அந்தஸ்து ஏற்றத்தாழ்வை ஒழிப்பேன்' என்று உறுதி கூறினவனுக்கு அவளைப் பற்றிச் சிந்திக்கக்கூட நேரமில்லாமல் இருந்தது. ஆம், பரிதிமாலின் பேச்சுக்கள் மூலைக்கு மூலை, சந்துக்குச் சந்து அனற் பொறிகளைக் கக்கின. பத்திரிகைகளில் தொழிலாளர் கிளர்ச்சி, கதவடைப்பு, வேலை நிறுத்த ஊர்வலங்கள் சம்பந்தப்பட்ட செய்திகளில் அவன் பெயர் முக்கியமாக அடிபட்டது. எப்போதேனும் புயல் சீறிவருவதைப்போல் வீட்டுக்குள் அவன் வந்து கொண்டிருந்தான். படிப்படியாக அதுவும் நின்று போயிற்று. பானு கிலி பிடித்தவளானாள். சுந்தரியம்மாளோ பித்துப் பிடித்தாற்போல் ஒரு வேளையில் சிரித்தாள்; ஒரு வேளையில் புலம்பி அரற்றினாள். வீட்டிலே மயான அமைதி நிலவியது. பேச்சு எழும்ப வேண்டிய அவசியமான சந்தர்ப்பங்களில் கூட மௌன ஜாடையோடு அமுங்கிப் போயிற்று. பானு சுந்தரியம்மாளிடம் வந்து நிற்பதையே கூடியமட்டும் தவிர்த்தாள். மார்க்கபந்து கவலையிலே மூழ்கி, அடிக்கடி வருவதையும் குறைத்துக் கொண்டார். வீட்டில் எப்போதாவது கலகலப்புக் குரல் கேட்டதென்றால் அது டாக்டர் வந்து போகும்பொழுதுதான். சுந்தரியம்மாள் இப்போது வியாதி சொல்ல மறந்து போனாளென்றாலும் டாக்டர் மருந்து கொடுத்து வந்தார்!

அவர்கள் எதிர்பார்த்ததும் ஒருநாள் நடக்காமலில்லை. ரயில்வே தொழிலாளர் ஆதரவில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்திலே அவன் கைதானான். தடியடி, கலாட்டாவைப் பற்றிய செய்திகள் சுந்தரியம்மாளைக் குலுங்கக் குலுங்க அழ வைத்தன. போலீஸார் திடும்பிரவேசமாக வந்தார்கள். வீட்டைச் சோதனை போட்டு அவன் புத்தகங்கள், காகிதங்கள், குப்பைகள் எல்லாவற்றையும் கொண்டு போனார்கள்.

மறுநாள் மார்க்கபந்து புறப்பட்டு வந்ததும் சுந்தரியம்மாள் ஆதரவற்ற குழந்தையைப் போல் கதறினாள். பானுவுக்கு வாய்விட்டு அழக்கூட வழியில்லை.

"தெரிந்த விஷயம்தானே, சுந்தரி! மனசைத் திடப்படுத்திக்கொள் என்று அப்போதே சொன்னேனே..." என்று தேறுதல் கூறிய மார்க்கபந்துவுக்கே தொண்டை அடைத்தது.

"விரதமிருந்து நோன்பிருந்து பெற்றுப் பெருமையாக வளர்த்தேனே, ஜெயிலுக்குப் போகவா வளர்த்தேன்? உண்டைக் கட்டிச் சோற்றுக்காகவா வளர்த்தேன்..?" என்று அரற்றினாள் அவன் தாயார்.

பானுவினால் அந்தக் காட்சியைப் பார்க்கவே சகிக்கவில்லை.

இந்த ரீதியில் மாசங்கள் பல ஓடின. ஒருநாள் இன்னொரு கலக்கும் செய்தி அவர்களுக்கு எட்டியது. போலீஸார் வேறு வீட்டுக்குள் வந்து விசாரித்துச் சோதனை போட்டுப் போனார்கள்.

அவன் சிறையிலிருந்து தப்பி ஓடிவிட்டானாம்!

சுந்தரியம்மாள் இச் செய்தி கேட்ட உடனேயே மூர்ச்சித்து விழுந்தாள். இதற்குப் பிறகு அவள் இருதயம் மிகப் பலவீனமாயிற்று. குணமே மாறியது. சீறிச் சீறி விழுந்தாள். அடித்துக் கொண்டு ஆத்திரத்தோடு அழுதாள். சமயம் வாய்த்தபோதெல்லாம் பானுமேல் வசை பொழிந்து தீர்த்தாள்.

பாவம், பானு! கஷ்டங்கள் வந்தால் ஒன்றன் பின் ஒன்றாகவா வரும்! யார் கூடவோ காசியாத்திரை போயிருந்த பாட்டி எங்கோ வழியிலேயே பிராணனை விட்டு வைத்தாள்! செய்திதான் ஒரு

மூக்காலணுக் கார்டிலே வந்தது. பாட்டியைப் பார்க்கக்கூட இல்லை. இனி, அவளுக்கு அந்த வீட்டைத் தவிர வேறு புகலிடம்தான் ஏது? எப்படி வேறு வீட்டுக்குப் போக முடியும்? சுந்தரியம்மாவின் வயிற்றெரிச்சலும் ஆற்றுமையும் சீறி வரும்போதெல்லாம் இலக்காக இருப்பதைத் தவிர வேறு வழி? அவளுக்கு யார் தேறுதல் கூறுவார்கள்?

டென் புத்தி பின் புத்தி என்ற வசனத்துக்கொப்ப, தான் பேதையாகி விட்டதை எண்ணி வருந்துவாளா? இல்லை, அறியாமை நிறைந்த அடலைப் பெண்ணுன அவளை அவன் வஞ்சித்து மோசம் செய்து விட்டானு? அவன் இனிமேல் எப்போது வருவானே? அவளை மணந்து கொண்டு ஏழை-பணக்கார வேற்றுமையை ஒழிப்பது என்பது சாத்தியமான காரியமா? அவள் அவனுக்கு ஏற்றவளாக முடியுமா? அந்தக் காலத்தில் வெள்ளைக்காரன் ராஜ்யத்தை விட்டு ஓட வேண்டும் என்று சிறைக்குப் போனுர்கள், சட்டங்களை மீறினுர்கள் என்பதை அவள் அறிவாள். ஏன் பூந்துறைப் பெரிய பண்ணை சுப்பராமனின் மூத்த மகன் சட்டமறுப்புச் செய்து சிறைக்குப் போனுர். அவர் அற்பாயுளில் இறந்திருக்காத போனுல் இன்று பெரிய பதவி வகிப்பார் என்று ஊரே சொல்லக் கேட்டிருக்கிருள். ஆனுல் இன்று இவன் சொல்வது நடக்கக்கூடிய காரியமா? வேலை நிறுத்தம் செய்யத் தூண்டி அடித்தொண்டை கிழியப் பேசி, ஊர்வலம் நடத்தி, தண்டவாளங்களைப் பெயர்த்துப் போட்டால் வேற்றுமையில்லாத சுபிட்ச ராஜ்யம் வந்து விடுமா? இத்தகைய கேள்விகள் எல்லாம் அவள் உள்ளத்துக்குள் புகுந்து விசுவரூபம் எடுத்து அவள் நிம்மதியைக் குலைத்தன. கிலியைக் கூட்டின. அவள் தூய்மையைக் குலைத்து, அபலையாய் விட்டுப் போனதுடன் அந்தஸ்து வேற்றுமை ஒழிந்துவிட்டதா? ஊரறிய, உலகமறிய அவள் தூய்மையழியாக் கன்னிதானே?

இந்நாட்களிலேதான் மார்க்க பந்து சிரமப்பட்டு மாற்றல் வாங்கிக்கொண்டு பூந்துறைக்கு வந்தார். பூந்துறை வீட்டில் அந்தத் திறந்த முற்றத்திலே உட்கார்ந்து அவள் கண்ணீர் வடித்திருக்கும் இரவுகள் எத்தனையோ?



ஒரு நாளிரவு. பத்தே முக்கால் 'எக்ஸ்பிரஸ்' வண்டி போய் விட்டது. பதினென்றரை 'கூட்ஸ்' வண்டி போகவில்லை. நல்ல இருட்டு. பக்கத்துத் தோப்பிலிருந்து வரும் சுவர்க் கோழிகளின் ரீங்காரத்தைத் தவிர வேறு சத்தமில்லை. பானு அந்த முற்றத்திலே தண்ணீர்த் தொட்டியின் விளிம்பில் உட்கார்ந்து தன் இருள் சூழ்ந்த எதிர்காலத்தை எண்ணிக் கொண்டிருந்தாள். அருகிலே சலசலப்புச் சத்தம் கேட்டது. தோப்பின் பக்கம்தான் முள் கம்பி வேலியைத் தாண்டி முற்றத்தில் யாரோ குதித்தார்கள். அவளுக்குச் சிந்திக்கவே நேரம் இருக்கவில்லை. திகைத்துப் போனவள், 'ஐயோ' என்று கூச்சலிடுவதற்குள் அவள் கழுத்தைச் சுற்றி ஒரு முரட்டுக் கரம் அணைக்க இன்னெரு கை வாயை மூடி விட்டது. தாடி மீசை அவள் கன்னத்திலே உராய்ந்து அவளுடைய கண்ணீரில் நனைந்தது. எல்லாம் கண் சிமிட்டும் நேரத்தில் நடந்தவை. மறுகணம் வந்தவன் மாயமாகப் போய் விட்டான். அவளுடைய கையிலிருந்த கசங்கிய கடிதத் துண்டுதான் அவன் வந்தது நிஜம் என்பதை அவளுக்குத் தெளிய வைத்தது. படபட வென்று இதயம் துடிக்கக் கதவைத் திறந்து கொண்டு சமையலறைக்குள் நுழைந்தாள். விளக்கைப் போட்டு விட்டுத் தன் கையிலிருந்த கடிதத் துண்டை எடுத்துப்பிரித்துப் படித்தாள்:

அன்பே பானு.

பாழ்மண்டபத்துக்குப் பின்னுல் ஆற்றங் கரையோரம் படுகைக்கு வருவாயா? . . . .

அன்பன், மா. ப.

இதைக் கண்டதும் அவளுக்குக் கண்ணீர் பொங்கி வந்தது. வாய் விட்டு அலற வேண்டும் போலிருந்தது. இரத்தம் வரும்படி உதட்டைக் கடித்து அடக்கிக் கொண்டவளாக நின்றுள்.

படித்தவனும், நயவஞ்சக அயோக்கியன்! அவள் பருவத்தைக் கருவியாக்கிக் கொண்டு வாழ்வைக் குலைத்தவன். இருட்டுக்குள் ஒளிந்து இன்னும் என்னென்ன நாசச் செயல்கள் புரிவானே? எத்தனை பேருக்கு யமனே?

அவள் உள்ளம் கொந்தளிக்க நிற்கையிலே ஒரு கை நீண்டு அந்தத் துண்டுக்

காகிதத்தை அபகரித்தது. பானு தேகமெல்லாம் நடுங்க, திடுக்கிட்டுப் பார்த்தாள்.

எதிரே மார்க்கபந்துதான் நின்று கொண்டிருந்தார்.

கடிதத் துண்டை அலட்சியமாகப் பார்த்தவரின் புருவங்கள் கூடின.

"அழாதேயம்மா, இங்கே வந்தானா அந்தப் பாவி?"

பானு பதில் ஏதுமின்றிக் கண்ணீர் பெருக்கினாள்.

"ஒரு கூச்சல் போடுவதற்கென்ன? கையும் மெய்யுமாய்ப் பிடித்துப் போலீசில் கொடுத்திருப்பேனே?"

"இனி என் கதி என்ன ஆகிறது மாமா...!" என்று விக்கினாள் பானு.

"அழாதே, நான் உன்னை அப்படிக் கைவிட்டு விடுவேனா, அம்மா! எனக்கு மூன்றாவது மகள் நீ. நீ மனசு வைத்தால் அவனைப் பிடித்துக் காவலில் வைத்து விடலாம். நான் தலைவேதனை இல்லாமல் உத்தியோகம் பார்க்கலாம். அவன் என் மகனில்லை, சமூக விரோதி என்று சொல்ல வேண்டும், பானு...." என்றார் மார்க்கபந்து.

பானுவுக்கும் அப்படிச் செய்தால் தான் மனக் கொதிப்பு அடங்கும் என்று தோன்றியது. அவர் இஷ்டப்படி அவனைச் சந்தித்துக் காட்டிக் கொடுக்க ஒப்புக் கொண்டிருப்பாள். ஆனால் சுந்தரியம்மாள் அவர்கள் எதிர்பாராதவிதமாகக் குறுக்கிட்டாள்.

அவள் பல நாட்கள் தவமிருந்து அருமையிலும் அருமையாகப் பெற்ற மகன்; போலீஸ், கோர்ட்டு, வழக்கு, சிறைவாசம் இத்தனைக்கும் அவனைக் காட்டிக் கொடுப்பதா? அவன் எங்கேயாவது தலைமறைவாகவேனும் உயிருடன் நடமாடிக்கொண்டிருக்கட்டுமே?

மார்க்கபந்துவின் காலைப் பிடித்துக் கொண்டு அவர் தம் மகன் விஷயத்தில் தலையிடக் கூடாதென்று அவள் கெஞ்சினாள்; கதறினாள்.

"இந்தப் பெண்ணுக்கு என்னடி சொல்கிறாய்?" என்று ஆத்திரத்துடன் கேட்டார் மார்க்கபந்து.

"அது நாமாகச் செய்து கொண்டதா? பாவி, சதிகாரி, இவளால்தான் இந்த வீட்டுக்கு இத்தனையும் வந்தது. அவனைக் கைக்குள் போட்டுக் கொண்டு இந்த வீட்டு அதிகாரத்தை வாங்கிக் கொள்ளத்தானே சூழ்ச்சி செய்தாள்? ஆணை, அவன்மீது! நீங்கள் ஒன்றும் நடவடிக்கை எடுத்துக் கொள்ளக் கூடாது. எடுத்துக் கொண்டால் நான் உங்கள் காலடியிலேயே பிராணத் தியாகம் செய்து விடுவேன்" என்றெல்லாம் புலம்புவதற்கு ஆரம்பித்து விட்டாள்.

தனக்கும் மகனுக்கும் இடையே உள்ள அன்பில் விரிசலை ஏற்படுத்திக் கொண்டு அவள் புகுந்தாள் என்ற பொறாமை மட்டுமல்ல; தன் மகன் உலகத்தவரைப் போல் சீரும் சிறப்புமாகச் சோபிக்கவில்லை என்ற ஏமாற்றத்தில் விளைந்த ஆத்திரம் இரண்டுமாக அவளுடைய உள்ளத்தில் வெகு நாட்களாகவே கொதிப்பைத் தோற்றுவித்திருந்தன. ஆனால் பானுவின் பொறுமையும் தன் மகன் குற்றம் புரிந்தவன் என்ற உணர்வும் அந்தக் கனலுக்கு அரணாக நின்று தடுத்திருந்தன. அன்று ஜ்வாலை கிளம்பவே அரண் சிதைந்து போயிற்று.

"சம்பளப் பணத்தை வாங்கிக் கொண்டு அன்றைக்கே தொலைந்திருக்கக் கூடாது? சதிகாரி, அவனுக்கு மருந்தோ மாயமோ இட்டு ஆக வெட்டாமல் அடித்துக் கெடுத்து விட்டாயே! தொலை, என் கண் முன் நிற்காதே! இந்த வீட்டில் நாளைக்கே வேறு ஆள் வரவேண்டும். இல்லாவிட்டால் நான் இருக்க மாட்டேன், வீடு தேடி வந்திருப்பவன் அம்மா என்று ஒரு தடவை என்னைக் கூப்பிட்டுப் பார்க்காமல் போய் விட்டானே? நான் ஒரு சொல் சொன்னால் மீறாதவன் இப்படி ஆகி விட்டானே... .."

அவள் கீச்சுக்குரலில் அரற்றி அழுத போது வீடே அதிர்ந்தது. மார்க்கபந்து விழித்தார். ஒருபுறமும் திரும்ப முடியாமல் தத்தளித்தார். மறுநாளே சின்னத் துரையைக் கண்டதும் பானுவை வேலையை விட்டு நிறுத்தி விட்டாள் சுந்தரி அம்மாள்.

அவள் அங்கு இருப்பதால் அசட்டுப் பையன் மறுபடியும் வருவானோ என்னமோ? தகப்பனும் அவளும் சேர்ந்து துரோகம் இழைத்துவிட்டால்?


சுந்தரியம்மாளின் மனம் இப்படி எண்ணமிட்டது.

பானுவுக்குத்தான் ஒன்றும் புரியவில்லை. என்றாலும் தைரியத்தைத் துணை கொண்டாள். அவனைக் கண்டு தன் கஷ்டங்களை விளக்குவது, சுந்தரியம்மாளின் பரிதாப நிலையை எடுத்துரைப்பது, நிலைபாக அவனிடம் எல்லாவற்றுக்கும் நிவாரணம் தேடுவது என்றெல்லாம் தீர்மானித்துக் கொண்டாள். ஆனால் அவன் கடிதத்தில் தெரிவித்திருந்த இடத்துக்கு இரு முறைகள் சென்றும் அவளால் அவனைச் சந்திக்கமுடியவில்லை.

"பானு! நீ அவனைப் பார்க்கவேயில்லையா பிறகு?...." என்று வியப்புடன் கேட்டான், இத்தனை நேரமாகக் கதையிலேயே மூழ்கிப் போயிருந்த சின்னத்துரை. (தொடரும்)


உலக முழுவதும்
விரும்பப்படும் ஒரு
இன்பகர பானம்
BARLOVA
பார்லோவ
HOT OR COLD
ஓரியன்டல் மர்க்கன்டைல் ஏஜன்ஸி
மதராஸ் -1


தாமரையின் அழகை நீங்களும் பெறலாம் . .
நேர்த்தியாயும், மிருதுவாயும், பட்டின் மென்மையுடன் கூடிய
எழிலைப் பெற இந்திய மங்கையர்கள் ஆஷா
முகப் பவுடரை உபயோகிக்கிறார்கள்.
உங்கள் விலைக்குகந்த
உங்களுக்குரிய பவுடர்
Asha
ஆஷா முகப் பவுடர்
Asha
FACE POWDER
விநியோகஸ்தர்கள் :
ஜியாபுரே மானேர்ஸ் அண்ட் கோ ப்ரைவேட் லிட்.
பம்பாய்—கல்கத்தா—டில்லி—மதராஸ்



மெழுகுவர்த்தி

ரமணி

“ராமூ! வீணாகப் பிடிவாதம் பிடிக்காதேடா! கூடப்பிறந்தவள்; தாய்க்குத் தலைப் பெண். வயிறும் பிள்ளையுமாக அங்கே கஷ்டப்படுவாள். நீ ஒரு கடிதாக எழுதினால் போதும்; அவள் மனசு இளகிவிடும். உடனே புறப்பட்டு வந்து விடுவாள். நான் எத்தனை சொன்னாலும் அவள் மனத்தாங்கல் ஆறாது!” என்று பார்வதியம்மாள் நயமாக எடுத்துச் சொன்னாள்.

“இல்லை, அத்தை! இந்த விஷயத்திலே நீ நீ என்ன சொன்னாலும் நான் கேட்கமாட்டேன்! நான் கடுதாசும் எழுதமாட்டேன்! அவளுக்கு மட்டும் என்ன, அவ்வளவு கர்வம்? அவள் வருவதை நான் தடை செய்யவில்லையே!” என்று கண்டிப்பாகக் கூறினான் ராமூ. பசையில்லாமல் பார வண்டிச் சக்கரங்கள் பயங்கரமாகக் கிரீச்சிடுமே, அதுமாதிரி அவன் குரலிலும் சகோதர பாசம் என்ற கனிவு இல்லாமல் வறட்சியாக இருந்தது.

“ஏன்டா! அவள் தானாக எப்படி வருவாள்? அவளுக்கும் மானம், மரியாதை கிடையாதா? உன் தமக்கை தானேடா, அவள்! போகட்டும், ராமூ, வீம்பை விட்டு விட்டுக் கடிதம் எழுதடா! இதோ, கடுதாசும் இருக்கிறது!” என்று, பலகாலம் உழைத்த ‘கிராமபோன் பிளேட்’ மாதிரி பேசினாள் பார்வதியம்மாள். அவளும் அந்தக் குடும்பத்தில் பலகாலம் உழைத்து உழைத்துத் தேய்ந்தவள்தான்.

ராமூ அத்தை கொடுத்த கடிதத்தைத் தூக்கி எறிந்தான்.

“அவள் சொன்னாளே, ‘நீ எனக்கு இனிமேல் தம்பி இல்லை; இந்த வீட்டு வாசலையும் மிதிக்கமாட்டேன்’ என்று! நான் அப்படி என்ன பெரிய தப்பு செய்து விட்டேனாம்? அவ்வளவு வீம்பாகப் போன அவள் தன் காரியத்தைத் தானே பார்த்துக் கொள்கிறாள், இந்த விஷயத்திலே. அத்தை நீ எத்தனை சொன்னாலும் என் காதிலே ஏறாது! வேண்டுமானால் நீ அவளிடம் போ! உனக்குப் பணம் தருகிறேன்.”

பார்வதியம்மாள் அவனைத் திகைப்போடு நிமிர்ந்து பார்த்தாள்.

“என் வார்த்தைக்குக் கூட மதிப்பு வைக்க மாட்டாயா, ராமூ! மனைவி வந்துவிட்டால், என்ன இப்படியா நடந்துகொள்ள வேண்டும்? தூக்கிவெடுத்து வளர்த்தவளைக் கொஞ்சங்கூட மதிக்காமல்?” என்று சற்று வேகத்துடன்தான் கேட்டாள் பார்வதியம்மாள்.

“ஏன், அத்தை நம் பேச்சில் அவளை இழுக்கிறாய்? நீ உழைத்தாய், வளர்த்துக் காப்பாற்றினாய் என்பதற்காக, மானத்தை விட்டு நடக்க நான் தயாராயில்லை!” என்று ஆத்திரத்தோடு சொல்லி விட்டு ராமூ வேகமாக வெளியேறினான்.

பார்வதியம்மாள் அவன் போவதையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள். கணவனைச் சண்டை போட்டு வெளியில் அனுப்பிய அத்தையம்மாளை இரு கண்கள் எரித்து விடுவன போல் நோக்கின. அவை ராமூவின் மனைவி ரேவதியின் விழிகள்தான்!

* * *

பால குருநாத சர்மா, ஒரு பெண்ணையும் ஒரு பிள்ளையையும் பெற்றாரே தவிர, அவர்களை வளர்க்க அவர் கொடுத்து வைக்கவில்லை; அதேமாதிரி சொத்தும் வைக்கவில்லை. பிள்ளையைப் பெற்றதும் மனைவி பெற்றதைப் போலவே பால குருநாத சர்மாவும் மூவாண்டில் காலமாகி விட்டார். ஆனால், அவர் மனைவியை விட, பாலகுருநாத சர்மா நிம்மதியாகவே இறந்தார். காரணம், இருபத்திநான்கு வயதில் கைம்பெண்ணாய், அண்ணனே அடைக்கலம் என்று, பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள நகையுடன் வந்த பார்வதிதான். பாலகுருநாத சர்மா இறக்கும்போது, “நீ கவலைப்படாதே, அண்ணா! உன் செல்வங்கள் இரண்டின் உயிர்தான் என் உயிர். அவர்களின் வளர்ச்சிதான் என் சந்தோஷம்” என்று கூறித் தைரிய மூட்டினாள் பார்வதி.

இந்தக் கடைசி வார்த்தையை இன்றளவும் மறக்கவில்லை பார்வதியம்மாள். ஆறு வயதுப் பங்கஜத்தையும், மூன்று வயதுப் பாலகன் ராமூவையும் சென்ற இருபத்தி மூன்று வருஷங்களும் கண் இமையைக் காப்பதுபோல் தான் காப்பாற்றி வந்தாள்.

பார்வதியம்மாள் தான் கொண்டு வந்திருந்த நகைகளில் சிலவற்றை விற்றாள். சாப்பாட்டுக்குப் போதுமான கொஞ்சம் நிலம் வாங்கினாள். சில நகைகளைப் பங்கஜத்தின் கல்யாணத்துக்காக ஒதுக்கி வைத்தாள். செட்டாக, ஆனால் குழந்தைகளின் நலனில் அக்கறையுடன் குடும்பத்தை நடத்தினாள்.

பங்கஜத்தை ஐந்தாவது வரையில் படிக்க வைத்தாள். ராமுவை எவ்வளவோ சிரமப்பட்டு, பத்தாவது வரை படிக்க வைத்தாள். அதை விடச் சிரமப்பட்டாள், பங்கஜத்தின் கல்யாணத்துக்கு ஆள் துணை இல்லாமல். ஒரு குக்கிராமத்தில் இருக்கும் பார்வதியம்மாள் எங்கிருந்து பங்கஜத்துக்குக் கணவன் தேட

முடியும்? ராமுவுக்கும் தான் என்ன, அப்போது பதினேழு வயது. உலகம் அறியாத அப்பாவிப் பிள்ளையாக இருப்பவன் அவன்!

பங்கஜத்துக்கு ஏற்றவனைத் தேர்ந்தெடுக்கப் பார்வதியம்மாள் எடுத்துக் கொண்ட சிரமம் சொல்லி முடியாது.

பங்கஜத்துக்கு வரன் பார்த்து, திருமணம் செய்து முடித்தாள். ராமுவும் தான் படித்த பள்ளிக்கூடத்திலேயே வாத்தியாராக வந்தான். தொண்ணூறு ரூபாய் சம்பளம். சாப்பாட்டுக்கு நெல் கிடைத்தது. ராமுவுக்கும் மணம் செய்து வைத்தாள்.

தான் பெறாவிட்டாலும், வளர்த்த இரண்டு பயிர்கள் செழித்து வளர்ந்து சந்தோஷமாக இருப்பதைக் கண்டு மனம் மகிழ்ந்தாள் பார்வதியம்மாள்.

ஆனால் இந்த மகிழ்வும், பாவம், அதிக நாள் நீடிக்க வில்லை. பங்கஜத்துக்குத் தலைச்சன் பிறந்து இறந்து விட்டது. அடுத்த பிரசவம். எட்டாவது மாதம் தம்பி வீட்டுக்கு வந்திருந்தாள். பெற்ற தாயினும் சாலப் பரிந்து அவளைக் கவனித்து வந்தாள் பார்வதி அம்மாள்.

பிறந்தகம் போய் வந்த ராமுவின் மனைவி ரேவதி, 'கண்டாங்கி வளை' என்ற புதாக வளையல் வாங்கி அணிந்து கொண்டுவந்தாள். அதைப் பார்த்ததும் பங்கஜத்துக்கு ஆசையாக இருந்தது. தன் தமையனை அதேமாதிரியொன்று வாங்கித் தரும்படி கேட்டாள். அவனும் டவுனுக்குப் போனால் வாங்கி வருகிறேன் என்று கூறியிருந்தான். ஒரு வாரமாகியும் அவன் வாங்கி வரவில்லை. அந்தச் சமயத்தில், பங்கஜத்தின் கணவன் 'உடல் நிலை சரியில்லை. உடனே கிளம்பி வரவும்!' என்று தந்தி கொடுத்துவிட்டான். பரபரப்பு அடைந்து கிளம்பிய பங்கஜம், கிளம்பும்போது "ஏண்டா, ஆசையாக வளையல் கேட்டேன். ஒரு வாரமாகியும் வாங்கித் தரவில்லை!" என்று வருத்தத்துடன் கூறினாள்.

"பிறகு வாங்கித் தருகிறேன், போ!" என்றான் ராமு. உண்மையில் வாங்கிக் கொடுக்கலாம் என்றுதான் நினைத்தான். ஆனால் ஒவ்வொரு நாளாகத் தள்ளிக் கொண்டே போனதில், அவன்மேலே சந்தேகம் வந்து விட்டது பார்வதியம்மாளுக்கு.

"ஊருக்குப் போகிற பெண் கேட்கிறாளே! இந்தா, ரேவதி, உன் வளையலைக் கழற்றிப் பங்கஜத்திடம் கொடு! நாளைக்கே அவன் வேறு வாங்கிக் கொண்டு வந்து தருவான் உனக்கு!"

என்று கூறினாள் பார்வதியம்மாள். ஹாஸ்யமாகத்தான் 'நாளைக்கே' என்று கூறி வைத்தாள் அவள். ஆனால் ராமுவுக்கு அந்த வார்த்தை வித்தியாசமாகப்பட்டது.

"ஏன், அத்தை, குதர்க்கமாகப் பேசுகிறாய்? எல்லாரும் எனக்கு ஒன்றுதான். இப்பொழுது என்னால் வாங்கிக் கொடுக்க இயலாது. அவ்வளவுதான்!"

அத்தைக்கு ஏக கோபம். அதைவிடப் பங்கஜத்துக்கு. "அத்தை, அவனிடம் என்ன பேச்சு? மனைவி வந்ததிலே அவனுக்கு ஒன்றும் புரியவில்லை! அந்த வளை போட்டுக் கொள்ளாவிட்டால் நான் குறைந்தா போய் விடுவேன்! ராமு, உனக்கு மனைவி தான் பெரியவள் இல்லையா? அப்படியே சிரஞ்சீவியாக இருடா! இனிமேல் நீ எனக்குத் தம்பி இல்லே! இந்த வீட்டு வாசற்படியையும் நான் மிதிக்கலே!" என்று கூறிவிட்டுக் கிளம்பினாள்.

கட்டுச் சீனவெடி வெடிப்பது போல் படபடத்து விட்டு, பங்கஜம் போனவள்தான். அதற்குப் பிறகு கடுதாசுகூடப் போட வில்லை, இரண்டு மாதங்கள் ஆகியும்.

பார்வதியம்மாள் நயமாக ராமுவினிடம் சொல்லிப் பார்த்தாள். அவன்வீம்பும் குறையவில்லை. நிறை மாதக் கர்ப்பிணியைத் தனியாக விடுவதற்கு அவள் மனம் விரும்பவில்லை.

ராமு இரவு பத்து மணிக்கு மேல்தான் இரும்பி வீட்டுக்கு வந்தான். வீடு நிசப்தமாயிருந்தது. கதவைத் திறந்து விட்டுப் போன ரேவதி, அவனைக் கூடக் கவனிக்காமல், எதையோ பரபரக்கத் தேடிக் கொண்டிருந்தாள். வீட்டுக்குள் நுழைந்த ராமு எல்லாப் பக்கங்களையும் நோட்டம் விட்டு விட்டு, "என்ன சமாசாரம்?" என்று கேட்டான்.

உள்ளே யிருந்தபடியே ரேவதி, "உங்கள் அத்தை, நீங்கள் வெளியே போனதுமே, மூட்டை முடிச்சுகளைக் கட்டிக் கொண்டு, ஏழு மணி ரயிலுக்குப் போய்விட்டாள்; உங்களிடம் சொல்லச் சொன்னாள்!" என்றாள்.

ராமு ஒரு கணம் திகைத்தான்.

"பணம் ஏது?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. வெள்ளிக்கிழமை எண்ணெய் தேய்த்துக் கொண்ட பொழுது தோட்டைக் கழற்றி வைத்தேன். இப்பொழுது பார்த்தால்



ஒரு தோட்டைக் காணோம்'' என்று சொன்னாள் ரேவதி.

''என்ன, என்ன, தோட்டைக் காணவில்லையா? சரி, சரி, ஞாபகப்படுத்திக் கொண்டு நன்றாய்த் தேடிப் பாரு!'' என்று கூறிவிட்டு, அவள் அதற்குப் பதில் சொல்வதைக் கேட்கப் பயந்தவனாக, உள்ளே போய்ப் படுக்கையில் படுத்துக் கொண்டான்.

அவன் உள்ளம் பல விதத்திலும் அவனைத் திணற அடித்தது. அத்தை தோட்டை எடுத்துக் கொண்டு போயிருக்க மாட்டாள் என்றுதான் அவன் நம்பினான். ஆனால், தோடு எங்கே போயிருக்கும்?

ரேவதி, முதலில் எல்லாம் தயங்கியவள், நாலைந்து நாட்கள் ஆனதும் 'உங்கள் அத்தைதான் தோட்டை எடுத்துக்கொண்டு போய் விட்டாள்!' என்று நூறு தடவைகள் கூற ஆரம்பித்து விட்டாள். ராமுவின் மனம் சமயத்துக்குத் தகுந்தபடி, அத்தையை உருவகித்துச் சஞ்சலப்பட்டது.

மூன்றாவது நாள் மாலையே பள்ளிக்கூடத்திலிருந்து வந்த ராமு, ''இந்தா, ரேவதி!'' என்று கூறி, ஒரு சிறு அட்டைப் பெட்டியைக் கொடுத்தான்.

திறந்து பார்த்த ரேவதி ''அடடா, தோடு வாங்கி வந்திருக்கிறீர்களே! நல்ல பரிசுதான்!'' என்று மகிழ்ச்சியுடன் கூறினாள்.

ராமு அன்று பள்ளிக்கூடம் போனபோது, மாப்பிள்ளையிடமிருந்து அவன் பெயருக்கு ஒரு கடிதம் வந்திருந்ததைக் கண்டான். அதைப் பிரித்துப் பார்த்தான்.

'அன்புள்ள ராமுவுக்கு,

ஆசீர்வாதம். உன் தமக்கை பங்கஜத்துக்கு ஆண் குழந்தை பிறந்து, மூன்று நாட்களாகிறது. அங்கே உன் மனைவியும் 'ஸ்நானம் செய்யாமல் இருப்பதால் இருவரும் பார்த்துக் கொள்ளக் கூடாது; ஆகாது' என்று பங்கஜம் கூறியதால், இங்கே 'ஆஸ்பத்திரியிலேயே சேர்த்து விட்டேன். நல்ல சமயத்தில் அத்தை வந்து விட்டார்கள். குழந்தையும் தாயும் சௌகரியம். புண்ணியாவசனத்துக்கு, அவசியம் ரேவதியுடன் வரவும்...'

சிவராமன்

கடிதத்தைப் படித்ததும், 'தமக்கைக்கு ஆண்குழந்தை பிறந்திருக்கிறது' என்பதை எண்ணிச் சந்தோஷப்பட்டான். ஆனால், அடுத்த கணமே, அவன் வியப்பும், அத்தையின் திருட்டுச் செயலும் அவன் கோபத்தைக் கிளறின. சுருட்டி மடக்கி, கடிதத்தை அப்படியே மூலையில் போட்டுவிட்டு, தன் காரியத்தைக் கவனித்தான்.

மாலையில் வீட்டுக்குப் போனதும், ரேவதியிடம் கடித விஷயத்தைச் சொல்லி, 'புண்ணியாவசனத்துக்கு வர முடியாது!' என்று எழுதிப் போட்டு விடவேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு வந்தான்.

ஆனால் வீட்டில் வந்து பார்த்தால் அவனை எதிர்கொண்டு அழைத்தது மேஜையின் மேல் இருந்த ஒரு கடிதம்தான்.

'சிரஞ்சீவி ராமுவுக்கு,

ஆசீர்வாதங்கள். இங்கே பங்கஜமும் குழந்தையும் சௌகரியம்.

வரும்போது ஏதோ கோபத்தில் வந்து விட்டேனே யொழிய வந்த பிறகுதான், நான் கோபப்பட்டதன் பலன் தெரிகிறது. பிரசவ மருந்து இருந்த டப்பியிலே ரேவதி தோட்டைக் கழற்றி வைத்திருந்தாள் போலிருக்கிறது. கோபத்திலேயும், படபடப்பிலேயும், அவசரத்திலேயும், அதை அப்படியே எடுத்துக் கொட்டி முடிந்து கொண்டு வந்துவிட்டேன். அதில் அவள் தோடு ஒன்று தவறி வந்து விட்டது. வரும்போது தருகிறேன்.

தவிர, நான் வரும்போதே, இரண்டு மாதம் ரேவதி ஸ்நானம் பண்ணவில்லை. உடம்பைக் கவனிக்கச் சொல்லு. பண்நாள். ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

மாப்பிள்ளையிடம் பங்கஜம் மனஸ்தாபத்தை மறைத்து, வேறு காரணம் கூறியிருக்கிறாள். அதுவும் கடவுள் புண்ணியத்திலே உண்மையாய் இருந்து விட்டது. 'எனக்கு உனை வேண்டாம். ராமு வந்தால் போதும், குழந்தையைப் பார்க்க' என்று பங்கஜம் ஓயாமல் சொல்லுகிறாள். குழந்தை அசல் உன் மாதிரியே இருக்கிறது!

கடைசி வீட்டு ஐயாக்கண்ணுவிடம் நூறு ரூபாய் கொடுத்திருக்கிறேன். அதை வாங்கி, ஒரு ஜோடி புதுத்தோடு வாங்கிப் போட்டு ரேவதியை அழைத்துக் கொண்டு அவசியம் வரவேண்டும்!''

— அத்தை

கடிதத்தைப் படித்து விட்டுத் தலைதூக்கின போது, ரேவதி கண்கலங்க எதிரில் நின்று கொண்டிருந்தாள்.

''நாளைக்குப் போக வேண்டியதுதான். எனக்கும் உடம்பு சரியாயில்லை....'' என்று ரேவதி திட்டமாகப் பேசினாள்.

'' உடம்பா, என்ன ரேவதி ?''

'' ஒண்ணுமில்லே! இரண்டு மூன்று தடவை வாயிலெடுத்தது. அத்தை யில்லாமல் இனிமேல் இருக்கப்படாது. மாடா உழைச்சவர்... நாம் அவரைத் தவறாக நினைத்ததற்கு அவர் காலிலே விழுந்து மன்னிப்புக் கேட்கணும்!'' ரேவதி மடை திறந்தது போலப் பேசினாள்.

ராமுவுக்கு இரட்டிப்புச் சந்தோஷம். அதைவிட, 'உன்னையே உரித்து வைத்திருக்கிறது' என்ற வாசகம் அவன் கண்முன் இடையறாது தோன்றியது. அந்தத் தன் பிரதிபிம்பத்தைக்காண அவன் இரத்தபாசம் துடித்தது.

இரண்டாம் நாளே மனைவிக்கு வாங்கிப் போட்ட மாதிரி தமக்கைக்கு வாங்கிப் போடாததை அவன் மனசே குத்திக் காட்டியது. 'தம்பியின் மனஸ்தாபத்தைக் கணவனிடம் சொல்லவில்லையே! பார், அவள் பரிவை!' என்று அவன் அந்தராத்மா அலறியது. 'திருட்டுப் பட்டம் சூட்டிய அத்தையைப் பார்! உன் மகிழ்ச்சியிலே தானும் மகிழ்ந்து, கரைந்து வந்த மெழுகுவர்த்தி போன்ற தியாகியின் மனசைப் பார்!' என்று அவன் பகுத்தறிவு படபடத்தது.

மறுநாள் இரவு ரயில், ராமு, ரேவதியைத் தாங்கிச் சென்றது. ஐயாக்கண்ணு கொடுத்த நூறு ரூபாய் கண்டங்கி வளையலாகவும், மருமானுக்குச் செயினாகவும் மாறி யிருந்தது.



தளதளக்கும் ஈனோ வயிற்றுக் கோளாறுகளிலிருந்து எட்டே விநாடிகளில் நிவாரணமளிக்கிறது!

அஜீர்ணம், நெஞ்செரிச்சல், அல்லது வாயுப் பொருமல் இவைகளில் எதையும் ஈனோ நிவர்த்திக்கிறது!

ஒரு கிளாஸ் தளதளக்கும் ஈனோ ப்ரூட் ஸால்ட் சாப்பிட்டால் எட்டே விநாடிகளில் வயிற்றுக் கோளாறுகள் சீரா கின்றன. மிதமாக பேதி ஏற்பட விரும் பினால் வெறும் வயிற்றில் சிறிது பெரிய 'டோஸ்' ஈனோ அருந்தினால் போதும். எப்பொழுதும் உங்கள் வீட்டில் ஒரு பாட்டில் ஈனோ வைத்திருங்கள்.

ஈனோ 'ப்ரூட் ஸால்ட்'

அமித அமிலங்களை அடக்கும்
தளதளக்கும் பானம்

'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற வார்த்தைகள் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகள்



இப்பொழுது மோசடியைத் தடுக்கும் புதிய பாட்டிலில் விற்கப் படுகிறது

(2 அளவுகளில் கிடைக்கும்)

தமிழ் கூறும் நல்லுலகம்

பம்பாய் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் 14–1–57 அன்று சங்க மணி மண்டபத்தில் ஸ்ரீ டி. ஆர். துரைசாமி அவர்கள் தலைமையில் பொங்கல் விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அப்பொழுது 'ஐந்து வீணைகள்' என்ற வாத்திய நிகழ்ச்சியும், சங்கப் பெண் அங்கத்தினர்களால் நிகழ்த்தப் பெற்ற "புதுமைப் பெண்" என்ற நாடகமும் விழாவுக்கு நிறைவூட்டிய இரு பிரதான நிகழ்ச்சிகளாக அமைந்தன.

பெண்மணிகளே முழுமையும் பங்கு கொண்டு மகத்தான வெற்றியோடு நிகழ்த்திய "புதுமைப் பெண்" நாடகம் இரண்டு மணி நேரம்தான் நடைபெற்றதென்றாலும், பம்பாய்த் தமிழ்ப்பெரு மக்கள் உள்ளத்தில் நிரந்தரமான இடம் பெற்று விட்டதெனலாம். அந்நாடகத்தை எழுதியவர் பிரபல நாவலாசிரியையான திரு கே. சுந்தராம்பாள்.

நாடகத்துக்கு இசையமைப்பு நல்கியவர்கள் குமாரி ஆர். கலைவாசனு, திரு சத்தியமூர்த்தி ஆகியவர்கள். நாடகத்தின் பூரண பொறுப்பையும் ஏற்று வெற்றியுடன் நிகழ்த்திய பெருமை ஸ்ரீமதி லட்சுமி அனந்தநாராயணன் அவர்களையும், ஸ்ரீமதி பங்கஜம் சக்கரவர்த்தி அவர்களையும் சாரும்.

★

பெங்களூர், தூய சூசையப்பர் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளி விழா இந்த ஆண்டு ஜனவரி 18, 19 தேதிகளில் மிகச் சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது. திருமதி லோகசுந்தரி ராமன் இவ் வைபவத்துக்குத் தலைமை வகித்தார்.

வெள்ளி விழாத் தொடக்க உரையை மைசூர்ப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் உயர்திரு ஆர். கஸ்தூரிராச செட்டி அவர்கள் நிகழ்த்தினார்.

இவ்விழாவிலே தலைவர் வித்துவான் வேங்கடாசலனார் எம். ஏ. அவர்கள் கல்லூரியின் பழைய தமிழ் மாணவர்களிடமிருந்து திரட்டிய ரூ. 601 நிதித் தொகையைக் கல்லூரி முதல்வரிடம், 'வெள்ளி விழாப் பரிசு' நிதிக்கென அளித்தார். பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, புனைவேடப் போட்டிகளிலே பரிசுபெற்றமாணவர்களுக்குத் திருமதி இராமன் அம்மையார் பரிசுகள் வழங்கினார்.


"கவரிமான் கண்ணாக்காவிரும் பொறை", "கட்டபொம்மன்" என்னும் நாடகங்களை மாணவர்கள் திறம்பட நடித்தனர்.

★

பம்பாய், மாதுங்கா பஜனை சமாஜத்தில் மாதுங்கா தமிழரகக் கழகத்தினரால் 20—1—57 அன்று தமிழர் திருநாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. செயலாளர் ஆ. முருகய்யா எல்லோரையும் வரவேற்றுப் பேசினார். தேனு பாங்க் சீப் அக்கவுண்டெண்ட் திரு சி. வி. சுப்பிரமணியம் மேற்படி விழாவுக்குத் தலைமை வகித்தார். திருமதி சுப்புலக்ஷ்மி சுப்பிரமணியம் தமிழரகக் கழகத்தின் சார்பில் நடந்த போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கினார். இன்னும் பல அரிய சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

★

பம்பாய் ஸ்ரீ சண்முகானந்த சபையில் இவ்வாண்டு சங்கீத, நாடக, நாட்டிய விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மேற்படி விழாவுக்கென அமைக்கப்பட்ட விசேஷப் பந்தலில் ஆந்திர ராஜ்ய மந்திரி திரு பி. கோபால ரெட்டி அவர்கள் ரஸிகப் பெருமக்களின் ஆரவாரத்துக்கிடையில் சங்கீத விழாவைத் துவக்கி வைத்தார்.



"நமக்கு அகண்ட தமிழ்ப் பிரதேசம் கிடைக்குமோ, என்னவோ! ஆனால் கர்நாடக சங்கீதம் என்பது ஆந்திரா, மைசூர், சென்னை, கேரளம் முதலிய பிரதேசங்களுக்கெல்லாம் பொது உடைமையாகி விட்டது. அது குறித்து நாம் பெருமையடையலாம். கர்நாடக சங்கீதம் புராதனப் பெருமை குன்றாமல் விளங்குவதற்குக் காரணம் அது பக்தி உணர்ச்சியினால் ஏற்படும் உள்ள நெகிழ்ச்சியிலேயே உருவாகி வந்திருப்பதுதான். அந்த அரும்பெரும் கலையைத் தரம் குறையாமல் காக்க முயல்வது நம் கடமை" என்று திறப்பு உரையில் கோபால் ரெட்டி பலத்த கரகோஷத்துக்கிடையே கூறினார்.

பம்பாய் கவர்னர் ஸ்ரீபிரகாசா நாடக விழாவைத் துவக்கி வைத்துத் தமிழர்களின் திறனை வெகுவாகப் புகழ்ந்து பேசினார்.

மேற்படி சங்கீத, நாடக, நாட்டிய விழாவானது இருபத்தொரு நாட்கள் வரையில் மாபெரும் விழாவாகவே நடைபெற்றது. இவ்வாண்டு விழாவில் காருகுறிச்சி சகோதரர்களின் நாதசுரக் கச்சேரியும், செம்மங்குடி, அரியக்குடி, மதுரை மணி, ஆலத்தூர் சகோதரர்கள், டி. கே. பட்டம்மாள், எம். எல். வசந்தகுமாரி இவர்களின் அரிய இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. எம்பார் விஜயராகவாச்சாரியாரின் கதா காலக்ஷேபமும், கமலா லக்ஷ்மண் பரத நாட்டியமும், டி. கே. எஸ். சகோதரர்களின் "ராஜ ராஜ சோழன்", "மனிதன்", "கள்வனின் காதலி", "ரத்த பாசம்", "வாழ்வில் இன்பம்", "ஔவையார்" முதலிய நாடகங்களும் சிறப்பாக நடைபெற்றன.

படித்துப் பாருங்கள்

All India Election Guide

ஜனநாயக ஆட்சி முறையில் மிக முக்கியமான அம்சம் தேர்தல். அந்தத் தேர்தல் பாரத நாட்டிலே இன்னும் சில தினங்களில் நடைபெற விருக்கிறது. இந்தத் தேர்தலில் எத்தனையோ கட்சிகள் போட்டியிடுகின்றன. அந்தக் கட்சிகளின் கொள்கைகள் என்ன வென்பதெல்லாம் எல்லோருக்கும் தெரிய முடியுமா? மேலே குறிப்பிட்ட நூலின் ஒரு பிரதியிருந்தால் போதும். ஒவ்வொரு கட்சியைப் பற்றிய முழு விவரங்கள் தெரிந்து கொள்ளலாம். அது மட்டுமல்ல; தேர்தல் சட்ட திட்டங்கள் என்ன என்பதையும் தொகுதிகளைப் பற்றியும் தெரிந்து கொள்ளலாம். அபேட்சகர்கள், வாக்காளர்கள் இரு தரப்பினரின் கடமைகளைப் பற்றியும் உரிமைகளைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம். இந்நூல் தேர்தலில் நிற்பவர்களுக்கும், பிரசாரகர்களுக்கும், வாக்காளர்களுக்கும் பயன்படும் வகையில் பல விரிவான குறிப்புக்களுடன் வெளியிடப்பட்டிருக்கிறது.

இந்த நூலில் டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமி அய்யர், ஜெயப்பிரகாச நாராயண், டாக்டர் வி. கே. ஜான், ஸ்ரீ ஆர். வி. கிருஷ்ணய்யர் போன்ற பல பிரமுகர்களின் கட்டுரைகளும் இடம் பெற்றிருக்கின்றன. இந்த முயற்சி நல்ல முயற்சி; பாராட்டப்பட வேண்டிய முயற்சி.

பிரசுரம்: ஓரியண்டல் பப்ளிஷர்ஸ், சென்னை-4. விலை: ரூ. 10

புயலும் தென்றலும்

தமிழில் புதுப் புது நாடகம் வரவேண்டும் என்று ஆர்வம் கொண்டவர்களுக்கெல்லாம் இப்பொழுது நல்ல காலம் பிறந்து விட்டது. நிறைய நாடக நூல்கள் தமிழில் வெளிவருகின்றன. இந்நூல் சுவை ததும்பும் வண்ணம் சமூக வாழ்வை நாடக மேடைக்கு எடுத்துச் சென்று உணர்ச்சி ததும்பும் பாத்திரங்களின் மூலம் நன்கு உருவாக்குகின்றது. கொலை, தற்கொலை, விபத்து முதலிய விபரீதங்கள் எதுவும் இல்லாமல், இயல்பான நிகழ்ச்சிகளைக் கொண்டே சுவாரஸ்யமாகப் புனையப் பட்டிருக்கிறது. இந்நூலைப் பற்றி நாமாக எதுவும் கூறுவதைவிட, "படித்துப் பாருங்கள், உடனே நடித்தும் பாருங்கள்" என்று கூறுவது சாலப் பொருத்தமுடையதாகும்.

எழுதியவர்: கோமதிசுவாமிநாதன்; பிரசுரம்: ரதி பதிப்பகம், 127, தெற்கு ஆவணி மூலவீதி, மதுரை; விலை: ரூ. 2—0—0.

சிலப்பதிகார விருந்து (நாட்டுப் பற்று)

இலக்கிய விருந்தை இன்பமாகச் சுவைக்கும் பண்பு நம் தமிழ் மக்களுக்கு என்றும் உள்ளதோர் இயல்பு. சமீப காலத்தில் வளரும் தமிழ் வசன இலக்கியங்களின் வளம் மிகு விருந்தில் திளைத்து, தமிழகம் பூரித்து நிற்கிறது. இந் நிலையில் ஆசிரியர் ந. சஞ்சீவி அவர்களின் ஆராய்ச்சி நூல் வந்திருக்கிறது.

சிலப்பதிகாரத்தின் சிறப்பை யறியாத தமிழன் இல்லை என்றே கூறலாம். தமிழன்னை புனைந்திருக்கும் ஆபரணங்களுக்குள் சிலப்பதிகாரம் விலை மதிப்பிட முடியாதது. காதலின் மாண்பும், கற்பின் வீறும், நாட்டுப் பற்றும், நல்லோர் பெருமையும் ஒருங்கே விளங்கும் ஒப்பற்ற காவியம் சிலப்பதிகாரம். மனித இதயத்தின் துடிப்பையும், மனித இயல்பின் சிறப்பையும் இயல்பான வரலாற்றில் இணையற்ற முறையில் கூறும் முத்தமிழ்க் காவியம் சிலப்பதிகாரம்.

இவ் வழுகிய காவியச் சோலையில் கிடைக்கும் வண்ண மலர்களையும், வளமுள்ள கனிகளையும் வாசகர்களுக்கு வள்ளன்மையோடு வாரி வழங்குகிறார் இந் நூலாசிரியர். உடல் குளிர, உள்ளம் குளிர, முகம் மலர அநுபவிக்க வேண்டிய இன்பத்தேன் இனிக்கும் பாகங்கள் சிலப்பதிகாரத்தில் எத்தனையோ உள்ளன. அவற்றை யெல்லாம் சுவை மிகு தமிழ் நடையில், இந்நூல் கூறுகிறது.

காலத்தாலும், கவிதை நலத்தாலும், கற்பனைத் திறனாலும், காவியம் காட்டும் சீலத்தாலும் சிறந்து விளங்கும் சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து, தாம் நுகர்ந்தவற்றைப் பிறரும் நுகரும் வண்ணம் விரித்துரைக்கும் ஆற்றல் படைத்த இவ்வாசிரியரின் முயற்சி இத்துறையில் மேலும் மேலும் சுடர் விட்டு ஒளிர வேண்டும். திரு ந. சஞ்சீவி அவர்கள் தாய் மொழியில் தனித் தேர்ச்சியும், ஆங்கில மொழியில் ஆய்ந்த அறிவும் பெற்றவர்; தாய் மொழிப் பற்றும் தாய் நாட்டுப் பற்றும் தம் இதயத்துடிப்பாகக் கொண்டவர்; இதே வரிசையில் இன்னும் பல ஆராய்ச்சி நூல்கள் வரப்போவது பாராட்டுக்குரியது.

பிரசுரம்; சாமி நிலையம், புத்தகம் வெளியிடுவோர், 23 பிள்ளையார் கோயில் தெரு, வரகனேரி, திருச்சிராப்பள்ளி விலை: ரூ. 2–8.

கவிதாஞ்சலி

"ஆண்மை உருக் கொண்ட அந்தணன்-
எங்கள்
அண்ணல் விவேகானந்தனின்
மாண்பை அளந்திட எண்ணினால்-இந்த
மண்ணையும் விண்ணையும் பண்ணலாம்
காமனைப் போன்ற அழகினன்-
பொல்லாக்
காமத்தை வென்று பழகினன்;
சோமனைப் போலக் குளிர்ந்தவன்-ஞான
சூரியன் போலக் கிளர்ந்தவன்"

இந்தக் கவிதைகளைப் படிக்கும்போதே இவைகளை இயற்றிய கவிஞரையும் மனக் கண்ணினால் பார்க்கலாம்; ஆம், நாமக்கல் கவிஞர்தான் அவர். ஏற்கெனவே எண்ணிறந்த கவிதைகளின் மூலம் தமிழ் மக்களுக்கு அறிமுகமா யிருக்கும் கவிஞர் அவர்களின் காவிய மலர்களோடு சேர்த்துக் கொள்ள வேண்டிய கவிதைப் பூங்கொத்து இந்நூல். எளிமையும், இனிமையும், சொல்வழகும், பொருளழகும் கொண்டு மிளிரும் இக் கவிதைகள் படித்து அநுபவிக்கவேண்டிய கவிதைகள்.

பிரசுரம்; கவிஞர் பதிப்பகம், ராஜவீதி, கோயமுத்தூர், விலை: ரூ. 1—8—0

மார்கோ சோப்

நீங்கள் ஸ்னானம்
செய்யும்போது
உங்கள்



மார்கோ சோப்பை



மறந்து
விடாதீர்கள்

ஆரோக்யமான, இனிய நறுமணமுள்ள மார்கோ சோப்பின் மிருதுவான, செழிப்பான நுரை, சருமத்துவாரத்தினூடே புகுந்து சென்று, சருமம் ஆரோக்கியமாக இளமை எழிலுடன் துலங்குவதை உறுதிப்படுத்துகிறது. குடும்ப முழுவதற்கும் இணையற்ற சோப். இளஞ் சருமத்திற்கும் ஹானியற்றது.

தயாரிப்பவர்:

தி கல்கத்தா கெமிகல் கோ. லிட்.,
கல்கத்தா – 29.

CMC-6 R-TM

தென் இந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை -1

ஹிரா அணைக்கட்டு

எம். எஸ். திருமலை ஐயங்கார்

பாரதத்தில் உள்ள மற்ற இடங்களைப் போல் ஒரிஸ்ஸா ராஜ்யத்திலும் வேத காலந் தொட்டுப் புகழ் பெற்ற புனித ஆலயங்கள் ஏராளமாக இருந்து வருகின்றன. அந்த ராஜ்யத்தைச் சேர்ந்த பூரி ஜகந்நாதர் ஆலயமும், கானாரக்கில் உள்ள சூரிய நாராயணஸ்வாமி ஆலயமும், புவனேசுவரத்தில் காட்சியளிக்கும் லிங்கராஜர் கோவிலும் மிகப் பிரசித்தி பெற்றவை. அந்த ஸ்தலங்களுக்கு வருஷந் தோறும் பதினாயிரக் கணக்கான யாத்திரீகர்களும் பக்தர்களும் விஜயம் செய்கிறார்கள்.

இப்போது ஒரிஸ்ஸாவில் மற்றொரு புனித ஆலயம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அந்த ஆலயத்தில் வருண பகவானைப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்! லட்சக் கணக்கான மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் கண்கண்ட தெய்வமான வருணன் கோவில் கொண்டுள்ள அந்த ஆலயம்தான் மாபெரும் ஹிராகுட் அணைக்கட்டாகும்!

சமீபத்தில் பாரதப் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட்ட ஹிராகுட் அணைக்கட்டு பல விதத்திலும் சிறப்பு வாய்ந்தது.

மகாநதியில் அமைக்கப்பட்டுள்ள ஹிராகுட் அணைக்கட்டு உலகிலேயே மிகவும் நீளமானது. மாரிகாலத்தில் மகாநதியில் ஏற்படும் வெள்ளத்தினால் ஒரிஸ்ஸா, மத்தியப் பிரதேசமக்கள் அல்லல்படுவதும், கோடை காலத்தில் தண்ணீர்ப் பஞ்சத்தினால் அவஸ்தைப் படுவதும் பல பல வருஷங்களாக நிகழ்ந்துவரும் சம்பவமாகும். இந்த விபரீதத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து, வெள்ளத்தைக் கட்டுப்படுத்தி, கோடை காலத்தில்கூடத் தண்ணீர்ப் பஞ்சம் இராமல் செய்வதே ஹிராகுட் திட்டத்தின் முக்கியமான லட்சியமாகும்.

சென்ற நூறு வருஷ காலத்திய அபிலாஷைகளும் நம்பிக்கைகளும் யோசனைகளும் திட்டங்களுமே ஹிராகுட் அணையாக உருவாகியிருக்கின்றன.

மகாநதி டெல்டா பிரதேசம் மாத்திரம் இங்கிலாந்தைப் போல் விஸ்தீர்ணம் உள்ளது. அதன் நீர்த் தேக்கப் பிரதேசம் மாத்திரம் 288சதுர மைல் பரப்புள்ளது. அமெரிக்காவில் உள்ள பிரம்மாண்டமான டென்னஸி தேக்கத்தைக் காட்டிலும் மேற்படி தேக்கம் பெரிதெனில், அதன் பெருமையை ஊகித்துக் கொள்ளலாம்.


ஒரிஸ்ஸாவைச் சேர்ந்த சாம்பல்பூருக்கு அருகில்தான் ஹிராகுட் அணை கட்டப்பட்டிருக்கிறது. பதினாறு மைல் நீளத்துக்கு மாபெரும் மண்சுவர் அணையை அமைத்திருக்கிறார்கள். எனவே, உலகிலேயே இதை மிகப் பெரிய அணை என்று கூறலாம். ஹிராகுட் நீர்த் தேக்கம் மேட்டூர்த் தேக்கத்தைப் போல் மூன்று மடங்கும் துங்கபத்ரா தேக்கத்தைப் போல் இரண்டு மடங்கும் அதிக சக்தி உள்ளது.


ஹிராகுட் அணை மிகவும் நீளமானதால் தான் அதைக் காங்கிரீட் அணையாகவோ அல்லது கருங்கல் அணையாகவோ நிர்மாணிக்க முடியவில்லை. ஏனெனில் காங்கிரீட் அல்லது கருங்கல் அணையாகக் கட்டுவதாயின் அதற்குப் பல நூறு கோடி ரூபாய்கள் செலவாகும். எனவே, 64 மதகுகளும் 34 கேட்டுகளும் உள்ள பிரதானமான பகுதி மாத்திரமே காங்கிரீட்டால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

ஹிராகுட் அணை பிரும்மாண்டமானதால், அதைக் கட்டுவதற்குச் சென்ற நாலு வருஷங்களாக ஏராளமான யந்திரங்கள் ஓய்ச்சல் ஒழிவின்றி வேலை செய்து வந்தன. அதே சமயம் ஆராய்ச்சிகளும் பரிசோதனைகளும் இடைவிடாமல் நடந்து வந்தன.

அணையைத் தாண்டி வழியும் தண்ணீர் வேகத்தை மட்டுப்படுத்துவதற்குத் தகுந்த ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

அணைக்கட்டு துவக்க விழாவுக்கு வந்திருந்த திரளான மக்கள். நேருஜி அணைக் கட்டைப் பார்வையிடுகிறார். பிரதம இஞ்ஜினீர் எம். எஸ். திருமலை ஐயங்கார் அணைக்கட்டைப் பற்றி நேருஜிக்கு விளக்கிக் கூறுவதைப் படத்தில் காணலாம்.





ஒரிஸ்ஸாவின் நீர்வளத்தையும் நிலவளத்தையும் பெருக்கும் ஹிராகுட் அணைக்கட்டின் முக்கிய பகுதிகள். அணைக்கட்டை நிர்மாணித்த இஞ்ஜினீயர் கலை நிபுணர்களோடு நேருஜி.

ஹிராகுட் அணைக்கட்டின் பலனாக இன்னும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகளில் இருபத்து இரண்டரை லட்சம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள பிரதேசம் பொன் விளையும் பூமியாகக் காட்சி யளிக்கும் என்பது நிச்சயம்.

அது போலவே, ஹிராகுட் அணைக் கட்டின்பலனாக அபரிமிதமான மின்சார சக்தியும் கிடைப்பதற்கு வழி பிறந்து விட்டது. எனவே, இன்னும் சில வருஷங்களில் ஒரிஸ்ஸா ராஜ்யம் விவசாயத் திலும், மின்சார அபிவிருத்தியிலும், தொழிற்சாலைகளின் பெருக்கத்திலும் பாரத நாட்டில் முக்கிய ஸ்தானம் வகிக்கப் போவதைக் காணலாம்.

ஹிராகுட்டில் பூமிக்குக் கீழே வைரச் சுரங்கங்கள் இருக்கின்றனவாம். அந்தச் சுரங்கங்கள் மீது இப்போது ஹிராகுட் அணை நிர்மாணிக்கப்பட்டு விட்டதால், இனி அவற்றைக் கண்டு பிடிக்க வழியே இல்லாமற் போய் விட்டதென்று சிலர் வருத்துகிறார்கள். ஹிராகுட் அணைக் கட்டும் நீர்த்தேக்கமும் எதிர்காலத் தில் வைரச் சுரங்கங்களைக் காட்டிலும் அதிக பலனையும் நன்மையையும் கொடுக்கும் பிரதேசமாக விளங்கப் போகின்றன என்பதில் சந்தேகமில்லை.

வைரச் சுரங்கங்களால் வெள்ளத் தைத் தடுக்க முடியுமா? தண்ணீர்ப் பஞ்சத்தைத் தீர்க்க முடியுமா? இவற் றுக்கு வருஷந்தோறும் மக்கள் பலியா கும் பரிதாபத்தைத்தான் தவிர்க்க முடியுமா? முடியாது. ஆனால் ஹிராகுட் அணைக்கட்டு அவற்றையெல்லாம் பழங் கதையாகச் செய்வதுடன், அந்தப் பிர தேசத்தில் உள்ள மக்கள் எக்காலத் தும் சந்தோஷத்துடன் சுபிட்ச வாழ்வு நடத்துவதற்கு அடிகோலி யிருக்கிறது.

அந்த அணைக்கட்டு அலுவல்கள் வெகு மும்முரமாக நடந்து கொண்டிருந்தபோது அதில் முப்பதாயிரம் தொழிலாளர்கள் ஈடுபட்டிருந் தார்கள். இந்தியாவில் உள்ள பல பகுதிகளி லிருந்தும் வந்துள்ள ஊழியர்கள் தேச நலனையே முக்கியமாகக் கொண்டு தோளோடு தோள் நின்று ஒற்றுமையுடன் இரவு பகலாக வேலை செய்து வருகிறார்கள்.

அணைக்கட்டு சம்பந்தமான யந்திர, இஞ்ஜி னீரிங் நுட்ப வேலைகளெல்லாம் மேனாட்டு இஞ்ஜினீயர்கள்தான் செய்ய முடியும் என்ற எண்ணம் நம் நாட்டில் நிலவி வந்தது. ஆனால் இந்திய இஞ்ஜினீயர்கள் அது பொய்த் துப் போகும்படி செய்து விட்டார்கள். ஹிரா குட் நிர்மாண வேலைகளில் ஈடுபட்ட சகலரும் இந்திய இஞ்ஜினீயர்கள் தான். அவர்கள் தைரி யத்துடனும் நம்பிக்கையுடனும் சலியாமல் உழைத்துத் தங்கள் கடமைகளை வெற்றிகர மாக நிறைவேற்றி யிருக்கிறார்கள்.

ஹிராகுட் அணை கட்டப்பட்டதன் மூலம் எத்தனையோ இளம் இஞ்ஜினீயர்கள் சிறந்த பயிற்சி பெற்றிருக்கிறார்கள். எதிர்காலத்தில் இத்தகைய மாபெரும் அணைக்கட்டு வேலைகளை அவர்கள் திறமையுடனும் தைரியத்துடனும் நிறைவேற்றிப் புகழ் பெறுவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

அந்த அணைக்கட்டின் மூலம் மக்கள் மகத் தான பலன் அடையப் போகிறார்கள். அதன் பலனாக ஒரிஸ்ஸா ராஜ்யத்தில் உணவுப் பொருள்களின் உற்பத்தி அபரிமிதமாகப் பெருகப் போகிறது. மாபெரும் யந்திரங்கள் சுழன்று ஏராளமான தொழிற்சாலைகள் ஏற் படப் போகின்றன. வெள்ளக் கஷ்டம், பஞ்சம், பிணி முதலிய கொடுமைகளிலிருந்து மக்களுக்கு விடுதலை கிடைக்கப் போகிறது.

ஹிராகுட் அணைக்கட்டு, பதினாயிரக் கணக் கான தொழிலாளர்களும், இஞ்ஜினீயரிங் கலை நிபுணர்களும் பாரத நாட்டுக்கு அளித்துள்ள விலை மதிக்க முடியாத ஒரு வெகுமதியே யாகும். அவர்கள் தங்கள் வீடு வாசல்களை யும் குடும்பங்களையும் விட்டு, வெகு தொலைவி லிருந்து இங்கு வந்து வருஷக்கணக்காக உழைத்து அற்புத சிருஷ்டியான ஹிராகுட் அணைக்கட்டை உருவாக்கி யிருக்கிறார்கள். இந்தப் பணியில் எத்தனையோ பேர்கள் உயிர்த்தியாகமும் செய்திருக்கிறார்கள். அந்த சகோதரர் தங்களுடைய உழைப்பின் பலனை அனுபவிக்க முடியாமற் போனது வருந்தத் தக்கதாகும். எனினும், அவர்களுடைய தியாகம் எதிர்காலத்தில் கோடிக்கணக்கான மக்களுக்கு மகத்தான பலனை நிரந்தரமாக அளிப்பதற்கு வழிவகை செய்திருக்கிறது.


LUX
TOILET SOAP
LUX
TOILET SOAP
LUX

பொங்கல் பந்தயம்

நா. பார்த்தசாரதி

"எண்ணங்கள் வழி தவறினால் உணர்வுகள் பிசகுவது சகஜம்தான். சின்ன மருது சேர்வையைப் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்: ஒற்றைக் கையாலே பச்சைக் கருங்காலி மரத்தை இரண்டாக ஒடித்துக் காட்டுவான், சோளத் தட்டையை முறிக்கிற மாதிரி! அவ்வளவு பலம் அவனுக்கு. கடைசியிலே அந்தக் கையை அவன் இழந்து கை முடமாகிப் போன கதையைக் கேட்டால் உங்களுக்கே சிரிப்பு பொங்கி வரும்!"

திருவடியாபிள்ளை மேற்கண்டவாறு கூறி நிறுத்தவும் என் உள்ளத்தில் ஆவல் சுரந்தது. நான் கேட்டேன்:

"எந்தச் சின்னமருது சேர்வையைப் பற்றிச் சொல்கிறீர்கள்?" எங்கள் வட்டாரத்தில் இந்தப் பெயர் பலருக்கு உண்டு. அதனால் தான் நான் திகைக்க நேர்ந்தது.

"அட! அவன்தான் ஐயா; ஜல்லிக் கட்டுக் குப்பு சேர்வை பேரன் சின்னமருது. என்னமோ அவனைத் தெரியாதது மாதிரிக் கேட்கிறீர்களே?"

"அவனைத் தெரியும், ஐயா! ஏதோ அவனைப் பற்றிய 'கதை' என்று சொன்னீர்களே; அதுதான் எனக்குத் தெரியாது."

"அது சரி! எல்லாமே எல்லாருக்குமே தெரிந்திருக்குமா? நான் சொல்கிறேன், கேளுங்க!" என்று பிரமாத பீடிகையோடு ஆரம்பித்தார் திருவடியா பிள்ளை.

* * -

ஜல்லிக்கட்டுக் குப்புசேர்வையின் பரம்பரையே பலசாலிகள் நிறைந்தது. 'ஜல்லிக் கட்டுக் குப்பம்' என்று சொன்னவுடனேயே சிலம்பம், குஸ்தி, மல்யுத்தம், முதலிய முரட்டு விளையாட்டுக்கள் தாம் நினைவுக்கு வரும். குப்பு சேர்வை உயிரோடிருந்த காலத்தில் அவர் வீட்டு வாசலுக்கு முன் கிராமத்தைச் சேர்ந்த எவனும் கை வீசி நடப்பதற்குப் பயப்படுவான். அவ்வளவு 'அத்து' இருந்தது.

இந்தக் குடும்பத்தில் பிறந்தவன்தான் சின்னமருது சேர்வை. ஆள் பலத்திலும் சரி, தோற்றத்திலும் சரி, பீமன்மாதிரி இருப்பான். நல்ல வளர்ச்சி. கட்டுமஸ்தான தேகம். இந்தக் காலத்துக் 'கிராப்புத் தலை.' நாகரிகம் அப்போது கிராமங்களில் அவ்வளவாகப் பரவவில்லை. கரு கரு வென்று சுருள் சுருளாக வளர்ந்திருந்த கேசத்தை ஒரு பெரிய இளநீர் அளவுக்குக் குடுமியாக அள்ளிக் கட்டிக் கொண்டிருப்பான். சின்னமருது பலசாலி மட்டுமில்லை; நல்ல அழகனும் கூட. அவன் முகத்தில் ஒரு தனிக் கவர்ச்சியும், எடுப்பான கம்பீரமும், துலங்கிக் கொண்டே இருக்கும். அரும்பு மீசைக்குக் கீழே மொட்டுப் பிரிவதைப் போல உதடுகள் நெகிழ அவன் சிரிக்கும் சிரிப்பு ஆளைக் கொள்ளை கொண்டு போய் விடும்.

சின்னமருது முப்பது வயது வரை கலியாணமே செய்து கொள்ளவில்லை. சிலம்பப் பள்ளிக்கூடமும் குஸ்தி கோதாவும் வைத்து நடத்திக் கொண்டிருந்தான். உள்ளூரிலும் அக்கம்பக்கத்துக் கிராமங்களிலும் இருந்த வாலிப வயதுப் பிள்ளைகள் அவனிடம் சிலம்பம், குஸ்தி படித்து வந்தார்கள். இதனால் இளைஞர்களிடையே நல்ல மரியாதையும் செல்வாக்கும் அவனுக்கு இருந்தன.

இத்தகைய நல்ல சூழ்நிலையின் இடையே அவனையும் அவன் குடும்பத்தையும் சதா கறுவிக் கொண்டிருந்த ஒரு வயதான எதிரியும் அதே ஊரில் இருந்தார். அவர்தான் வீரமாணிக்க அம்பலக்காரர். அம்பலக்காரர் சின்ன மருதுவின் பாட்டனான ஜல்லிக் கட்டு சேர்வையிடம் சிலம்பம், குஸ்தி எல்லாம் படித்தவர். ஆனால் ஏதோ ஒரு சிறு விஷயத்தில் சேர்வைக்கும் அம்பலக்காரருக்கும் பெரிய மனஸ்தாபம் ஏற்பட்டுக் கைச் சண்டை, வாய்ச் சண்டை எல்லாம் ஏற்பட்டுப் பிரமாதமாகி விட்டன.

"சேர்வைகாரரே! ஆண்டவன் புண்ணியத்திலே எனக்கு ஒரு மகன் பிறக்கணும். அவனுக்குச் சிலம்பம் சொல்லிக் கொடுத்து உங்களை முடியாவிட்டாலும், உங்க பேரனையாவது முதுகுக்கு மண் காட்டச் செய்யவேணும். அப்போது தான் உங்க மேலே எனக்கு ஏற்பட்டிருக்கிற வயிற்றெரிச்சல் தீரும். இதை தான் செய்யலேன்னா அம்பலக்காரன் இல்லே!" என்று அன்றைக்கு ஒரு சபதம் செய்திருந்தார் வீரமாணிக்க அம்பலக்காரர்.

அம்பலக்காரரின் இந்தச் சபதம் அவரது நாற்பத்தைந்தாவது வயது வரை நிறைவேற வழி இல்லாமலே போய்விட்டது. காரணம்? ஆணோ, பெண்ணோ, அதுவரை அவருக்குக் குழந்தையே பிறக்கவில்லை. அதற்குள் ஜல்லிக் கட்டு சேர்வை காலமாகி விட்டார். நாற்பத்தைந்து வயதுக்கு மேல் நம்பிக்கை, ஆசையெல்லாம் ஏமாற்றமாக ஒடுங்கிப்போயிருந்த சமயத்தில் அம்பலக்காரருக்கு ஒரு பெண் பிறந்தது. ஏறக்குறைய அதே சமயத்தில் ஜல்லிக்கட்டு சேர்வைக்கு மகன் வழிப் பேரனாக ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது.

"தமக்கும் கடைசிக் காலத்தில் பிறந்தது ஆணாக இருந்திருந்தால் பழைய சபதத்தை நிறைவேற்றுவதற்கு வசதியாக இருந்திருக்குமே? பிறந்தது, பெண்ணாக வாய்த்து விட்டதே?" என்று எண்ணி ஏங்கினார் அம்பலக்காரர்.

ஜல்லிக்கட்டு சேர்வையின் பேரன் சின்ன மருது என்ற பெயரோடு வளர்ந்து வந்தான். வீரமாணிக்க அம்பலக்காரரின் மகள் 'சண்பகம்' என்ற பெயரோடு வளர்ந்து வந்தாள். குழந்தையின் நிறத்தைப் பார்த்துத்தான் அந்தப் பெயரையே வைத்திருந்தார் வீரமாணிக்க அம்பலக்காரர்.

சண்பகம் வளர வளர அவளோடு துடுக்குத் தனமும் குறும்பும் வளர்ந்தன. எப்போ



தும் ஏதாவது விஷமம் செய்து கொண்டே இருப்பான். அசாத்தியமான தைரியம் அவனுக்கு.

அவனுக்கு ஒன்பது வயது நடந்து கொண்டிருந்தது. ஒரு நாள் கையில் மாடு பத்துகிற தார்க்கம்புடன் மல்லிகைப் புதர் அருகில் விளையாடிக் கொண்டிருந்தான். அம்பலக்காரர் அருகே மாட்டுக் கொட்டத்தில் இரவை மாட்டுக்குத் தண்ணீர் காட்டிக் கொண்டிருந்தார். மாட்டுக் கொட்டத்திற்கும் மல்லிகைப் புதருக்கும் இடையே வைக்கோல் படைப்பு ஒன்று மறைத்துக் கொண்டிருந்தது. அம்பலக்காரர் கொட்டத்திலிருந்த எல்லா மாடுகளுக்கும் தண்ணீர் காட்டி விட்டுத் தலைநிமிர்ந்தபோது மாட்டுக் கொட்டத்தின் வாயிலில் குலைநடுங்கும் காட்சியைக் கண்டார்!

குழந்தை சண்பகம் சிரித்துக் கொண்டே இடது கையில் ஒரு பெரிய பாம்பின் வாலைப் பிடித்துத் தலைகீழாகத் தொங்க விட்டபடியே வந்து கொண்டிருந்தான். அவருக்கு உடம்பெங்கும் மெய் சிலிர்த்து விட்டது! கூப்பாடு போடுவதற்குக்கூட வாய் வரவில்லை.

"சண்பகம்! ஐயையோ, அது பாம்பு!"


"பாம்புதான் அப்பா! தார்க்குச்சியாலே அடிச்சுக் கொன்னுட்டேன். செத்துப் போச்சு. உசிர் இல்லே, அப்பா.."

"நிசமாகவா? நீயாகவா அடிச்சுக் கொன்றாய்?"

"நான்தானப்பா! நானேதான் அடிச்சுக் கொன்றேன்."

அம்பலக்காரருக்கு ஆச்சரியம் நிலைகொள்ளவில்லை. அருகில் போய்ப் பார்த்தார். குழந்தை செத்த பாம்பைத்தான் தலைகீழாகப் பிடித்துக் கொண்டிருந்தான். கொஞ்சமாவது ஒரு பயம், ஒரு நடுக்கம் அவனுக்கு இருக்க வேண்டுமே?

சண்பகத்தின் இந்தத் தைரியம் ஒரு சாதாரணமான விஷயமாகத் தோன்றவில்லை



அவருக்கு. எல்லாக் குழந்தைகளுக்கும் இந்தமாதிரி இயற்கையை மீறிய ஒரு துணிச்சல் அமைய முடியாது. பிறவியிலேயே ஏற்பட்ட ஒரு குணமாக இருக்க வேண்டும் இது.

இந்தச் சம்பவம் வீரமாணிக்க அம்பலக்காரருடைய மனத்திலே ஒரு புதிய கிளர்ச்சியை உண்டாக்கி விட்டது. 'ஜல்லிக் கட்டு சேர்வையிடம் போட்ட சபதத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஆண் பிறக்கவில்லையே!' என்ற ஏக்கம் தவிர்ந்தது. 'இந்தக் குட்டி புலிக்குட்டியாகவே இருப்பாள் போலிருக்கிறது! இவளுக்கு மட்டும் சிலம்பக் கழி கற்றுப் பழக்கிக் கொடுத்து விட்டால் இவளே நம்முடைய பந்தயத்தை முடித்து நிச்சயமாக வெற்றியை வாங்கிக் கொடுத்து விடுவாள்!'' என்ற ஓர் உறுதி வீரமாணிக்க அம்பலக்காரர் மனத்தில் துளிர்விட்டது.

மறுநாளே தம்முடைய ஆசையை நிறைவேற்றிக் கொள்ளவும் தொடங்கி விட்டார். ''ஏ! சம்பகம்! இங்கே வா, சொல்கிறேன்! நீ அன்றைக்குத் தார்க்குச்சியாலே பாம்பை அடிச்சே இல்லே! அது மாதிரிக் கம்பு பிடிச்சு அடிக்கிற விளையாட்டு ஒண்ணு இருக்குது! அதைத் தினம் உனக்குச் சொல்லித்தாரேன்...நீ படிச்சிக்கிறியா...?''

''சொல்லிக் கொடு, அப்பா! நல்லாப் படிச்சிக்கிறேன்! அப்படி விளையாட்டுன்னு எனக்கு ரொம்பப் பிடிக்கும்!''

அவர் விளையாட்டும் வினையுமாகச் சண்பகத்துக்குச் சிலம்பக் கழி சுழற்றக் கற்பித்தார். ஒன்பது - பத்து வயதிலே ஆரம்பித்த இந்தப் பயிற்சி நாலைந்து வருஷங்கள் தவறாமல் நடந்தது. கண்ணைக் கவரும் வாளிப்பும், வனப்பும் பெற்றுச் சண்பகம் பருவப் பெண்ணான போது சிலம்ப வித்தையில் அம்பலக்காரரை மிஞ்சி விடுகிற நிலைக்கு வந்து விட்டாள். அவள் தேர்ச்சி அவரையே பிரமித்துப் போகும்படி செய்



தது. எதிரி என்று எவனும் நிற்க முடியாத படி சிலம்ப வித்தை ஆடுவான் அவன்!

ஜல்லிக்கட்டு சேர்வையின் பேரனான சின்ன மருது சேர்வையைத் தம்முடைய மகள் சண்பகத்தால் தோற்கச் செய்து பழைய சபதத்தைத் தீர்த்துக் கொள்ளச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார் வீரமாணிக்க அம்பலக்காரர். வருஷங்கள் கடந்து கொண்டிருந்தன.

இந்தச் சமயத்தில்தான் சின்னமருது சேர்வையும் சிலம்பம், குஸ்தி, மல்யுத்தம் முதலிய வித்தைகளில் மிகவும் தேர்ந்து ஒரு சிலம்பப் பள்ளிக்கூடம் வைத்து நடத்தி வந்தான். ஊரில் அவன் பெயரும் புகழும் பரவி வந்தன.

யாருக்கும் தெரியாமல் திடீரென்று சண்பகத்தைக் கொண்டு அந்தப் பயலை மட்டம் தட்டுவதற்குத் திட்டமிட்டிருந்தார் அம்பலக்காரர். 'வீரமாணிக்கம் அம்பலக்காரருக்குத் தன் வயதில் ஒரு மகள் இருக்கிறாள்' என்ற செய்தி மட்டும்தான் சின்னமருதுவுக்குத் தெரியும். அவள் சிலம்பம் கற்று அதில் தேர்ந்திருக்கிறாள் என்ற விஷயம் அவனுக்குத் தெரியவே தெரியாது.

தை மாதம் வந்தது. பொங்கல் பண்டிகையின் போது ஊரிலுள்ள கன்னிமார் கோவிலின் திருவிழாவும் சிறப்பாக நடப்பது வழக்கம். திருவிழாவில் முக்கிய அம்சம் 'பொங்கல் பந்தயம்' என்ற நிகழ்ச்சி. சிலம்பப் பந்தயம், கல் தூக்குதல், கரும்பு வெட்டுதல் என்று இளைஞர்கள் ஒருவருக்கொருவர் பந்தயம் போட்டு விளையாடுவார்கள்.

திருவிழா தொடங்குவதற்குப் பத்து. இருபது நாட்களுக்கு முன்பே கோவிலை நிர்வாகம் செய்து வரும் பஞ்சாயத்தாருக்கு முன்னால் பந்தயக்காரர்கள் எல்லா விவரங்களையும் சொல்லிச் சத்தியம் செய்து விடுவது வழக்கம். பந்தயத்துக்கு அழைப்பவர், பந்தயத்துக்கு அழைக்கப்படுபவர், பந்தயத் தொகை, நிபந்தனைகள், முதலிய யாவும் பஞ்சாயத்தார் முன் தீர்மானிக்கப்படும். அருமையான இந்த நிகழ்ச்சியைப் பார்ப்பதற்காக அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்து கூட்டம் கூட்டமாக மக்கள் வருவதுண்டு.

எப்போதும் போல அந்த வருடமும் பந்தய விவரங்களைப் பற்றித் தீர்மானிப்பதற்காகப் பண்டிகை வருவதற்கு முன்பே பஞ்சாயத்துக் கூட்டம் கூடி இருந்தது. வரிசையாகப் பலர் பந்தயம் போட்டுச் சத்தியம் செய்தனர்.

கடைசியில் எல்லாம் முடிந்து பஞ்சாயத்து கலையப் போகிற சமயத்தில் வீரமாணிக்க அம்பலக்காரர் எழுந்திருந்து, "கொஞ்சம் பொறுங்கள். இன்னும் ஒரு பந்தயம் இருக்குது" என்றார். கூட்டத்தில் இருந்தவர்கள் வியப்படைந்தனர்.

'அம்பலக்காரர்தான் யாரோடாவது பந்தயம் போடுவார்' என்று அவர் எழுந்திருந்த போது எல்லோரும் நினைத்தனர். அவர் 'என் மகள் சண்பகம்' என்று சொன்னாரோ இல்லையோ, கூட்டம் முழுவதுமே திக்பிரமை பிடித்து விட்டாற்போல் அயர்ந்து விட்டது.

"உம்முடைய மகள் சண்பகமா?..."

"ஆமாம், என் மகளேதான்!"

"இதற்கு முன் இந்தமாதிரி பெண்கள் பந்தயத்தில் வருவதில்லையே? தவிர, 'பந்தயம்' என்றால் சம ஜோடியான திறமை வேண்டும்! சின்னமருது சிலம்பம் முறையாகப் படித்தவன். உம்முடைய மகள்....?"

"என்னுடைய மகள் சிலம்பம் முறையாகப் படிக்க வில்லை என்று நீங்கள் கண்டீர்களா, என்ன?" என்று கேட்டார் அம்பலக்காரர்.

"அதற்கில்லை! ஒரு இளம் பெண்; அதுவும் கலியாணமாகாத கன்னிப் பெண், இந்த மாதிரி காரியத்தில்....?"

"அதைப் பற்றிய கவலை பெண்ணைப் பெற்று வளர்த்த எனக்கல்லவா இருக்க வேண்டும்?"

"என்னப்பா! சின்னமருது.... உனக்கு இந்தப் பந்தயத்திலே இறங்கச் சம்மதந்தானா?" என்று பஞ்சாயத்தார் சின்ன மருதுவை நோக்கிக் கேட்டனர்.

"சம்மதமில்லாட்டா என் மகளுக்குப் பயந்ததாகத்தான் அர்த்தம்!"

அம்பலக்காரர் இப்படிச் சொல்லி விடவே, சின்னமருதுவுக்கு 'ரோஷம்' பொத்துக் கொண்டு வந்து விட்டது.

"அவளை அழ அழச் செய்து சிலம்பக் கழியைக் கீழே போட்டுவிட்டுத் திரும்பிப் பாராமல் ஓடவைக்கலேன்னா, நான் ஜல்லிக்கட்டு சேர்வை பேரன் இல்லை...?"

அரும்பு மீசை துடிதுடிக்கப் பஞ்சாயத்தாரை நோக்கித் தன் சம்மதத்தைத் தெரிவித்தான் சின்னமருது.

"சரி! நீங்கள் இரு கட்சிக்காரர்களுமே இந்தப் பந்தயத்துக்குச் சம்மதிக்கும்போது பஞ்சாயத்தார் எப்படித் தடை செய்ய முடியும்? எங்களுக்குச் சம்மதம்தான். சின்ன மருது! நீ தோற்றால் என்ன பந்தயம்? சீக்கிரம் சொல்லிவிடு!"

"ஒரு பெண்ணை ஜெயிக்க முடியாத என் சிலம்பக் கழியை அம்மனுக்கு முன்னாலே இரண்டாக முறிச்சு எறிஞ்சுட்டு வலது முழங்கையை வெட்டிப் பலி கொடுப்பேன்!" சின்னமருது ஆவேசத்தோடு கூறினான்.

"இறுதியாகக் கேட்கிறோம்! நன்றாக யோசித்துச்சொல். உன் பந்தயம் இதுதானா?"

"சந்தேகமே இல்லை! 'ஜல்லிக்கட்டு' பரம்பரையில் வாய் பிசகினாலும் வார்த்தை பிசக மாட்டோம்...."

"அம்பலக்காரரே! உம்முடைய பெண்ணையும் இதே பந்தயத்துக்கு உட்படுத்த உமக்குச் சம்மதந்தானா? அல்லது பந்தயத்தை விலக்குப் பெற்றுக் கொள்கிறீரா?"

"விலக்குப் பெறுகிற பேச்சே கூடாது' இதே பந்தயத்துக்கு நானும் இணங்குகிறேன்!" அம்பலக்காரரும் சம்மதித்துவிட்டார்.


கூட்டத்தில் கச முசவென்று பேச்சு கிளம்பியது "பாவி! அவன்தான் ஆண்பிள்ளை; இப்படிக் குரூரமாக ஒரு பந்தயம் போட்டான்னு, இந்த அம்பலக்காரனும் ஒரு பெண்ணுக்கு அதே பந்தயத்தை ஏற்றுக்கிடலாமா?"

"ரொம்பப் பயங்கரமான பந்தயமுங்க.."

" அம்மன் புண்ணியத்திலே இந்தப் பந்தயம் நடவாமலே போய் விட்டால் பொங்கல் மங்களமாக முடியும்."

இப்படிப் பலவிதமாகப் பேசிக் கொண்டே கூட்டம் கலைந்தது. பஞ்சாயத்தார் சின்ன மருதுவிடமும், வீரமாணிக்க அம்பலக்காரரிடமும் சத்தியம் வாங்கிக் கொண்டு கூட்டத்தைக் கலைத்து விட்டார்கள்.


உங்கள் விருப்பத்திற்கேற்ற அழகு
உங்கள் சருமத்தை இளமையுடனும், உள்ள துடிப்புடனும், புதுமையோடு கவர்ச்சிகரமாயும் வைத்திருங்கள். இயற்கை எழிலின் மோஹன தோற்றத்தைப் பெறுங்கள் "'ஹாஸலீன்' ஸ்னோ" உங்கள் சருமத்தை குளிர்மையாயும் லாவண்யத்துடனும் வைக்கிறது.
"'HAZELINE' SNOW"
(TRADE MARK)
"'ஹாஸலீன்' ஸ்னோ"
(டிரேட் மார்க்)
பர்ரோஸ வெல்கம் & கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிட்.
பி. ஓ. பாக்ஸ் 290, பம்பாய்



தருமபுர ஆதீன மெய்கண்ட சாத்திரம், சிவபோகசாரம் வெளியீட்டு விழா சென்னை, தியாகராயநகரிலுள்ள தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் 15—1—57 மாலை ராஜாஜி தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. ராஜாஜி தலைமையுரை நிகழ்த்துகிறார்.

அம்பலக்காரர் இராப்பகல் பாராது சண்பகத்துக்குக் கழி சுற்றுவதிலுள்ள சில அபூர்வமான பிடிகளையும் ரகசியச் சுழற்சிகளையும் கற்பித்துக் கொண்டிருந்தார்.

சின்னமருதுவோ, பந்தயத்துக்காகத் தனிப் பயிற்சியோ, முஸ்திபுகளோ எதுவுமே செய்யவில்லை. "எவனுங்க! பழக்கத்துக்கு நாலு சுற்று சுற்றிப் பார்த்துக்கிட்டால்தானே நல்லது.." என்று அவனிடம் சிலம்பம் கற்று வந்த பிள்ளைகள் எச்சரித்தனர். "சரிதான் போங்கடா! ஒரு பெண்பிள்ளையை எதிர்க்கிறத்துக்குப் பிரமாதமாக எண்பது நாள் பழகணுமாக்கும். கம்பை எடுத்து நாலு சுற்றுச் சுற்றினால் மிரண்டு ஓடிப்போய் விடுவாள்.." என்று அலட்சியமாகப் பதில் கூறிவிடுவான் அவன். உண்மையில் சண்பகத்திடம் தனக்குச் சிறிதளவும் குறைவில்லாத வித்தை நிறைந்திருக்கிறது என்பதை அவன் சிறிதேனும் உணரவுமில்லை; மதிக்கவுமில்லை!

பொங்கல் வந்தது. பானையில் ஊற்றிய பால் மட்டுமல்ல, இதயங்களும் பொங்கின. அன்று மாலைதான் அந்தப் பந்தயம். சுற்று வட்டாரத்து மக்களெல்லாம் அன்று அங்கே குழுமி விட்டனர். ஊர் தாங்க முடியாத கூட்டம். கன்னிமார் கோவிலின் முன்புறம் இருந்த திறந்த வெளியில் பந்தயம் நடைபெற ஏற்பாடாகி யிருந்தது.

வீரமாணிக்க அம்பலக்காரர் மகளைப் பஞ்சாயத்தாருக்கு முன்னால் சிலம்பக் கழியும் கையுமாகக் கொண்டு வந்து நிறுத்தினார். சிலம்ப யுத்தத்துக்கு ஏற்றபடி புடவையை ஒரு திறுசாக மராட்டியர்கள் கட்டிக் கொள்ளுகிற மாதிரி கட்டிக் கொண்டிருந்தாள் சண்பகம். கைகளில் பொன்வளையல்கள் மட்டும் அப்படியே இருந்தன. மற்றக் கண்ணாடி வளையல்களை எல்லாம் கழற்றி விட்டிருந்தாள். இறுக முடிந்திருந்த கொண்டையில் கொஞ்சம் மல்லிகைப் பூவும் செருகப்பட்டிருந்தது. சந்திரனுக்குத் திருஷ்டி கழித்த மாதிரி அந்த எடுப்பான முகத்தில் குங்குமப் பொட்டு. கூட்டத்தைக் கண்டு சிறிதும் மிரண்டு துவளாத பார்வை. அலட்சியமாகச் சுழலும் கயல் விழிகள். பூப்போன்ற கையில் வன்மையான சிலம்பக் கழியைப் பிடித்தவாறு கூச்சம் குழைவில்லாது நின்று கொண்டிருந்தாள்.

சிஷ்யப் பிள்ளைகளின் ஆரவாரத்தோடு சின்னமருதுவும் சிலம்பக் கழியோடு வந்து நின்றான். தார்ப்பாய்ச்சிக் கட்டிக் கொண்டிருந்த அரை வேஷ்டி; திறந்த மார்பு. அள்ளிச் செருகி முடிந்த குடுமி. மத்தளத்தின் உடல் போலப் பருத்த வலது கையில் சிலம்பக் கழி; இத்தகைய எளிய தோற்றத்தோடு கம்பீரமாக நின்றான். கூட்டத்திலிருந்த அத்தனை பேருடைய விழிகளும் இந்த இருவர் மேல்தான் நிலைத்திருந்தன. வீரமாணிக்க அம்பலக்காரருக்கு வயது வந்த மகள் ஒருத்தி உண்டு என்பதுதான் சின்னமருதுவுக்குத் தெரியுமே ஒழிய, அவள் இவ்வளவு சிறந்த அழகியாக இருப்பாள் என்று தெரியாது; தெரிந்து கொண்டிருக்கவும் நியாயமில்லை. ஆளை மயக்கும் அழகிய விழிகள் படைத்த மங்கையை விழியோரத்துப் பார்வையினால் ஏற இறங்க ஒரு முறை திருட்டுத் தனமாகப்பார்த்துக் கொண்டான்அவன்.

அவளைப் போல அவன் திருட்டுத்தனமாகக் கூடப் பார்க்கவில்லை. நேருக்கு நேரே தயக்கமில்லாத விழிகளால் அலட்சிய தவழ அவனைப் பார்த்தாள். பெண்ணின் அலட்சியப் பார்வையும் அதற்கு முன் சின்னமருது தலை சாய்ப்பதும் கண்டு அம்பலக்காரரது மனத்தில் பெருமிதம் பொங்கிற்று.

பஞ்சாயத்தார் 'கழியைச் சுழற்றலாம்' என்பதற்கு அறிகுறியாக இருவருக்கும் ஜாடை காட்டினர்.

"பட்! பட்! பட்! டப்; டப! பட்! பட" இருவர் கழிகளும் சுழன்றன. சண்பகத்தின் கைகளில் சிலம்பக் கழி சுழலுகிற விதத்தைப் பார்த்த போது கூட்டத்தில் இருந்தவர்கள் மட்டுமில்லை; சின்னமருதுவே திகைத்துப் போய் விட்டான். ஒரு கற்றுக்குட்டிப் பெண் கோணல் மாணலாக விளையாடுகிற மாதிரி இல்லை அது! அவனைப் போலவே கைதேர்ந்த பயில்வான் ஒருவன் எதிர் நின்று விளையாடுகிற மாதிரி இருந்தது. அவனுக்கு அது ஒரு எதிர் பாராத அதிர்ச்சி. மற்றொரு அதிர்ச்சி, வேகமாகக் கையை ஓங்கும் ஒவ்வொரு முறையும் சண்பகத்தின் அழகிய முகத்தைப் பார்த்துப் பார்த்துக் கை தயங்குகிற மாதிரி ஒருகூச்சம்! எவ்வளவோ மனத்தைத் திடப்படுத்திக் கொள்ள முயன்றும் அவனால் முடியவில்லை. நடந்து போகிற வழியில், காலில் மிதிபடு

ஜிருற் போல ஒரு புத்தம் புது ரோஜாப்பூ கிடந்தால் அதை மிதிக்கத் தயங்கி ஒதுங்குமே கால். அந்த மாதிரிக் கூச்சம் இது.

எண்ணங்கள் வழி தவறிவிட்டால் உணர்வுகள் பிசகுவதை யாரால்தான் தடுக்க முடியும்? பூரித்து நிற்கும் பெண்மையின் யௌவன சௌந்தரியம் அவனுடைய ஒரு மனத்தைக் கிறங்க அடித்தது. அவனுடைய வீரம் அவனுடைய மற்றோர் மனத்தைத் திகைக்க வைத்தது. மனம் மட்டும் இல்லை; கைகளும் மெல்ல ஒய்ந்து விட்டன அவனுக்கு.

கடைசியாக அவன் தன் மனத்தில் எஞ்சியிருந்த துணிவை யெல்லாம் ஒன்று கூட்டிச் சிலம்பக் கழியை மேலே உயர்த்தினான்! மேலே அடுக்கடுக்காய்க் கட்டியிருந்த வேப்பிலைத் தோரணங்களுக்கிடையில் நன்றாகச் சிக்கிக் கொண்டு விட்டது அவன் சிலம்பக் கழி. இது அவன் முற்றும் எதிர்பாராத பேரதிர்ச்சியாக அமைந்து விட்டது.

கரகோஷம் திசை முகடுகளை அதிரச் செய்தது. சிலம்பத்தில் வீராதிவீரனாக இருந்த அவனைக் கேவலம் ஒரு பெண் பிள்ளை முதுகுக்கு மண் காட்டிவிட்டாள்! பஞ்சாயத்தார், ''வீரமாணிக்க அம்பலக்காரர் மகள் சண்பகம் சிலம்பப் போட்டியில் வெற்றி பெற்றாள்'' என்று அறிவித்தனர்.

சின்னமருது ஆத்திரத்தோடு சிலம்பக் கழியை மேலே இருந்து உருவி 'மளுக்'கென்று இரண்டாக முறித்துப் போட்டான். பந்தய நிபந்தனைப்படி வலது முழங்கையை நீட்டி இடது முழங்கையால் அரிவாளைப் பிடித்துக் கொண்டு வெட்டுவதற்காக ஓங்கினான். கூட்டத்தில் பஞ்சாயத்தார் உள்பட எல்லோரும் அந்தக் கோரத்தைப் பார்க்கச் சகிக்காமல் கண்ணை மூடிக் கொண்டனர்.

அரிவாளோடு ஓங்கிய இடது கை வலது முழங் கையை நோக்கிப் பாய்வதற்கு முன் பூப்போல ஒரு கரம் பின்புறமிருந்து அவன் இடக்கையைப் பற்றியது. சின்னமருது ஆத்திரத்தோடு திரும்பிப் பார்த்தான். அந்தப் பெண் புலி சண்பகம் கண்களில் நீர் துளிக்க நின்று கொண்டிருந்தாள்!

''வேண்டாம்..''

''என் பந்தயத்தை நான் அம்மனுக்கு முன்னாலே கட்டறேன்! நீ யார் வேண்டாம் என்று கூறுவதற்கு?''

''நான் உங்களை வென்றதாக நினைத்துக் கொண்டதால் தானே இப்படிச் செய்கிறீர்கள்? இன்று நானே இதில் தோற்று விட்டதாக நினைத்துக் கொள்கிறேன். நீங்களும் அப்படியே நினைத்துக் கொள்ளுங்கள்..''

உடல் முழுவதும் ஒரு சிலிர்ப்புச் சிலிர்த்தது அவனுக்கு. மலர மலர விழித்துக் கொண்டே அவளைப் பார்த்தான் அவன். அவள் அவனைப் பார்த்தாள். அந்தக் கண்கள் அத்தனை ஆயிரம் மக்களுக்கு நடுவே என்னதான் ரகசியம் பேசிக் கொண்டனவோ?

விஷயம் அநேகமாகப் பஞ்சாயத்தாருக்கும் புரிந்து விட்டது. அம்பலக்காரருக்கும் புரிந்து விட்டது. எல்லோருக்குமே ஆச்சரியத்தை உண்டாக்கியது அந்த அதிசயமான கூட்டுறவு. எல்லோருமாகக் கலந்து பேசிச் சின்னமருது தனது கையைத் தானே வெட்டிக் கொள்வதற்குப் பதிலாக வேறோர் நிபந்தனையைக் கண்டு பிடித்தனர்.

நிபந்தனை இதுதான்:—சின்ன மருதுவின் வலது கையில் கரும்பை வைத்து வெட்ட வேண்டியது. கரும்பு மட்டும் வெட்டுப்படும்படியாகவும் கையில் துளியும் காயமே படாமலும் வெட்டுவதில் வல்லவனான ஒருவனைக் கண்ணைக் கட்டி வெட்டச் சொல்ல வேண்டியது. கரும்பின்மேல் கத்தி விழும்பொழுது சின்னமருது கையை வேகமாகப் பின்னுக்கு இழுத்துக் கொண்டுவிட வேண்டும். அப்படிச் செய்தால் கரும்பு மட்டும் இரண்டு துண்டமாகக் கீழே விழும். கை பிழைத்துவிடும். வெட்டுபவனுடைய கண்களை மூடுவது எதற்காக என்றால் அம்மன் விருப்பம்போல் அவன் வெட்டு விழட்டும் என்பதற்காகத்தான். அம்மன் கரும்பை மட்டும் வெட்டிவிட்டுக் கையை விடக் கருதுகிறாளா? அல்லது தன் காணிக் கையைக் குறைவில்லாமல் பூரணமாகவே வாங்கிக் கொள்ள விரும்புகின்றாளா என்று அறிய வேண்டிய சத்திய சோதனைக்காகவே இந்தக் கண்கட்டு வித்தை!

கரும்பு வெட்டுபவன் துணியால் கட்டப்பட்ட கண்களோடு அரிவாளை ஓங்கினான். சின்னமருதுவின் வலது முழங்கையில் இரண்டு பெரிய செங்கரும்புக் கணுக்கள் இருந்தன. அவனுக்கு எதிரே சண்பகம் அவனையே பார்த்துக்கொண்டு நின்றாள். அவன் பார்வையும் சண்பகத்தின் அழகில் லயித்தது. கையைப் பின்னுக்கு இழுக்க வேண்டியதை அவன் மறந்துவிட்டான். ''ஆ, ஐயோ! அப்பா..'' அரிவாள் கையில் இறங்கி விட்டது. சண்பகம் அலறினாள். அவன் வலது கையை இழந்த முடவனானான். அம்பலக்காரர் எவ்வளவோ மறுத்தும் கேட்காமல் தன் அழகு, தன் வாழ்வு எல்லாவற்றையும் அந்த நொண்டியிடமே ஒப்படைத்தாள் சண்பகம். சின்ன மருதுவைத் தன் நாயகனாக ஊரறிய உலகமறிய ஏற்றுக் கொண்டு விட்டாள் அவள். அவளுடைய அந்தத் தியாகத்தைக் கண்டு ஊரே பிரமித்தது.

சிலம்பக் கழிச் சண்டையில் வெற்றி தோல்வி எந்த எந்தப் பக்கம் ஆனால் என்ன? எப்படி ஆனால் என்ன? வாழ்க்கைப் பந்தயத்தில் இருவருமே வென்று விட்டார்கள். இருவருமே தோற்று, இருவருமே வெல்லக் கூடிய பந்தயம், ஒன்று இந்த உலகத்தில் இருக்கிறது! அதில் வென்றவர்களை விடத் தோற்றவர்களுக்கே அதிக இன்பம். அது தான் காதல் பந்தயம். சிலம்பத்தில் தோற்று நொண்டியாகப் போன சின்ன மருது இந்தக் காதல் பந்தயத்தில் அமோகமான வெற்றி பெற்று விட்டான். சண்பகம் மட்டுமென்ன? அவள் தானே இந்தப் 'புது தினுசான' பந்தயத்தைக் கண்டு பிடித்தவள்?

திருவடியாபிள்ளை கதையை முடித்தார். அதோடு அவர் கட்டிக் காட்டிய திசையில் திரும்பிப் பார்த்தேன். வயதான ஆண்பிள்ளை ஒருவன் இடது கையில் மண் வெட்டியோடு செல்ல அவனுக்குப் பின் கஞ்சிக் கலயத்தோடு தலைநரைத்த பெண் ஒருத்தியும் சென்றாள். மண் வெட்டியோடு போனவனுக்கு வலது முழங்கை இல்லை! அவன்தான் சின்ன மருது!

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

